

முத்தையேந்திரர்

# குறவஞ்சி


பதிப்பாசிரியர் :

முனைவர். சு. சௌந்தரபாண்டியன், எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி

பொதுப்பதிப்பாசிரியர் :

நடன. காசிநாதன், எம்.ஏ.

அ.கீ.சு. நூலக வெளியீடு : 409
தமிழ் நூல் வெளியீடு : 113

## முத்தையேந்திரர்

# குறவஞ்சி நாடகம்

பதிப்பாசிரியர்
முனைவர். சு. சௌந்தரபாண்டியன்
காப்பாட்சியர்
அரசினர் கீழ்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை - 600 005.

பொதுப் பதிப்பாசிரியர்
நடன. காசிநாதன், எம்.ஏ.,
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை - 600 113.

அ.கீ.சு. நூலகம்

விலை : ரூ. 49/-

# முத்தையேந்திரர் குறவஞ்சி நாடகம்

## பதிப்புரை

இக் குறவஞ்சி இலக்கியம் இதுவரை அச்சில் வெளிவராதது.

இதன் ஆசிரியர் மாம்பழக் கவிச்சிங்க நாவலர்.

இக் குறவஞ்சியின் காலம் கி.பி.19 ஆம் நூற்றாண்டு.

கடலூர் (திருச்சி மாவட்டம், மணப்பாறைத் தாலுகா) என்ற ஊரிலிருந்த சமீன்தார் முத்தையேந்திரர் என்பார் மீது யாக்கப்பெற்ற அரிய குறவஞ்கி நாடகம் இது.

எனவே, குறவஞ்சி எனும் இசைநாடக நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் இன்றியமையாத இடத்தை வகிக்கிறது இக் குறவஞ்சி இலக்கியம்.

இந்நூல் அ.சீ.சு. நூலகத்தில் ஓலைக்சுவடியாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது (எண். ஆர். 6224). ஓலைச்சுவடி மிகவும் பழுதுபட்டு உள்ளது. மேலும் ஆங்காங்கே துளைகள் பட்டும் உளது. படி எடுத்தவர், பல பிழைகளைச் செய்துள்ளார். ஒப்பு நோக்க வேறு ஓலைச்சுவடி இன்மையாலும், இப்பொழுதே மிகவும் பழுதுவிட்டு இருப்பதாலும்,

நூலின் இறுதிப் பகுதியும். இடையிடையே சிற்சில பகுதிகளும் இல்லாதபோழ்தும் இவண் பதிப்பாக்கப் படுகிறது. இல்லையேல். இந்த அளவு நூல்தானும் தமிழுக்குக் கிட்டாது போய்விடும். நூலைப் படிப்பார் இதன் உண்மையை உணர்வர்.

முன்பு குறிப்பிட்ட, கடலூர் சமீன்தாரான முத்தையேந்திரரின் தந்தை பெயர் முத்துமங்கைய முத்தையசாமி.

கடலூருக்கே மளசை என்றும் பெயர். கருணைகிரி என்பது இவ்வூர் மலை. எனவே, பாட்டுத்தலைவனாகிய சமீன்தார் கருணைகிரி முத்தையேந்திரர் என்று பாடப்படுகிறார்.

திருச்சி மாவட்டத்தில், மருங்காபுரிச் சமீனுக்கு அடுத்த சமீன் கடலூர்ச் சமீன்.

பாட்டுத் தலைவனாகிய முத்தையேந்திரர், கம்பளச் சமீன்தார் ஆவார், கம்பளத்தார் பிரிவிலும். கரிவார் குலம் என்ற உட்பிரிவைச் சார்ந்தவர் ஆவார்.

கம்பளத்து நாயக்கர்களில், கொல்லவார், சில்லவார், தோக்கலவார், மேகலவார், மித்தில்லவார் என்ற சில பிரிவுகள் உள்ளன. அவர்கள் மேய்த்த கால்நடைகளை வைத்து அப்படிப்பட்ட பிரிவுகள் ஏற்பட்டன.

பொதுவாகத் தமிழில் குறவஞ்சிக்கு ஓர் இன்றியமையாத இடம் உண்டு. இவை நாடகமாக இருப்பதே குறவஞ்சியின் நிலைப்பாட்டுக்குக் காரணமாகும். தமிழும் இசையும் இரண்டறக்கலந்த செல்வமாகும். பண்ணார் தமிழ், தமிழோடு இசை என்றெல்லாம் சொல்லச் சொல்லி மகிழ்ந்தவர்கள் தேவார ஆசிரியர்கள் ! அப்படிப்பட்ட தமிழ் இசைக்குப் பெரியதோர் சான்று இக்குறவஞ்சி நாடகம்.

இம் முத்தேயேந்திரர் குறவஞ்கி ஓலைச் சுவடியிலேயே இராக, தாளப் பெயர்கள், ஒவ்வொரு தருவுக்கும், பொறிக்கப்பட்டுள்ளன.

கீழ்வருமாறு சில இராகங்களின் பெயர்கள் இவ்வோலைச் சுவடியில் தரப்பட்டுள்ளன.

| தற்போதைய பெயர் | ஓலையில் உள்ளது |
|---|---|
| **செஞ்சுருட்டி** | **செஞ்சூட்டி** |
| **சௌராஷ்டிரம்** | **சவுராஷ்டகம்** |
| **மத்யமாவதி** | **மத்திமாவதி** |

மாம்பழக்கவிச்சிங்க நாவலர் இயற்றிய இக் கருணைகிரி முத்தையேந்திரர் குறவஞ்சியில் தந்த இன்பம் பொங்கும் பாடல்கள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன !

இக்குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவனாகிய முத்தையேந்திரர் பாண்டியன் என்று குறிக்கப்படுகிறான்.

மேலும், கம்பள குலத்தாரின் குலதெய்வங்கள் என்று பொம்மதேவி, சக்காலதேவி, முத்தாலம்மை ஆகியோர் பரவப்படுகின்றனர்.

கடலூர்ச் சமீனைச் சுற்றியுள்ள நில, மலைப் பகுதிகள், கடலூரில் உள்ள பண்டைய, வயற்பகுதிகள் போன்ற அவற்றை நிலவியல் **(Geography)** செய்திகளை அள்ளித்தரும் அரிய கருவூலமாக இக் குறவஞ்கி நாடகம் மிளிர்கிறது.

இதுவரை நாம் கண்ட குறவஞ்சி இலக்கிய நோக்கினும், ஒரு புதிய பார்வையைக் குறவஞ்கி இலக்கியங்கள் மீது செலுத்தல் வேண்டும். அதுவே, மானிடவியல் நோக்கு **(Anthropological outlook)**.

# மானிடவியல் நோக்கு

தமிழ்க் குறவஞ்சி இலக்கியத்தை மானிடவியல் நோக்கில் வருமாறு ஆயலாம்.

மலைவாழ் குறவர் இனப் பெண்களுக்குக் குடும்பப் கெண்கள் ஆதரவளிப்பதும். தன் காதல் கைகூடுமா எனக் கேட்பதும், குறப்பெண் உணவளிக்குமாறு கோருவதும், குறத்தியானவள் தன் நாட்டு வளத்தை, நகர்வளத்தை விரிவாகக் கூறுவதும் ஆழ்ந்து ஆயத்தக்கன. ஆழ்ந்ததோர் மானிடவியல் தத்துவம் இவற்றில் சார்ந்துள்ளது.

அஃதாவது, மலையில் வாழ்ந்த பழந்தமிழ்ச் சமுதாயப்பிரிவு நாகரிகம் பெற்று, ஓரிடத்து வாழத் தொடங்கினாலும், அந்தப் பழைய பழக்கம் காரணமாக, மலைவாழ் இனப் பெண்ணான குறத்திக்கு மதிப்பளிக்க நினைக்கின்றது எனலாம். அதே பழையநாள் பழக்கம் காரணமாகவே, அந்த மலைவாழ் குறத்தி யார், எவர் என்று விசாரிக்கப்படுகிறது. அதே பழைய நினைவு காரணமாகவே அந்தக் குறத்தியும் ஓர் உரிமையோடு கஞ்சிவார்க்குமாறு இல்லத்துப் பெண்ணை வேண்டுகிறாள். இவ்வாறுள்ள இனத் தொடர்பு காரணமாகவே குறத்தியை ஆடச்சொல்லி மகிழும் போக்கும் காணப்படுகிறது. இன்றும் மேடைகளில்கூட குறவன் குறத்தி நடனம் வரவேற்கப்படுவதற்கு இதுவே அடிப்படை. இந்த அடிப்படை காரணமாகவே குறவர் பெயரைக் குறிபிட்டு ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்ளும் போக்கும் ஏற்பட்டது என மதிப்பிட இடமுண்டு.

## மேடை நாடகம்

தமிழ் மேடை நாடகமாக இன்புறத்தக்கது இக்குறவஞ்கி நாடகம்.

கட்டியங்காரன், குறத்தி, குறவன் நூவன் ஆகியோர் இந்நாடகப் பாத்திரங்கள்.

கடலூர்ச் சமீன்தார் மற்றும் அவரது தந்தையார், சமீன்தாருக்கு வரி செலுத்துவோர் என்று பலர் இக்குறவஞ்சியில் குறிப்பிடப்படுவதால் அவர் களையும் பாத்திரங்களாக ஆக்கலாம்.

## உயிர்வாழினங்கள்

இக்குறவஞ்சியில் குறிப்பிடப்படும் பறவைகளும், மீன்களும் சொல்லில் அடங்காதவை, தமிழக நிலத்தின் செல்வத்தைக் குறவஞ்சி நூல் அள்ளிக் காட்டுகிறது என்றே சொல்லவேண்டும். இயற்கையோடு அயைந்த வாழ்வு வாழ்ந்த நம் தமிழர்கள் வாழ்வில் உயிர்வாழினங்களும் பின்னிப்பிணைந்து வாழ்ந்துள்ளன என்பதற்குக் குறவஞ்கி நூலே சான்று !

## மாம்பழக்கவி வரலாறு

மாம்பழக்கவிச்சிங்க நாவலர் (1836-1884) பழனியில் (மதுரை மாவட்டம்) பிறந்தவர்.

தாயார் பெயர். அம்மணிஅம்மாள்; தந்தை பெயர் முத்தைய ஆச்சாரி.

தமது மூன்றாவது வயதிலேயே கண் பார்வை இழந்தவர். கண்பார்வை இழந்த நிலையிலேயே இவர் கவிஞராக உருவாகியுள்ளார் என்பது அறியத்தக்கது.

இவர் வடமொழியும் கற்ற புலவர்.

இவரது குலம் விசுவகர்ம குலம்.

பாப்பம்பட்டி எனும் ஊரினராகிய வேங்கடசாமி நாயக்கர் மீது வேட்டைப் புகழ்ச்சி, புலிப் பவனி முதலிய நூற்களையும், தனிப்பாக்களையும் பாடிப் பரிசில் பெற்றவர்.

இவரது 27ஆம் வயதில் இவருக்குத் திருமணமானது.

இராமநாதபுரம் முத்துராமலிங்க பூபதி மீது பல பாக்கள் பாடியுள்ளார்.

**கீழ்வரும் நூற்கள் மாம்பழக்கவி இயற்றியவையே :**

| | |
|---|---|
| 1. விநாயகமூர்த்தி பதிகம் | 2. பழனிப் பதிகம் |
| 3. குமரகுரு பதிகம் | 4. சிவகிரிப் பதிகம் |
| 5. திரச்செந்திற் பதிகம் | 6. பழநி நான்மணிமாலை |
| 7. திருப்பழனி மாலை | 8. திருப்பழனி வெண்பா |
| 9. பழனாபுரி மாலை | 10. குமரனந்தாதி |
| 11. சிவகிரியமக அந்தாதி | 12. ஆனந்த கீதரசம் |
| 13. சரஸ்வதியம்மன் பஞ்சரத்தினம் | 14. சந்தப் புகழ் |
| 15. பழனி வெண்பா அந்தாதி | 16. பழனிக்கோயில் விண்ணப்பம் |

17. தயாநிதிக் கண்ணிகள்
18. துதிப்பாசுரத் தொகை
19. திருவருட் சமுக விலாசத் துதித்தமிழ்
20. சுரஜதி
21. திருவோலக்கச் சிறப்பு
22. சிங்கார ரசமஞ்சரி
23. சந்திரவிலாசச் சிறப்புப் பாயிரம்
24. சந்திர விலாசம்
25. தனிச்செய்யுட் கோவை சீட்டுக் கவித் திரட்டுடன்
26. தங்கப்பாட்டுகள்.

மேற்படி நூற்கள்யாவையும் 1908இல் ஒரே பிரபந்தத்திரட்டாக எம்.பி. பழனிச்சாமி ஆச்சாரி அவர்களால் வெளியிடப்பட்டன. எம்.பி.பழனிச்சாமி ஆச்சாரி அவர்கள், மதுரை மாவட்டம், பெரியகுளம் தாலுகாவைச் சேர்ந்த மார்க்கயன் கோட்டை எனும் ஊரில் வாழ்ந்த பிச்சாண்டி ஆச்சாரி அவர்களின் மகனாவார்.

தேவாங்கபுராணம், மாம்பழக்கவிச் சிங்கர் இயற்றியதே.

மாம்பழக்கவிச்சிங்கர், இராமநாதபுரம் சமஸ்தான மன்னர் முத்துராமலிங்க சேதுபதி, வேளுக்குறிச்சி ஜமீன்தார் வேலப்பக் கவுண்டர், திருச் செங்கோடு தாசில்தார் மானுவேல் துரை, மருங்காபுரி ஜமீன்தார் ரங்ககிருஷ்ண முத்துவீரப்ப பூச்சயதுரை, மருங்கை நகர் மிட்டாதார் சின்ன கிருஷ்ணம நாயக்கர், ஆய்க்குடி ஜமீன் மானேஜர் முடையங்கோட்டை ஜமீன்தார், உடுமலைப் பேட்டை பஞ்சப்ரம்ஹ சந்ததியார், இராமபட்டணம் ஜமீன்தார் நந்தகோபால துரை, குமாரமங்கலம் சுப்பராயபிள்ளை, அம்பாசமுத்திரம் சுப்பராய முதலியார், சேலம்

மாவட்டத்து முத்தபுரி ஜமீன்தாரினி, பாப்பன்பட்டி மிட்டாதார் வெங்கடசாமி நாயக்கர், சிவகங்கைச் சமஸ்தானத்து மகாராணி, போடிநாயக்கனூர் ஜமீன்தார் காமராஜ பாண்டியன், வண்ட பொம்மைய நாயக்கர், பாகற்பட்டி மிட்டாதார் ரங்கசாமி பிள்ளை, கன்னிவாடி ஜமீன் குமரமலையாண்டியப்பைய துரை, கடவூர் ஜமீன்தார் கருணைகிரி முத்தையதுரை, போடி ஜமீன்தார் வங்காரு திருமலைப் போடய துரை முதலிய பலர் மீது தனிப்பாசுரமும், சிறு நூற்களும் இயற்றியுள்ளார்.

மாம்பழக்கவிச்சிங்கம் பயணம் சென்ற ஊர்களில், சில

| | | | |
|---|---|---|---|
| 1. | சென்னை | 6. | கோயமுத்தூர் |
| 2. | திருநெல்வேலி | 7. | மதுரை |
| 3. | இராமநாதபுரம் | 8. | சிவகங்கை (பசு.முத்.மா) |
| 4. | தஞ்சை | 9. | தேவகோட்டை |
| 5. | சேலம் | | |

கவிச்சிங்கம் என்ற பட்டத்தை இவருக்குத் தந்தவர் பொன்னுச்சாமித் தேவர் ஆவார்.

இத்தகு மாப்புலவர் திலகம் படைத்த இக்குறவஞ்சி நூலைத் தமிழுலகு வரவேற்குமென நம்பலாம்.

அன்பன்

முனைவர். **சு. சௌந்தரபாண்டியன்**

எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ. (ஆங்கிலம்),
பி.எட். டிப்.வ.மொ. பி.எச்.டி.
காப்பாட்சியர்
அ.கீ.சு. நூலகம்
சென்னை - 5.

## Rhythm of Gypsy Dance.....

The study of kuravanji is nothing but the study of kuravar community which was an encient community on the Tamil soil.

Lord Muruga Married none other than a kurava girl, valli. Narada informed Muruga about the beauty of Valli when Muruga was residing on the hill Thiruthani.

In all Kuruvanjis generally. the gypsy girl recounts about the residence namely hill. In so doing, we are given names of many hills. All these should he viewed Anthoroplogically.

In Silappythi karam we have `Kundrak Kuravai' which is nothing but kuravas' dance.

On the bank of Periyaru, Elengovadigal's elder brother Senguttuvan was given some gifts by hillock people.

'Ahaival mahal' in sangam refers to gypsy girl. So in a way we have origin of this 'Kuravanji` given in sangam age.

The so called kuravas apart from their hunting of fox, rabbit etc, were well uersed in chain making with chorals, stones, etc though in a rustic way. This phenomenon should be

closely studied for a new caste due to this handcraft may have emerged in those days though we are unable to find that particular community.

In this way, kuravanji genre is a mine for researches.

I must thank Thiru. Natana. Kasinathan M.A., Director, Department of Archaeology, Chennai 113 for his help to convert the manuscript into book.

**Dr. S. Soundarapandian**
M.A, M.A, B.Ed., Dip. Skt. Ph.D.
Curator, G.O.M.L., Chennai - 5.

# ஆறு பருவங்கள் !

முனைவர். *சு. சௌந்தரபாண்டியன்*

பழங்காலத் தமிழ்நாட்டு மக்களிடையே ஆறுபருவங்கள் பற்றிய தெளிவான அறிவு இருந்தது.

பழந்தமிழ்ச் சங்க இலக்கியப் புலவர்கள் இந்த ஆறு பருவங்களைத் தம் நூற்களில் ஆங்காங்கே பாடியுள்ளனர். இந்த ஆறு பருவங்கள் எவை என்பதனையும், அவை எந்தெந்த மாதங்களில் வருபவை என்பதையும் கீழ்வருமாறு விளக்கலாம் :

1. சித்திரை, வைகாசி (ஏப்ரம் - மே) - இளவேனில் (கடும் வெயில்)

2. ஆனி, ஆடி (ஜூன் - ஜூலை) - முதுவேனில் (வெயில்)

3. ஆவணி, புரட்டாசி (ஆகஸ்டு - செப்டம்பர்) - கார்காலம் (மழை)

4. ஐப்பசி, கார்த்திகை (ஆகஸ்டு - நவம்பர்) - கூதிர்காலம் (அடைமழை)

5. மார்கழி, தை (டிசம்பர் - ஜனவரி) - முன்பனி (பனி)

6. மாசி, பங்குனி (பிப்ரவரி - மார்ச்) - பின் பனி (பனி)

மேலே கண்ட ஆறு பருவங்களையும் இவ்வளவு தெளிவாகவும், துல்லியமாகவும் கணக்கிட்டுப் பிரித்த நம் பண்டைத் தமிழ் மக்கள் அறிவியல் பெற்ற மக்களல்லவா?

மேற்கத்திய நாட்டார், பருவங்களை நான்காகப் பகுத்தனர் :

| | | |
|---|---|---|
| Spring | - | இளவேனில் |
| Summar | - | கோடை (முதுவேனில்) |
| Autumn | - | கூதிர்காலம் |
| Winter | - | பனிக்காலம் |

இதிலிருந்து, மேனாட்டார் பகுப்புகளை விடவும், தமிழ் மக்களின் பகுப்பு நுணுக்கமானது என்பது தெரிகிறதல்லவா?

பழைய சம்ஸ்கிருத நூற்களிலும், முன் சொன்ன ஆறு வகைப் பகுப்புகளே எழுதப்பட்டுள்ளன. அவை :

| சம்ஸ்கிருதம் | தமிழ் |
|---|---|
| 1. வசந்த ருது | இளவேனில் |
| 2. கிரீஷ்ம ருது | முதுவேனில் |
| 3. வர்ஷ ருது | கார் |
| 4. சரத் ருது | கூதிர் |
| 5. ஹேமந்த ருது | முன்பனி |
| 6. சிசிர ருது | பின்பனி |

இப்படிப்பட்ட பருவங்கள் மாறிமாறி வருவதற்கு என்ன காரணம்?

சூரியன் நடுவாக உள்ளது. அச்சூரியனைப் பூமி சுற்றுகிறது. பூமியானது, சூரியனைச் சுற்றி வரும்போது, ஒரு குறிப்பிட்ட மாதத்தில், பூமத்திய ரேகைக்குச் (Equator) செங்குத்தாகச் சூரியக் கதிர்கள் பூமியைத் தாக்கும் நிலை ஏற்படுகிறது. பிறகு, அடுத்த குறிப்பிட்ட மாதத்தில், பூமியில் உள்ள மகர இரேகையில் சூரியக் கதிர்கள் செங்குத்தாகத் தாக்குகின்றன. மூன்றாவதாக அடுத்த குறிப்பிட்ட வேறொரு மாதத்தில், பூமியில் உள்ள பூமத்திய ரேகையின் மீது, சூரியக் கதிர்கள் செங்குத்தாகத் தாக்குகின்றன நான்காவதாக, பூமியின் மீதுள்ள கடக இரேகையில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் தாக்குகின்றன.

இந்த நான்கு நிலைகளும், பூமியானது சூரியனைச் சுற்றி வருவதால் ஏற்படுகிறது.

இந்த நான்கு வகையான சூரியத் தாக்குதல்கள்தாம் முக்கியப் பருவ மாற்றங்களை உலகில் ஏற்படுத்துகிறது.

இந்த நான்கு வகையான சூரியக் கதிர்களின் செங்குத்துக் தாக்கங்கள் பூமியின் மீது ஏற்படாவிட்டால், இப்போது நாம் காணும் பருவமாற்றம் (Change of Seasons) எதுவும் நடைபெறாது.

சூரியனின் வெம்மையான கதிர்களால், பூமியின் பரப்பானது சூடடைந்து, அப்பகுதிக் காற்றானது விரிவடைய, அங்கே அழுத்தம் குறைகிறது. இதனால் அழுத்தம் அதிகமாக உள்ள வேறு இடக் காற்று

அங்கே வீசத் தொடங்குகிறது. ஓரிடத்துக் காற்று இன்னோர் இடத்துக்குப் போகும்போது, எங்கிருந்து அது வருகிறதோ அங்குள்ள நீர் முதலியவற்றை அது கொண்டுவரும் !

எனவே, ஆறு வகையான பருவ மாற்றங்களும் இவ்வாறு சூரியனின் கதிர்கள், பூமத்திய, கடக, மகர இரேகைகளின் மீது செங்குத்தாகத் தாக்குவதால்தான் ஏற்படுகின்றன என்று அறியவரும் போது நம்முடைய இவ்வுலக வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் சக்தி சூரியன் போன்ற கோள்களிடமும் உள்ளன என்ற உண்மையையும் தெரிந்து வியப்படைகிறோம் !

# Time Measurement in India 1700 years ago

**Dr. S. Soundarapandian**
M.A., M.A., B.Ed., Dip. Skt., Ph.D.,
Curator
**Govt. Oriental Manuscripts Library**
University Library Building
Chennai - 5.

Nedunalvaadai is the Tamil Sangam literary piece authored by Nakkirar. It's date goos back, at the minimum, to 3rd Century A.D.

Two invaluable references are imbibed in it in regard to time measurement.

The first note says that the maids in the palace come to know that it was evening by the blossom of the buds of picchi flowers (a variety of Jasmine)

The text may be translated as :

**"On elegant maids' plate of flowers**
**Picchi buds executed the sweet fragrance !**
**When buds blossomod gently**
**Came to know evening rightly ! "**

(Nedu. 39-41)

Nature never fails. So their method of identifying evening time was clever and authentic, if not specific.

More scientific method is observed in the second reference.

The lines in the text can be put as :

**"The rays from the sun around**
**Feil on the sticks on ground !**
**The shadows of the sticks upright**
**Fell inside bottom, told time right !"**

(Nedu. 73-75)

The technique adopted is, at a particular time, when the shadows of two vertical sticks below sun do not fall outside the bottom and also if the shadows remain for an unusually longer time as such, then the vastu masters would start building of the palace.

We can simplify this in the following diagram :



This is nothing but a bare scientific nuance for, later on, it had been obseved that between the 10th and 20th of Chitra month (after sun entered mesha), sun reached the zenith and the phenomena verified as correct.

This idea we saw is a delicate and useful clue fo us about the indigenous instruments used by Tamils for measuring time.

# A PEEP INTO THE SUBJECTS OF TAMIL PALMLEAF MANUSCRIPTS

Dr. S. Soundarapandian,
M.A., M.A., B.Ed., Dip. Skt., Ph.D.,
Curator
**Govt. Oriental Manuscripts Library**
Chennai - 5.

Govt. Oriental Manuscripts Libary, situated on the first floor of Madras University, started in 1869 is preserving as many as 10,653 palmleaf manuscripts in Tamil.

In no part of the world such a treasure for Tamil Lnaguage is available.

So, one is naturally tempted to know atleast about the subjects that such Tamil palmleaf manuscripts do depict.

After careful analysis and calssification we have been able to jot down the subjects of Tamil palmleaf manuscripts housed at Government Oriental Manuscripts Library, as follows :-

1. Sidha Medicine
2. Alchemy
3. Pregnancy
4. Attacking at secret places of body ('Varma')
5. Herbal Science
6. Metallurgy
7. Science of Breath
8. Sexual Science ('Sara')
9. Veterinary Science
10. Zoology
11. Physiology
12. House building
13. Ship building
14. Sculpture
15. Magical enchantment
16. Sorcery ('Mantra') (Salya)
17. Supernatural powers
18. Predictions ('Mantarika')
19. Dream
20. Magic
21. Divination
22. Astrology
23. Astronomy
24. Cosmology

25. Philosophy
26. Dharma
27. Logic
28. Worship methods (Puja)
29. Saivasm
30. Vaishnavism
31. Vira Saiva
32. Christianity
33. Islam
34. Vedanta
35. Atvaita
36. Dvaita
37. Vishistatvaita
38. Jainism
39. Upanishad
40. Purana
41. Epic
42. Literature
43. Biography
44. Gypsy drama
45. Drama
46. Folksong
47. Music
48. Stories
49. Local history

50. Logends
51. Stray-stanzas
52. Travelogue
53. Inscription
54. Genealogy
55. Loxicography
56. Dictionary
57. Grammar
58. Prosody
59. Alphabets
60. Sayings
61. Proverbs
62. Riddles
63. Rhetoric

This classification will definitely lead us innumerable further research about oriental knowledge.

One can see not only the varieties here but also subjects that belong to different times.

Palmleaf writing is undoubtedly a painful effort. So, with unflinching endeavour the Tamils had tried to preserve various branches of knowledge. This is evident from the above list.

Antiquity of these palmleaves may be ranged from 200 years to 500 years old.

# கீதையும் இந்துமத எழுச்சியும்

முனைவர் **சு.சௌந்தரபாண்டியன்**
காப்பாட்சியர்
அ.கீ.சு.நூலகம், சென்னை - 5.

பகவத்கீதை என்ற நூலை ஆய்ந்தால் அதில் நமக்கு ஒரு பெரிய வரலாற்றுத் திருப்பம் தென்படுகிறது.

ஆம் ! பகவத்கீதை எழுந்ததன் நோக்கம் தீவிரமானது ! மதமாற்றம் பற்றியது அது !

கீதையின் செய்திகளை உற்று ஆராய்ந்தால், வேறு மதங்களின் அழைப்பின் பேரில் மக்கள் அம்மதங்களைப் பின்பற்றத் தொடங்கிய ஒரு காலக்கட்டத்தில், இந்து மதத்திற்கு வருமாறு மக்களைத் தன் திசைக்கு அழைக்க எடுத்துக் கொண்ட ஒரு மதத் தலைவரின் - இந்து மதத் தலைவரின் அறைகூவலே கீதை என்பது விளங்கும் !

அந்த இந்துமதத் தலைவர் கிருஷ்ணர் !

ஆம் ! கிருஷ்ணர் என்ற ஒரு இந்துமதத் தலைவர், அந்தக் குறிப்பிட்ட ஒரு காலக்கட்டத்தில் விழித்தெழுந்து சில மதங்களின்பால் மக்கள் செல்லாவண்ணம் தடுத்து நிறுத்தியுள்ளார்!

வரலாற்று நோக்கில் இதனைச் சற்று பார்க்கலாம்.

கி.பி.570-ஐ ஒட்டி முகமது நபி, கி.பி. முதலாம் ஆண்டில் ஏசு, முதலியோர் தோன்றி, அந்தந்க் காலக்கட்டத்தில் வேறுபாதைகளில் சென்று கொண்டிருந்த மக்களைத் தங்கள் பாதையில் திருப்பினார்கள். அங்ஙனம் திருப்பிய அந்தச் செயலுக்கு நன்றி கூறவே, மக்கள் இன்றளவும் அவர்களை நினைக்கின்றனர்; வணங்குகின்றனர். இல்லையா? இது வரலாற்று உண்மை.

இதைப் போன்றே, கிருஷ்ணர் என்ற ஒரு மதத்தலைவரும் சில மதங்களின் பின்னே மக்கள் செல்ல ஆரம்பித்த காலத்தில் அவர்களைத் திருப்ப முயன்றுள்ளார் என்பது கீதையால் நாம் அறியவருகிறோம்.

அவ்வாறு கிருஷ்ணர் என்ற மதத் தலைவர், மக்களைத் திருப்ப முயலும்போதுதான், மக்கள் வாழ்வின் பல்வேறு கூறுகளையும் அவர் சொல்லி விளக்கவேண்டிய ஒரு கட்டாயம் வந்தது.

அதனால்தான் கீதையில், நிலவிலிருந்து, நட்சத்திரத்திலிருந்து, குதிரையிலிருந்து, சாதிப்பாகு பாடுகள் வரை பல்வேறு வகைப்பட்ட கருத்துக்களை நாம் காண முடிகிறது. அவ்வளவு விளக்கமாக உரை ஆற்றித்தான் அந்தக் கிருஷ்ணர் எனும் யாதவர் மக்களை அன்று திருப்பி உள்ளார் !

இக்கருத்தை வலியுறுத்தக்கூடிய சில சான்றுகளையும் கீதையிலேயே பார்க்கலாம்.

"நான்கு வகைச் சாதிகள் நான் பகுத்திருக்கிறேன், அவரவர்க்கு என்று குறிப்பிட்ட

கடமைகள் உள்ளன'' என்று (அத் 4 : 13)என்று ஏன் கூறினார் கிருஷ்ணர் ?

"இப்படிப்பட்ட உங்கள் கடமைகளை மறந்து, வேறு மார்க்கத்தில் போகிறீர்களே, இது நியாயமா?" என்பது கிருஷ்ணரின் கேள்வி.

"வேறு கடவுளர்களை வணங்காது என்னை வணங்குபவர்களுக்கு எல்லா நலமும் தருவேன்" என்று (அத் 6 : 22) வெளிப்படையாகவே வேறு கடவுள்களைக் கிருஷ்ணர் சாடுவதைப் பாருங்கள் !

''தன்னிடம் வந்து சேர்ந்தால், வீடு இல்லாதவரானாலும், தாழ்ந்த பிறப்பில் பிறந்தவர்களானாலும் அவர்களுக்கு எல்லா நன்மையும் செய்வேன்'' என்றும் வெளிப்படை யாகவே அக்கிருஷ்ணர் கூறினார்! (அத் 9 : 32)

''உலக இன்பங்களைப் பெரிதென நினை யாதீர் ! அனைத்தையும் துறந்து விடுங்கள்'' என்று திரும்பத் திரும்பக் கீதையில் கிருஷ்ணர் கூறக் காரணம்?

தன் பின்னே ஒரு பெரும் கூட்டத்தைச் சேர்க்கவே !

அந்தக் காலக் கட்டத்தில் இந்து மதத்தில் பூசைகள் பெரிய யாகங்கள் வாயிலாக நடத்தப் பட்டன ! மக்கள் அதனாற்போலும் வேறு மதப்பாதையில் செல்லலாயினர் ! அதை மாற்றவே, கிருஷ்ணர்," ஒரு பூ இருந்தால் போதும், ஒரு இலை இருந்தால் போதும், சிறிது நீர் இருந்தாலும் போதும் என்னை வணங்கலாம் ! நானே எல்லாம் !" என்று

(அத் 9 : 26) பூசை முறைகளை எளிமைப் படுத்தினார் !

அதனால்தான் இன்றும் கோயில்களில் பூ, வில்வம் அல்லது துளசி இலை, நீர் (தீர்த்தம்) என்று பூசைகளில் பயன்படுத்துகின்றனர் மக்கள் என மதிப்பிடலாம்.

இவ்வாறு நெடுக ஆய்ந்தால், கீதை நிகழ்த்திய மதமாற்றம் அல்லது மத எழுச்சி நமக்கு விளங்கலாம்.

பிற்காலத்தே எழுந்த பல மதம் தொடர்பான பனுவல்களையும், தற்போது அச்சிடப்பட்டு வெளிவரும் முத்தையேந்திரர் குறவஞ்சி, சிறுத்தொண்டர் யட்சகானம் போன்ற நூற்களையும் கூட இதே பின்னணியில் வைத்து ஆயலாம்.

கருவி நூல் : **The Bhagavadhita, ed. Tookaram Tatya,**

**Tatvavivechaka Press, Bombay, 1920**

# ஓங்கார மந்திரம்

முனைவர் சு. *சௌந்தரபாண்டியன்*
எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.,
காப்பாட்சியர்,
அ.கீ.சு.நூலகம், சென்னை -5.

ஓங்காரம் = ஓம் + காரம்; காரம் - சாரியை இடைச்சொல்

'ஓம்' என்றதன் வடிவமானது பிறந்த இடத்தை நாம் கண்டறிந்தால், நான்கு வேதங்களும் பிறந்த மண்ணை நாம் ஓரளவுக்கு அறிய முடியும்.

எனவே 'ஓம்' எனும் வடிவம் குறித்து இவண் சிறிது சிந்திக்கலாம்.

'ஓம்' என்பது, 'ஓங்காரம்' என்பதன் கருத்து அல்ல; 'ஓம்' என்பது, 'ஓங்கட்டும்' என்பதன் சுருக்கமே.

இதற்கு ஆதாரம் உண்டா?

உண்டு !

தமிழ் ஓலைச் சுவடிகளில்,

"ஹரி ஓம்
நன்றாக
குரு வாழ்க
குருவே துணை"

என்ற இடப்புற ஓரமாக எழுதப்பட்டிருக்கும்.

இதில் 'ஹரி' என்பதைப் பற்றி முதலில் பார்க்கவேண்டும்.

'அரி' என்பதுதான், பிற்காலத்தில் ஹரி என எழுதப்பட்டுவிட்டது.

'அரி' என்பதன் பொருள் விளங்காததால் அந்நிலை ஏற்பட்டது.

'அரி' என்றால் எழுத்து' என்பது பொருள். எழுத்துகளைக் கற்கப் பயன்பட்ட சுவடியே 'அரிச்சுவடி', 'ஹரிச்சுவடி' அல்ல !

'அரிவரி' என்றால், எழுத்துகளின் வரிசை என்பது பொருள். அ, ஆ, இ, ஈ என்ற தமிழ் எழுத்துகளைச் சிறார்களுக்குக் கற்றுத் தரப் பயன்பட்ட சில ஓலைச்சுவடிகளில் 'அரிவரி' என்று எழுதப்பட்டுள்ளன.

"அரிவரி தெரிந்த நாள் முதலா" என்று சில வகைப் பாடல்களில் வந்துள்ளது.

'அரி ஓங்கட்டும்', அதாவது எழுத்து ஓங்கட்டும் அல்லது வளரட்டும் என்று எழுதுவதற்குத்தான் 'அரிஓம்' என்று சுருக்கமாகப் பழங்காலத்தில் ஓலைகளில் எழுதினர்.

நன்றாக என்பதை, 'எழுத்து வளரட்டும்' என்ற தொடரோடு கொண்டால்தான் பொருளும் திரளுகிறது. 'ஹரிஓம்' என்பது தொடரானால் 'நன்றாக' என்பது ஒட்டாதே ! 'ஹரிஓம் நன்றாக' என்றால் பொருளில்லை. பலரும் என்ன செய்தனர் என்றால், 'நன்றாக' என்பதைப் பின்னே ஒட்டி, 'நன்றாக குருவாழ்க' என்று படித்துவிட்டனர். 'குரு வாழ்க' என்று வாழ்த்துவது சிறப்பே தவிர, 'நன்றாகக் குரு வாழ்க' என்று வாழ்த்துவது சிறந்த தொடராகாது.

"எழுத்து வளரட்டும்

நன்றாக !

குரு வாழ்க !

குருவே துணை"

என்பதே பழந்தமிழரின் உட்கிடக்கை.

ஆகவே, 'ஓம்' என்பதன் பொருள் 'வளரட்டும்' என்று ஆகிறது.

தீ வளர்க்கும் போது, 'வளரட்டும்' வளரட்டும்' என்று கூறி அதில் நெய் ஊற்றினர் போலும் பழந்தமிழர் ! அதனால்தான் 'ஓங்கட்டும்' (வளரட்டும்) என்பதன் சுருக்கமாக 'ஓம்' என்று தீ வளர்க்கும் போது கூறினர் போலும்.

'ஓம்', 'ஓம்' என்று கூறித் தீ வளர்த்து யாகங்கள் செய்தவர்கள் தமிழர்களே !

தமிழர்கண்ட யாக முறைகளே இந்தியா எங்கும் பரவிற்று என எண்ணலாம்.

தமிழ் கையாண்ட 'ஓம்' என்ற சொல், ஒரு மந்திரமாக யாகம் வளர்க்கும் போது நாடெங்கும் கூறப்பட்டது.

'ஓம்' என்னும் மந்திரத்தைக் கூறியதால்தான், வேதங்கள், பிராமணங்கள், யாகங்கள் ஆகியன வளர்ந்தன என்று பகவத்கீதையில் கூறப்பட்டுள்ளது (அத் 17 : 23)

இதன் பொருள் என்னவென்றால் நூல், யாகங்கள் முதலியன செய்யப்பட்டபோது, 'ஓம்' என்று கூறிக் கொண்டே செய்தனர் என்பதே.

'ஓம்' என்று ஏன் கூறினர்? தீ ஓங்கட்டும் அல்லது வளரட்டும்' என்று கூறத்தான் ! அதுதான் பொருளுள்ளதாகவும் இருக்கமுடியும்.

'ஓங்கட்டும்' என்பது, 'ஓம்' எனச் சுருங்குமா?

சுருங்கும் ! ஓலைச்சுவடி ஆதாரங்கள் உண்டு.

பிற்கால ஓலைச் சுவடிகளில், 'முதலியார்' என்பது 'முர்' எனவும், 'நாயக்கர்' என்பது 'நர்' எனவும். சுருக்கி எழுதப்பட்டதற்கான சான்றுகள் நிறைய உள்ளன.

அங்ஙனமாயின், யாகம், வேதம் இவையெல்லாம் தமிழ் மண்ணில் தோன்றியவையா?

ஆம் !

யாகம் பற்றிய வடமொழி நூற்களை நோக்கினால், யாகமுறையானது முற்றிலும் தமிழ் மண்ணில் தோன்றிய முறையாகவே உள்ளது.

தமிழனான இராவணன், வேதம் கற்றவன் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதி என்பவன் தமிழனே.

எனவே, பழந்தமிழர்கள் வேதம் உருவாக்கியோர் என்ற கருத்தை நாம் எடுத்துக் கொள்ளச் சான்றுகள் உள்ளன.

'ஓம்' என்ற வடிவிற்கு வடமொழியாளர் உரைக்கும் 'வியாக்கியானம்' பிற்காலத்தில் கற்பிற்கப்பட்டது வலிந்து கூறப்பட்டது. அவர்கள்

கூறுவதுதான் என்ன?. கீழ்வரும் படத்தால் வடவர் கருத்தை விளக்கலாம்.




இந்தப்படத்தைப் பார்த்தாலே, வடவர் கருத்தானது செயற்கையாகச் கூறப்பட்டது என்பது விளங்கும்.

வியாசரால், கி.மு.400ஐ ஒட்டிய காலகட்டத்தில் எழுதப்பட்ட பாரதத்தில் உள்ளதே கீதை. இக் கீதையில் 'ஓம்' என்ற சொல் வந்துள்ளது என் முன்பே கண்டோம்.

எனவே, கி.மு. 400க்கு முன்பு, வெகுகாலத்திற்கு முன் 'ஓம்' என்ற 'மந்திரம்' உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

இக் கருத்துகள் மேலும் விரிவாக ஆயத்தக்கனவே.

இந்நிலையில் ஆய்வு வேண்டும் என்ற நோக்கோடுதான் இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.

# முத்தையேந்திரர் குறவஞ்சி

## நாடகம்

### (கருணைகிரிப் பெருமான் துதி)

1. தடமகுட கருணைகிரி முத்தை யேந்திர
சாமியின்மேற் குறவஞ்சித் தமிழ்யாங் கூற
குடவளைகொள் குளங்கள்முழு தும்பொன்
னாட்டைக்
குறித்துநகைத் தேன்தரளம் கொழிக்கா நின்ற
கடபதியில் வீற்றிருந்தெவ் வுலகுங் காக்கும்
கருணைகிரிப் பெருமானைக் கருது வோமே!

### செந்தாமரையம்மன் துதி

2. திருத்தாரை வென்றதுரைச் சிங்க மெங்கும்
செறிகீர்த்திக் குரிவார் கோத்திர விபேகக்
குருந்தான கருணைகிரி முத்தை யேந்திர
குணநிதிமேற் பாடுகின்ற குறவஞ் சிக்கு
வருந்தாது தழைக்கவண்டர் பரவக் கண்ணன்
மணங்கொளமுத் தங்காட்டி வளமே
தோன்றித்
தருந்தாது வனையபொழிற் கடவூர் வாழ்செந்
தாமரைப்பூங் கொடியடிப்பைந் தளிர்காப்
பாமே !

## கடவூர் கைலாசநாதர் துதி

3. குடகர் வடவடுகர் திராவிடர் மராடர்
கொங்கணர் சிங்களர்மகதர் குருதர் சீனர்
நிடதர்பணி கருணைகிரி முத்தை யேந்திர
நிதிமீதிற் குறவஞ்சி நிகழ்த்த நாளும்
தொடரடியர் இடர்போக்கிப் பவத்தை நீக்கிச்
சுகந்தேக்கி முகந்தூக்கிச் சுரரை நோக்கிக்
கடல்விடமும் அமுதாக்கி ஆண்ட எங்கள்
கைலாச நாதர்பொற்றாள் காப்புத் தானே !

## கடவூர் கருணாகடாக்ஷவல்லியம்மன் துதி

4. வருபுலவர் தராதரங்கள் எல்லாந் தேர்ந்து
மழைமுகிலும் பழகநிதி வாரி வாரி
அருள்கருணை கிரிமுத்தை யேந்திரன் மீதில்
அமிர்தகுற வஞ்சிநாட கத்தைப் பாட
ஒருகுமுத மிருநீல மனேகங் கஞ்சம்
ஒளிர்தரமாந் தளிர்தளிர்க்க வோங்கு ஓங்கு
கருவமுட னரும்பவிழும் பலபூப் பெற்றுக்
கமழ்கருணா கடாக்ஷவல்லி காப்ப தாமே!

## கடவூர் சுப்பிரமணியசுவாமி துதி

5. புறவஞ்சி மயந்தேடிப் பொருந்தார்கள்
விரைந்தோ டிப்புகுந் துள்ளம்
பறவஞ்சி யொதுங்குவது சற்றுமின்றி
பொருகட தடம்கெம் பீர
முறவஞ்சி வெண்படா முகயானைக்
கருணைகிரி முத்தை யேந்திரன்
குறவஞ்சி தனைத்தினமும் குறவஞ்சிக்
கிசைகடவூர்க் குகக்காப் பானே !

## சரசுவதி துதி

6. மாகனக வீரகண்டா மணிநிருபர்
கப்பமிட்டு வணங்கா நிற்க
மோகனாக இரவலர்முறை துதிக்கும்
கருணைகிரி முத்த யேந்திர
யோகனக மகிழ்அமிர்த உசிதசுவைக்
குறவஞ்சிக் குவமை தீர்வெண்
கோகனக பீடிகையிற் குடியிருக்கும்
செஞ்சொலிசை குயில்காப் பாமே !

## தொப்பயசாமி துதி

7. மதிதயவு தருமமன்பு வாய்மை முதலுள
சுகுண வடிவாய்க் கீர்த்தி
முதிரவளர் கருணைகிரி முத்தைய பாண்டியனை
முறைமு றைகொண் டாடி
அதிகவித மதுரபுஞ்ச மானகுற வஞ்சி
நாட கத்தைப் பாடத்
துதிபுனிதர் மனமகலாத் தொப்பைய சாமியின்
பாதத் துணைகாப் பாமே !

## பொம்மதேவி, சக்காலம்மை, தங்கம்மை, முத்தாலம்மை இவர்கள் துதி

8. திருவளர் கம்பளகுலத்தைக் காக்கும் பொம்ம
தேவிஜெய சக்கால தேவி மேவி
அருள்புரி தங்கம்மை முத்தா லம்மையின்
ஓரமல பதகமல நிதமன்பாய்ப் போற்றிப்
பருவ மடந்தையர்க்கு நிசசொரூப காமன்
பகைத்தவர்க்குச் சிங்கம் நம்புபவர்க்குத்
தெய்வம்
தருவெனு நங்கருணை கிரிமுத்த யேந்திர
சாமியின்மேல் குறவஞ்சித் தமிழ்சொல்
வோமே !

## தோடையம்

இராகம்-நாட்டை தாளம்-ஜம்பை

9. மனமேவு காத்ரபுய வரகருணை கிரிமுத்தய
குணதீப மேற்புதிய குறவஞ்கி பாட
பனநாக மணிபுனித பரமசிவ னுசிதசுத
கணநாத னுபையபத கமலநினை வோமே !

திருவுலவு சமுகநய ஜெயமுத்து மங்கயமுத்தைய
பருவமுகில் அருளினிய பாண்டியனைப் பாட
சுருதிதொழற் குறியானைத் துளபமுடித்
திருவோனைக்
கருணைகிரிப் பெருமானை கருத்தில்
இருத்துவோமே !

மங்கள கம்பளதீரன் மளசைநகர்க் கதிகாரன்
எங்கள்செழுங் கடவூர னென்னும்பிரபுவைப்
பாட
புங்கவர்கள் வாதுபுடை பரவிடை யோது
செங்கமல மடமாது தினந்துதிப்பைச்
செய்குவேனே !

குயில்போலும் மாதர்துதி குரிவார் குலாதிபதி
ஒயில்சேர் விவேகநிதி உயர்புகழைப் பாட
கயிலாச நாதர்நல்லி கருணா கடாக்ஷவல்லி
மயில்வேலின் இவர்கல்வி மலரடி நம்புவமே!

தருணசுலட் சணகாமன் சரசலக்ஷ்மி பதிநேமன்
பெருமிதமைத் துனசோமன் பேர்வாழ்த்திப்
பாடத்
தெருள்படைத்த வாணிபொம்ம தேவிமெய்தொப்
பயசாமி
அருள்கொள் சக்காலம்மை முத்தாலம்மை
இவர்துணையே!

கொடையுடைய திடபோசன் குருவசன
விசுவாசன்
இடையபுரி மகராசன் இசைக்குற வஞ்சியிலே
நடைகள்சிறி தொருபோது நழுவிடினு மிகழாது
தடையில்கவி வலர்கோது தள்ளியு யர்த்துகவே!

## மங்களத்தரு

**இராகம் - ஆகிறி** **தாளம் - ஆதி**

10. கருணைகிரி முத்தய கர்ணனுக்கு மங்களம்
தருணகெம் பீரதீர சற்குண பரோபகார -
கருணை

அற்புத வளனாம்இசை யானைகுந்தி மாமளைசைக்
விற்புருவ வாணிதிரு விந்தைமகிழ் கூரவரு -
கருணை
தென்கடவூர் சமஸ்தான திவ்யசக்ரேஸ்
வரனான - கருணை
நன்மை கருணைகிரி நாதரை வந்தனைபுரி -
கருணை
சத்ருவின்றி வாழ்சகல சம்பரம குரிவார்குல -
கருணை
முத்துமங்கய முத்தைய மோகனருள் பொற்புய -
கருணை
சந்ததம்நம் புவோர்தங்கள் சஞ்சலந்
தவிர்க்குமெங்கள் கருணை
செந்தமிழ்மாம் பழக்கவிச் சிங்கத்தின்
சொல்லேற்கும்
கருணைகிரி முத்தய கர்ணனுக்கு மங்களம் !

## விநாயகர் வருவது

## விருத்தம்

11. கடினதுர கதவிஜய கருணைகிரி முத்தயவேள்
கனிவு கூரும்

படிமதுர ரசவமிர்த பாக்குற வஞ்சிபிர
பலிக்கப் பேரி
துடிமுரசு திமிலைதிசை தொருமதிர வருண்முதிரச்
சுரர்பூத் தூவி
அடிபரவ நெடியபொழில் அடர்கடவூர் செல்வ
விநாயகர்வந் தாரே !

## தரு

**இராகம் - சுருட்டி** **தாளம் - ரூபகம்**

12. செல்வவிநாயகர் வந்தார் ! - கடவூர் மேவும்
செல்வவிநாயகர் வந்தார் !
கல்விவல்லோர் மெச்சிய கருணைகிரி முத்தைய
கனமெய்பிரபு குறவஞ்சிய தெனுமற்புத

கவைமிஞ்சிய கவிமுற்றிட நிதமன்பொடு
புவிபற்பல திசைகும்பிடு - செல்வ
பாரவயிறு குலுங்க கண்டிகைமணி
யாரமகுடம் அலுங்கத் தார்புரள

வரைபோலு மார்புமதில் முன்னூலுஞ்
சதுர்மற்புயமுங் குருகுலகதை முற்றெழுதும்

பிரபலசல சக்கரமும் பொலிதர
நலசிற்சுக மங்களகர - செல்வ

பவளமேனி பளீரென்னப் பாசாங்குசமுந்
துவளமீது நிலாமின்னத் தவளவுடை திருந்தக்
கவளகடின தந்தத்தனி வேழமுகத் தருள்வெகு
கனிவாகமுறைத் துதிதகு தழைகாதுகளிற் பெருகிற
குழையாட மகத்துவ ஜெய - செல்வ

பூதகணா திபராேனார் சித்தர் விஞ்சையர்
வேததபோ தனர்வானோர்
சீதமலர் கள்சிந்தப் பாதமலர் கள்சிந்தித்
திடநம்படி யவர்சிந்தனை இடர்சஞ்சல
மறமுன்புனை திரள்கிண்கிணி யரவங்கொள
வரசம்பிரம முயர்பண்புள செல்வவிநாயகர்
வந்தார் ! - கடவூர் மேவும்
செல்வவிநாயகர் வந்தார் !

## குருக்கள் வருவது

## விருத்தம்

13. முத்தலமு மதிக்கமனு முறைநடத்துங்
கருணைகிரி முத்தை யேந்திரன்

சித்தமதில் நினைத்தவெலாம் சித்திக்கும்
படியருளித் தினங்காப் பாற்றும்
வித்தகச் சொரூபசெல்வ விநாயகரைக்
கடவூரின் மிகபூ சிக்கத்
சுத்ததிடப் பத்தியொடு சுருக்காகக்
குருக்களய்யர் தோன்றி னாரே !

## தரு

**இராகம் - சகாணா** **தாளம் - ரூபகம்**

14. குருக்கள் வந்தாரே - பூசைசெய்யக்
குருக்கள் வந்தாரே !

திருக்கருணை கிரிமுத்தய பிரபுசிந்தைப் படியே
அருண்முதிர் தொந்திக்கண நாயகரெதிர் -
குருக்கள்

ஆற்றில் முழுகிநல்ல விபூதிருத்தி ராட்சணிந்து
மெல்ல
போற்றி மந்திரத்தைச் செபித்துக் கந்தாக்ஷதை
பொங்கப் பலவளமையு - நிறை
துங்கக் கடபுரிதனிலுறை - குருக்கள்

சோமனுடை யிசையக் கடுக்கன் சொலிக்க
முன்னூலசைய
மாமணித் தட்டந்தூவ பழந்தேங்காய்
வகைபாகிலை
சூடத்தொடு புகைபாங்கனி வாகக்கொடு -
குருக்கள்

வாகுமலர்க் குடலைகுலுங்க வடைமோதங் கடலை
சேகுமுறுக்கு மேனாகரம் பாயசம் தேன்தித்தித்திடு
மவல்பொறி யேந்திக் கட்டளை முறைதெரி -
குருக்கள்

அள்ளைப் புடைப்பைத்தொட்டுப்
பார்த்துக்கொண் டடிக்கடி யேப்பமிட்டு
வெள்ளைப் பல்லாயிற் சிரிப்புஞ் சற்றேயொரு
மெட்டுங் கனகட்டும் - சிறு
சிட்டுஞ்சொல் அதட்டும்பெறு - குருக்கள் வந்தாரே!

## குருக்கள் விநாயகரைப் பூசிப்பது

### விருத்தம்

15. வரிவிழிப் பவளச் செவ்வாய்
வல்லவை பாகா போற்றி

புரிதவத் தினர்கொண் டாடும்
பூரணா னந்தா போற்றி

அரியமெய்ப் பொருளா யெங்கும்
அமர்ந்த குணாளா போற்றி
விரிபொழிற் கடவூர்ச் செல்வ
விநாயகா போற்றி போற்றி !

## தரு

**இராகம் - மத்தியமாவதி** **தாளம் - ஆதி**

16. செல்வ விநாயகா நமோ நமோ
நித்யஜெய சுபதாயகா நமோ நமோ
வில்வ மகுடதிட விமலகுணா - வெகுவித லோலா
நமோ நமோ
வெல்வ மூஷிக வாகனா நமோ நமோ

கெஜமுக ஜெகன்மோகனா நமோ நமோ
பூஷண கனசதுரப் புஜகண நாதா
புண்ணிய விநோதா நமோ நமோ
செல்வ விகட லம்போதரா நமோ நமோ
சுரவினுத நிராதரா நமோ நமோ
சகலலோக ஜீவரட்ச கசகர்ணா

*சாமா கர்ணா நமோ நமோ - செல்வ*
*பரமசுகா ஹேரம்பா நமோ நமோ*

*கடபதி ஹேரம்பா நமோ நமோ*
*கருணைகிரி முத்தய கர்ணன் சகாய*
*காரண தூயா நமோ நமோ*
*செல்வ விநாயகா நமோ நமோ*
*நித்ய ஜெயசுப தாயகா நமோ நமோ*

(கசர்ணன் - யானைக் காதுடையவன்; ஹேரம்பன் - போரில் ஈடுபட்டவன்; சாமரகர்ணன் - விரிந்த காதுடையவன்; கடபதி - விசாலமானவன்; லம்போதரன் - தொந்தி வயிற்றையுடையவன், சுரவினுத - புலவர்களால் பாராட்டப்படும்)

## கட்டியங்காரன் வருவது

## விருத்தம்

*17. கட்டளையின் முறைநடத்துங் கருணைகிரி*
*முத்தய மோகன கிரீடி*
*சட்டமிகு பவனியின் எச்சரிக்கை சொல்லச்*
*செருக்கிமெல்லச் சமர்பின் செல்லக்*

கெட்டிமணி கட்டிவட்டப் பொட்டுமிட்டுச்
சட்டைதொட்டுக் கீர்த்தி தேடா
மட்டிகளை யெட்டிமெட்டித் தட்டிநற்
கட்டியங்காரன் வந்துற் றானே !

## தரு

**இராகம் - பியாகடை** **தாளம் - சாப்பு**

18. கருணைகிரி முத்தய நிருபன்மன மெச்சி
கட்டியங் காரன் வந்தான் ! - (கட்டி)

மருவலர் தெழுதேத்தி வணங்க முறைநடாத்தி
வனச மயிலனு தினமு முலவிய
வரிசை யுளகட பிரியி லரசுசெய் - (கருணை)

கண்டைமய ருத்திராக்ஷம் கருக்குச் சித்ரவேட்டி
கரைவிரித் துடுத்திடைக் கச்சிலுடை வாள்பூட்டிக்
கொண்டையுரு மால்கட்டிக் கொண்டுவெண்
டையங்கட்டிக்
கொலுசுதண்டைகள் கலகலென் றொலிகுமுறிடும்
படிதமிழ்தெரிந்தருள் - (கருணை)

வச்ர மலைநிகர்த்த மாற்பிற்சட் டையிறுக்கி
மாறாமல் அடிக்கடி வளருமீசை முறுக்கி
எச்சரிக்கை பேசியிசைக் கைப்பிரம்பு வீசி
இட்டகட்டளை விட்டதுட்டரை
யெட்டமெட்டி மிரட்டதட்டொடு - (கருணை)

வட்ட முருக்கசைய வண்டிக் கடுக்கனாட
மணிபதித்திடு சரப்பணி பதக்கமு நீடத்
திட்ட மிகுந்தநெற்றித் திலகம் சொலிக்க வெற்றி
திடம்பெருகிய தடம்புயசை
திமிர்ந்திடுமென நிமிர்ந்திடுநல்

கருணைகிரி முத்தய நிருபன்மன மெச்சிய
கட்டியங்க காரன் வந்தான் !

## பிரபு பவனி வருவது

## அகவற்பா

19. வடகிரி நாணால் வளையமை நாகங்
கடலிடை மறையக் கயிலையும் விலக
மந்தகம் பயத்தின் மறுக ஆங்கார
விந்தமும் பிலத்துள் வீழ்ந்திட வீறிச்

சால்புடை ஐவனந் தழைப்பவான் கங்கைக்
கால்புடை புகநிமர் கருணைமால் வரையான்
வினைமிடி தீர்த்து மேன்மேலு மன்னுயிர்கட்
கனைவடி வாகு மரம்பைநன் னதியான்
தளிர்பொலி தேவ தருவையும் தாழ்த்திக்
குளிர்பொழி லானை குந்திநாட் டதிப
னதிவிளை யாடு நெடுமா ளிகைதொரு
மதிவிளை யாடு மளசைமா நகரான்
மெய்க்கவின் மங்கையர் விழியெனு மதுகர
மொய்க்க மணந்தரு முல்லைமா லிகையான்
உயரிலக் கணங்கள் உள்ளன எவையும்
இயல்பினிற் பொருந்தி எங்கணு மதித்து
மெச்சிடத் தங்க விசித்ர முகப்பணி
வச்சிரத் தங்க வடிவயி டூரிய
மரகத மயக்கடி வாளமா ணிக்கத்
திரள்பதி கலணை நித்தில மணிகுஞ்சத்
தொடருமா பட்சித் துராய்நுதற் கவரி
தடவுசூற் சரிகை முன்சல்லி பின்சல்லி
இன்னன பளபளென் றெதிரெதிர் சொலிக்கத்
தன்னணி தண்டை சதங்கைகள் ஒலிக்க

துன்னலர் தூசியும் தூசியாய் முடிய
வன்னவர் அரம்பையர் இராகமே படிய
மனகதி பின்னிட வட்டமிட் டுலவுங்
கனகதி நடனக் கடின வரம்பையர்
ஒருபுறத் திருபிறை உதித்திடத் தழுவி
அருவிபற் பலபடைத் தாக்ரமித் தடருங்
கருமலை போற்றுதிக் கையினாற் பிடித்துப்
பெருமழை முகிலைப் பிழிந்துநீர் குடித்து
நகைமணி யாட்டு நாதங் .கேட்டுத்
திகையிப மெட்டுந் திகையின்ப மாகி
விடநிழல் சுழித்து வெங்களத் தடங்கா
மடம்பெறு மருவலர் இனுங்கச் சிங்கிச்
சிதறிட வென்று திரும்புடர்ங் கோட்டு
விதமத கும்ப விகடகுஞ் சரத்தான்
பகலி ரவினு முறைப்படி கனகனென்
றிகலிடி வெருவிட விசைக்குமும் முரசான்
பணியா மாயப் பகைகெட ஓங்குங்
கணியா வாகைக் கருடகே கனத்தான்
வெறிப யிலவகை மிருகமு நடுங்கி
நெறிசெல நடத்து நீதியா ணையினான்

சத்யவான் கடலூர்ச் சமஸ்தா னாதிபதி
பத்யசாம் ராஜ்யன் பரமபா கவதன்

தென்மது ராபுரித் திருமலை நாயகன்
முன்மகிழ் கர்ணா முதல்விரு தனேகம்
வேண்டிய வரிசை வியந்துதந் திடப்பெறு
பாண்டியன் கம்பள பதிகுரி வார்குல
வாசவன் முத்து மங்கைய முத்தைய
கேசவன் ஈன்ற கிரீடசக் ரேஸ்வரன்
பூர்த்திப் பிரபு சற்புண்ய விநோத
கீர்த்திக் கருணை கிரிமுத் தையவேள்
சீரெடுத் தெலாம்பரவு சித்திர வீதியில்
பாரெலாம் புகழப் பவனிவந் தனனே !

(இபம்-யானை, கேதனம்-கொடி)

## இதுவுமது

## விருத்தம்

20. புடவிதிசை வளர்ந்தேறப் புகழ்ந்திடு
கட்டியங்கூறப் புயங்கள் வீறப்
படகமுரசங் கறங்கப் புலவர்வணங்கப்
பரவுதுங்கப் பதக்கற் தங்கக்

கடகநிழல் பொங்கவெங்கள் கருணைகிரி

முத்தையவேள் கடலூர் தன்னில்

வடகுவடு நிகரவுயர் மதயானை

மேற்பவனி வருகின் றானே !

## (புடவி - பூமி)

### தரு

**இராகம் - மத்தியமாவதி தாளம் - சாப்பு**

21. யானைமேற் பவனிவந்தான் - உல்லாசமா

யானைமேற் பவனிவந்தான் !

சேனையாற் பகைநீக்கிச் செங்கோல்

செலுத்துந்தீரன்

ஜெயமுத்தமிழ் முத்துமங்கைய முத்தைய குபேரன்

சித்தமெச்சு சுபுத்ர ரத்னமெனத் தழைத்துள

உத்தமப்பிரபு தெருளூ நயகுண தயாநிதி

கருணைகிரி முத்தைய மகிபதி - யானைமேற்

கண்டு மதனுங்கூச

கைகுவித்துமுன் கட்டியர் துதிபேச

வண்டுலவிய வாசமாலைப்

புயங்கள் வடமேருவையு மேசச்

செண்டுமுலை மலர்ச்செந்

திருமார்பினில் இலங்கத்

தெரிசித்தவ ரவர்கள்

வரிசைப்படி வணங்க

திங்கள் வதனமிலங்க - வெகுவித

தங்கவணிகள் குலுங்க

மதுர விசேட

கவிவலர் பாட

உறவினர் கூட

விமரிசை நீட மழைமத - யானைமேற்

மசகிரி சுருட்டி வட்டக்குடை பாவாடை

மலியக் கவரியிரட்டத்

துசமுத லடுக்கி யிட்டபல விருதுஞ்

சூரிய மண்டலத்தை முட்ட

திசைபரவு துத்தாரி சின்னம் பூரி

எக்காளம் சேர்க்கக் - கொம்பு

கர்னாக்க ளார்க்கப் - பெரியமேளம்

திமிலை துடிமுரசு உறுமிகடலினு
நிமிர வபினய கடுங்கணிகையர்
சித்தம்புரு மத்தளங்குழல்
ஒத்திதம்பெறு நித்தமும்செய - யானை

தலைவர் மந்திரிமார்கள் சம்பிரிதிகள்
பிரதானிகள் பெரியோர்கள்
கலைஞர் கம்பளத்தார்கள் கணக்கர்
நோட்டக்காரர் நம்பினபேர்கள்
வலிமைதங்கிய சொந்தமணியர் சேர்வைகள்
மற்றவகை யோர்எவரும்
பரிவாரமும் புடைசுற்ற

வளங்களின் உயர்தருங் கடபுரி
இளங்குமரி கள்யெனுங் கொடியிடை
மாத ரானவர் காத லேகொள
நாத கீத விநோத வீதமால்

யானைமேற் பவனி வந்தான் - உல்லாசமாக
யானைமேற் பவனி வந்தானே !

## பவனி காணப் பெண்கள் வருவது

### வருத்தம்

22. பரிமள குங்குமப் புயங்க ருணைகிரி
முத்தையமால் பவனி காணப்
புரிகுழல் வண்டினம் பாடமதன் கூடப்
பதஞ்சூடப் புனைபூ னாடச்
சரிவளை செஞ்சிலம் பலம்பத் தரளகும்பத்
தனம்ததும்பச் சமரா ரம்ப
வரிவிழி மங்கையர்கள் வண்ணமயில்கள் என்ன
வடிவுமின்ன வருகின் றாரே !

### தரு

**இராகம் - செஞ்சூடி** **தாளம் - ஆதி**

23. வந்தாரே பெண்கள் வந்தாரே
கந்தாற் மதகைக்கய கருணைகிரி முத்தைய
சிந்தா மணியைக்கண்டு சேவித் திடத்திரண்டு
(வஞ்)

மோசமி லாமுனி வோரும காதிட
மோனதி யான மெலாமய லால்விட

நேசம தாமலர் வாளிக ளேதொட
நேர்மத வேளு மனேகச லாமிட

(வஞ்)

வளைமே கலைபுரி புரமோ விடமுக
மதியூ டிருவிழி வடிவேல் களைநக
விளைமே னியின்மிக மதிசூழ் திசைமுக
விரிமார் பினின்முலை விகுவாய் மதமிகு

(வஞ்)

(வாளி - அம்பு; விகு - இறுக்கம்)

வனமதி லுலவிய மயிலிய லனநடை
மரகத முதலை மணியணி புனையுடை
புனல்படி கருமுகில்

(17ஆவது ஏடு சுவடியில் இலது)

## பவனிகண்ட பெண்கள் நிலை

24. ஆரென்ன சொன்னாலும்சரி பேரென்ன
ஆனதுஆகட்டும்
அண்ணல்பின் தொடர்வோமென்பார்
சிலமாதர்

நேத்திரமும் நம்முடைய கோத்திரமும் செய்தபுண்ய
நேர்ந்ததித் தினத்தில்என்பார் சிலமாதர்
ஆத்திரத் துடனடுத்த மாத்திரத்தினிற் குபீரென்ற
அங்கமது பொங்கநின்றார் சிலமாதர்

மெல்லநட வென்றுகெஞ்சி நல்லமதக் குஞ்சரத்தை
வீழ்ந்தெழுந்து கும்பிடுவார் சிலமாதர்
வல்லவன் வடிவைக்கண்ட தல்லது மயக்கத்தினாற்
மற்றுளதொன் றையுங்காணார் சிலமாதர்

சற்றுமிமை யாததன்மை பெற்றுலகின்
மேவுதெய்வத்
தையலர்களுக் கொப்பானார் சிலமாதர்
சுற்றுதுகில் வளைவெட்க முற்றுநழு வவிடுத்துத்
தோகைமயில் போற்பசந்தார் சிலமாதர்

கண்டுகொண்ட போதேமெய்து வண்டுசந்திரன்
முன்புசந்திர
காந்தவிம்பங்க ளாயினார் சிலமாதர்
கொண்டைவண்மை வேண்டியிவ
னண்டைசென்றெங் கள்குறிப்பைக்
கூறிவிட லாகாதோவென்பார் சிலமாதர்

நெஞ்சினுட் புகுந்துகொண்டான் கொஞ்சிடற்
கிதுவேநல்ல
நேரமென் றிடந்தேடுவார் சிலமாதர்
வஞ்சணைபண் ணாதுநம்மைப் பஞ்சணை
தனிலிணங்க
வந்திடானோ சாமியென்பார் சிலமாதர்

கங்கணத்தைக் காலிலிட்டுத் தங்கரத்தைக்
கிண்கிணியைக்
கையிலிட்டு ஓடிவருவார் சிலமாதர்
அங்குமிவ னிங்குமிவ னெங்குமிவ னாகக்காணும்
அற்புதமி தென்னஎன்பார் சிலமாதர்
விம்முலை முன்னின்றோர் தம்முதுகின் ஊடழுத்தி
வேர்த்துநெடு மூச்செறிவார் சிலமாதர்
இம்மகராச யோகவான் நம்மையொரு
பொருட்டாக
எண்ணுவது அருமையென்பார் சிலமாதர் !

## சரசமோகினி வருவது

## விருத்தம்

25. கனிவுமிகு கருணைகிரி முத்தைய
பாண்டியன்பவனி காணுங் காதல்

வனிதையர்க ளிடைநடந்து மலைவருந்து
முலைசுமந்து வளமே முந்து
மினியகட வமுதையந்த விருள்கடிந்த
தாரருந்த வெடுத்துத் தந்த
புனிதஜெகன் மோகினியும் புகழ்சரச
மோகினிமின் போல்வந் தாளே !

## தரு

**இராகம் - சவுராஸ்டகம் தாளம் - ஆதி**

26. சரசமோகினி இதோ வந்தாள் ! - இந்தத்
தரைக்குள் மங்கையர்க்கொரு
துரைப்பெண் எனத்தகுந்தாள் !

(சரச)

விருது பரவியமும் முரசுக ளார்க்க
வீனுசெங் கோல்செல்வம் விளைத்திடர் தீர்க்க
கருத்தலர் தொழமனு முறைசெய்சன் மார்க்க
கருணைகிரி முத்தையன் கர்ணன்பவனி பார்க்க !

(சரச)

சீவிவகிர்த்துப் புகையூட்டி யேலங்கஸ்தூரி
நீவிநறும் புனுகுகூட்டி யத்தர் பனிநீர்

தூவியனந்த மலர்சூட்டித் திசைமுழுதும்
தாவிமனங் கமழநீட்டி முடித்தகுழற்

கொண்டை இருண்டெழு கொண்டை இளம்பிறை
நெற்றி புருவமோ வில்
வண்டை யிகழ்ந்து மதம்பயில் வஞ்சனை
முற்றிநீ லோற்பலர் சேர
கெண்டை பயந்து கிடங்கு புகும்படி
யெற்றி வாளினை வேலைச்
சண்டை தொடங்கு சரங்களை நின்று
சுழற்றிச் செவ்வரி பெற்று

மைத்தொழிலினிற் பிறர்மனத்தினை
மயக்குமிரு நோக்குக்கவுள் கண்ணாடி
கத்தரிகை யொத்தசெவி
கற்களையழுத்திய புலாக்குதளுக்கு வச்ர

நத்துமருவிக் குமிழினிச்
சிடுசிடுக்கும் யிவண்மூக்குக் கனியிதழ்பல்
முத்துநில வுக்குநகை
மொய்க்கவமிர்தந் தெளிவாக்கும் முகம்சந்திரன் !

கழுத்து மடற்பசிய கழுகையு மேசிக்
கதிக்கும் புயங்கரும்பு காந்தன்கை வாசி
வழுத்து நற்பவளம் வனக்கிளி நாசி
வளமை நகமெனும் வடிவுள்ளமக ராசி !

கும்பகஜம் திரும்பியோடக் குடந்த தும்ப
பம்பரமும் கலங்கியாடப் பச்சிள நீரும்
வெம்பமலர்ந்த செண்டுகூடத் தோற்றுப் போயிர
வும்பகலும் குழைந்துவாடச் சக்ர வாகம்
களந்தர மெங்கும் மலைந்துநெடுங் கடலோரஞ்
செலத்துரத்திச் சொந்தமி தென்ற சுணங்குபரந்து !

தொழிலாரஞ் சுமந்து
சித்ரமுந்த விளைந்து
முதிர்ந்த கதம்பபடீரம் திமிர்ந்து
கச்சுச் சிந்த நிமிர்ந்து - செழிந்திலகும் தனபாரம் !

வயிறு அரிச்சுனை நத்திய ரத்தினை
நடத்து சுருதிப் பொருள்படுக்கு மாலிலை
உந்தி மத்திய நதிச்சுழி மடிப்பலை
கலைத்திற முடுக்கும் உரோமரேகைப் பத்தியியல் !

சுற்றிய பணிக்கரு மணிப்ரபை
கடுக்கு மென்னசொல்வது மெத்திடை
மினற்கொடி விரித்திடு வடத்தினை
எடுக்கும் அங்குல்கதலி கருந்தொடை !

கண்முழங் கால்கிளை நண்டு
கன்றுவரால் கணைகால்களி ரண்டு
பழகுந்தராசு குதிபந்து துண்டு
பஞ்சுங்கொஞ்ச செயிக்கும்பதமிப் பிரபலம்
கொண்டு ! (சரச)
அன்ன நடைபயில் சற்பாத்ரம் கலாபமயில்
என்ன வொளிர்மதனக்ஷேத்ரம் பூத்தசெண்பக
வன்ன முடையது பொற்காத்ரம் தபோதனரு
முன்ன மிடுவர்மிக ஸ்தோத்ரங்கொக்
கோகசாஸ்திர

சம்பரம இன்சுரதங்கள் இங்கித பேரம்
தெரிந்துசொர்ண விம்பமிரும்பு மெலிந்துருகுங்கன
கீதம்
மதனிலுயரும் பலவிஞ்சையரும் தணிகின்ற
விநோதம்

திவ்யநடன ரம்பையரும்பணி நங்கைதிரண்டொரு
மாதம் !

தெலுங்குசிறந்த முத்தமிழிலக்கிய இலக்கணமும்
உய்த்துணர் விவேகி
தருமபரிசுத்த குணசித்தினி தொடுத்திடு
முயற்சியின் நிர்வாகி
துஜகலச வித்தகமதிற்சிகர மெய்க்கட
புரிக்குள்வளர் தியாகி
கருணைகிரி முத்தையசுலக்ஷண முழுப்பிரபு
தனக்கிசை சிநேகி

மேகலைதொடி சரிவளை தண்டைசதங்கை
திருந்தச்
சகலரும் மயல்வலை தன்னில் வருந்த
வரிசையுடன் சகிமார்கள் பொருந்த
மதுர நவரசம் பிரவாகமதா யிருந்த
சரசமோகினி இதோ வந்தாள் !

## இதுவுமது

## விருத்தம்

27. அரசவல்லி யாந்தளர்ந்தோர்க் கன்னை
தயாநிதியென விவ்வவனி யான்மும்

முரசவல்லி ரகுபதி கருணைக்கிரி
முத்தையமா முகில்சீர் காணப்

பிரசவல்லி வாவிவளம் பெருகிய
புரியில்அன்னப் பெடைபோல் வந்த
சரசவல்லி தன்விருப்பந் தவர்வரிது
துறந்ததபோ தனர்க்குந் தானே !

## தரு

**இராகம் - பியாகு** **தாளம் - ஆதி**

28. சரச மோகினியெனுந் தையல் வந்தாளே
(சரச)

அரசர் குலதிலக னாகுங்குணக் கல்யாண
கருணைகிரி முத்தைய கர்ணன் பவனிகாண
(சரச)

கொண்டை வண்டிடை கெஞ்சக்
கும்ப தனங்கள் விஞ்சத்
தண்டைக் கிண்கிணி கொஞ்சத்
தாழ்ந்து மதனுங் கெஞ்ச
(சரச)

பக்கத்தி லனேகப் பாங்கிகள் ஒயிலாக

மொய்க்கக் கனகதேக முன்கிரணப் பிரவாகச்

(சரச)

வாச முலவு கொந்து

மாலை ரதியு நொந்து

கூச வம்மானைப் பந்து

கொண்டு மனது கந்து

சரச மோகினியெனுந் தையல் வந்தாளே !

(கொந்து - கொத்து; மனதுகந்து = மனது + உகந்து)

## சரசவல்லி அம்மானை ஆடுவது

### விருத்தம்

29. கூடிவிளை யாடியிளங் குயில்குலவ

மயிலுலவக் குளிர்கா வெல்லாம்

நீடிமழை சூடிமிசை நிமிர்கடவூர்ச்

சரசவல்லி நிதம்கற் றோரைத்

தேடியருள் கருணைகிரி முத்தைய

பாண்டிய ராஜதிடவான் கீர்த்தி

பாடிவெகு மோடியொடு பீடிசைப்

பொன்னம்மானை பயில்கின் றாளே !

## தரு

**இராகம் - செஞ்சுருட்டி** **தாளம் - ரூபகம்**

30. அம்மானை பயில்கின்றாளே

மோகினியான சரசவல்லி

செம்மல் கருணைகிரி முத்தையபிரபு

செழுமைக் கடபுரியிற்

ஜெனுதிகுர் தத்திமி யெனவிப்படி - அம்மனை

பாதசரந் தண்டை பாடகங் கிண்கிணி

பண்பலவு பாடச் சகிமாதர்கள் வந்து

சாரமதாக வணங்கியுடன் கூடக்

காதடர்கின்ற கயற்கண் வலைதனிற்

கைக்கணை மதனப்பயலும்

கபடமுடு சிக்கணிவுடை - அம்மனை

நத்துப் புலாக்கு மூக்குத்தி விசித்திர

நன்னுதற் சுட்டி முன்னகக் கொப்பு

முத்துச் சிமிக்கி பொன்னோலை மேற்சந்திர
முருகு பளபளென்ன கொத்துச் சரங்கள்
குலுங்கக் கருங்குழல் கொண்டை யில்வரி
வண்டுகளொலி கொண்டிடவுய ரெண்டிசைபுகழ்
- அம்மனை

அத்தர் புனுகு சவ்வாது கஸ்தூரி
அநேகவிதச் சாந்து திமிர்ந்து
எத்தவ மாமுனி வோரு மயங்க
விலகி இறுமாந்து மத்த கஜத்தின்
மருப்பைத் தகர்த்தெழில் வடமிடுமிரு

தடவனமுலை வரவரநிமிர் தரநவமணி
அம்மனை பயின்றாளே மோகினியான
சரசவல்லி !

## சரசவல்லி பந்தாடுவது

## விருத்தம்

31. அம்மானை யிடைபதன மலர்முலைதாங்
கரிதெனமின் னார்வேண் டச்சே
அம்மானை மனத்திருத்துங் கருணைகிரி
முத்தையவேள் அதிசீர் பாடி

அம்மானை பயின்றுமகிழ்ந் ததின்மேலே

இரதிபோலே யன்பி னாலே

அம்மானை அடர்விழிபெற் றமைசரச

மோகினிபந் தடிக்கின் றாளே !

## தரு

**இராகம் - சுருட்டி** **தாளம் - ரூபகம்**

32. சரசவல்லி உல்லாசமாகத்தானே

பந்தடித்தாள் அதிமோக - சரச

துரைகருணை கிரிமுத்தையப் பிரபு

சொந்தக் கடபுரி வீதியில்

வந்தற் புதநட மேபயில் - சரச

தாரகை மத்தியிற் சந்திரோ தயம்போலத்

தான்சகி மாருடன் கூடி

சங்கு சக்கர கருணைகிரி நாதர்

தொப்பைய சாமி மகிமைகொண் டாடி

வீர தனகன பூர்த்தி பெற்ற

மெய்க்குரி வார்குல கீர்த்திதனைப்

பாரறி யும்படி பாடி மனத்தினிற்
பரிவொடு ஜெனுதகண ககின
தரிகிட திமியென நயகுண - சரச

இன்ப நிதம்ப மெனும்பொன் னிரத
மிணங்க விடைக்கொடி யாடப்
பைஞ்செ மூதிய பாதச் சிலம்பு
முரச மெழுந்து முழங்கவி சேட

வன்புரு வச்சிலை கோட்டி
வரிமைக் கருங்கட்கணை பூட்டி
நின்றுமுன் புகுகின்ற முலைப்பகை யானதை
மொத்தித் தண்டனைபுரி துணி
வொத்திட் டிங்கிரபணி - சரச

ஆடை ரத்னா பரணாதி பளபளென்
றங்க மெங்கும் பிரமை காட்டப்
பிறை யஞ்சிய நெற்றிக் கணிந்த
திலத மனங்களையும் கூட வாட்டப்
பேடை யனநடை யேற்க
மயில்பின் சாயலைக் கண்டு தோற்க

மஞ்சள் வாடை களபமணம் எத்திசையினும்
வளையப்பல புருடருமதி
யுளையப்பிரபல கலைநிதி - சரச

## இதுவுமது

## விருத்தம்

33. கந்தாடும் படிமுழங்கும் களிநல் யானை
கருணைகிரி முத்தையமால் கடவூர் தன்னில்
கொந்தாடுங் குழலாட குழைக ளாடக்
குடமாட வடமாடக் கொங்கை யாடத்
தந்தாடுஞ் சிற்றிடைதள் ளாடப் பாத
சரமாடச் சரசவல்லி சகங்கொண் டாடப்
பந்தாடும் போதுமத வேட்குஞ் சிந்தை
பதைத்தாடு மெனில்அதையார் பகர்கிற் பாரே !

## தரு

**இராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதி**

34. சரசவல்லி பந்துதான் பயின்றாளே
கருணைகிரி முத்தைய கர்ணனுக் கேற்ற - சரச

மாகளப தம்ப மதனபூரண கும்ப
மோகமுலை ததும்ப முகச்சந்திர விம்ப - சரச

மதங்கொள் விஞ்சைய ரோட
மாலை வண்டிசை பாடச்
சதங்கை தாளங்கள் போட
தன்குழை யாட - சரச

தரள வடங்கள் பின்னச்
சரிகள் கலகலென்னப்
பரத நடஞ்செய் வன்னப்
பாவை விற்பன்ன - சரச

## சரசவல்லி பவனிவந்த பிரபுவைக் காணுதல்

## விருத்தம்

35. தேசரச ரினங்க ளனுதினம் பரவு
செழுங்கடலூர் தெருவி னூடு
மீசரச சகிகளுடன் அம்மானைப் பந்தடிப்
பயின்றுமின் போல நின்ற

மாசரச மோகினி மும்மத யானைமேற்

பவனி வந்து தோன்று

நேசரச கருணை கிரிமுத் தைய

பாண்டியனை யங்கே நேர்கண் டாளே !

## சரசவல்லி சொல்லுதல்

### தரு

**இராகம் - யமுனா கல்யாணி தாளம் - ஆதி**

36. மங்கையர் மனங்கவர வந்தான் இவனாரோ ?

மற்றளோர் இந்த வள்ளற்கு நேரோ ? - மங்கை

திங்களை வென்ற செழுங்குடை துன்ற

கொங்கைக ளென்ற குடங்கொடு நின்ற -

மங்கை

தாளமிர்தங்க சஞ்கீததுங்க

மேளமிர்தங்க விருதுகள்பொங்க - மங்கை

மகிழ்பணி பூட்டி மதனையும் வாட்டி

முகநகை காட்டி மோகமே மூட்டி - மங்கை

படிமிசை தேறி பலர்துதி கூறி

அடிதொழ மீறி யானையி லேறி - மங்கை

## சரசவல்லியாசை கொள்ளுதல்

### விருத்தம்

37. கொடிமளசை நகர்க்கதிபன் கடவூர் வாழ்சற்
குணநிதி கம்பள குரிவார் குலகிரீடி
வடிவுதிகழ் பருவரதி மதனா முத்து
மங்கைய முத்தையசாமி வரகு மாரன்
படிபரவு கருணைகிரி முத்தை யேந்திர
பாண்டியனிங் கிவனெனப் பற்பலருங் கூறப்
பிடியினடை பயில்சரச வல்லி மோகம்
பெருகினாள் சிந்தைதளர்ந் துருகி னாளே !

### தரு

**இராகம் - ஸ்ரீராகம்** **தாளம் - சாப்பு**

38. வாச மலிதுளவ மணிவோனோ ? - ரதி
மதனோ கந்தருவனோ மகவானோ ?
நேச னிவனென்று கன்னியர் பேச - எங்கு
நிறைரத் னாபரண நன்னிழல் வீச

கருடக் கொடிதுளவ முகிலைப் போலே - பேரி
கணகணென்று மதயானையின் மேலே
தெருவிற் பவனிவந்த துரைபூமி பமச்சுஞ்
ஜெயகருணைகிரி முத்தைய சாமி

உல்லாச மதையெதிர் கண்டேனே
கண்டவுடனே மதிமயக்கங் கொண்டேனே !
எல்லாரும் மயல்என்ப திதுதானோ !
தலைக்கேறுதே நான்சகித் திடுவேனோ ?

மெத்தவும் முலைகள் விம்முவ தேதோ ? - பிரபு
வித்தையோ மருந்தோ எவ்விதச் சூதோ ?
இத்தனை வருமென்பது அறியேனே
அறிந்திருந் தாலிங் கணுகவுங் குறியேனே

பாங்கிகள் வசனமும் வகையாச்சே - கையிற்
பற்பல வளைகளும் பறிபோச்சே
ஏங்கி உடலும் பசந்திட் டேனே
எண்ணங்களை மறந்துவிட் டேனே !

தெள்ளமுதை யுமினிப் பேணேனே - அங்கே
சென்றமனம் திரும்பக் காணேனே

வள்ளல்எனை மருவ மாட்டானோ - திவ்ய
மதுரரச வின்பத்தை யூட்டானோ ?

## ஆசைகொண்ட சரசவல்லியைக் கண்டு பாங்கிகள் வருந்துதல்

### விருத்தம்

39. கனகருட டால்படைத்த குரிவார் கோத்ர
கருணைகிரி முத்தைய கோகனக நேத்ர
தனபதியை எதிர்த்துக் கண்டவுடனே தானுந்
தனமிகப் பெற்றுளங் களித்துச் சரசவல்லி
புனையுமுடி மருவலர்தன் னடிக்கீழ்வீழப் புகழ்வர
விப்படி மேலாம் புதுமை தேர்ந்தே
யனையனைய நல்லா ரெல்லாரும் பக்கத்
தடுத்திட்டார் பலசொல்லத் தொடுத்திட்
டாரே !

### தரு

**இராகம் - முகாரி** **தாளம் - திரிபுடை**

### கண்ணிகள்

40. மோக மாகினாள் சரச மோகினியென்பாள் -
இதென்ன
மோசமோ என்பார்

வேசமோ என்பார்

தாகமோ நடந்தலுத்த சோகமோ என்பார் -

துரைக்கைத்

தந்திரமே என்பார் - அல்லது

மந்திரமோ என்பார் !

வட்டமுலை யாலிடை சோர்ந்திட்டதோ என்பார்

இத்தனை

மாச்சல் ஏதென்பார் - இவட்டுக்

காச்சல் ஏதென்பார்

துட்டவேள் கணைமயக்கி விட்டதோ என்பார்

.... ..க்கமோ என்பார்

எதின்மேல் ஏக்கமோ என்பார்

முந்துபந் தம்மானை ஆடியிளைத்ததோ என்பார்

- உடம்பு

மூச்சுண்டோ என்பார் - நடுங்கிப்

பேச்சுண்டோ என்பார்

விந்தையோ குலதெய்வ விரோதமோ என்பார்!

கன்றுவார் சகிமாரெல்லாம் கையை நெரிப்பார்

சுக்கேனும் காதில்வைத் தூதுமென்பார் -

விபூதி தரிப்பார்

நின்றுபயந் தாளோவென்று நெஞ்சைத்

தொடுவார் - பதறி

நீணிலஞ் தேய்த்துத் திலதநெற்றிக் கிடுவார்

முனைபுனை முத்துமங்கைய முத்தைய போஜன்

பெற்றருள் முத்தமிழ்க் கருணைகிரி

முத்தையராஜன்

நினைக்கருணை கிரிமாலை கோருங்கள் என்பார்

- கடவூர்

நித்ய தொப்பையசாமியை நேருங்கள்

என்பார் !

## சரசவல்லியைப் பாங்கிகள் உபசரித்தல்

### விருத்தம்

41. செந்தமிழி னருமைதெரி கருணைகிரி

முத்தையவேள் செழுநன் னாட்டில்

வந்தசுக சரசவல்லி மனதுமது

மயங்கினளெனப் பொன்மாடஞ் சேர்த்தி

அந்தவனி தையர்சுரங் கண்டவர்க்கது தீர்ந்திடக்

குளத்தி லமிழ்த்து வார்போல்

இந்தஉப சாரங்க ளாற்றுவார்

ஆசைதலைக் கேற்று வாரே !

## தரு

**இராகம் - உசானி** **தாளம் - ரூபகம்**

## கண்ணிகள்

42. மாமலரணை மீதி லேற்றுவார் - சகியாத

குறிப்பை மனதினி லறிந்ததனை

மாற்றுவார்

தாமரை யிளந்தளிரைப் பரப்புவார் - அதிற்

படுக்கைவைத்தடர் தனத்திற்செழுஞ்

சந்தனத்தை நிரப்புவார் !

அடுத்து விசிறி அசைத்து வருத்துவார் -

உபசரிமயிலை

அடிக்கடி மெல்ல மடிக்கு ளிருத்துவார்

எடுத்து வாழைமென் குருத்திற் போடுவார்

துடிதுடிக்கின்றாளே என்செய்வோம்

இதற்கெனத் தள்ளாடுவார்

மாரிபோற் பனிநீரை வீசுவார் - சகிமார்கள்
பலரும் வந்தபடி மன்மதனை ஏசுவார்
மூரி மூச்சுடல் வாட்டுதே என்பார் - சிறு
பெண்ணையிப்படி மோகப்பேய்
பிடித்தாட்டுதே என்பார் !

களப குங்கும புயவசீகரன் கடவூர்
வளருங் கருணைகிரி முத்தைய குணாகரன்
வளமை கண்டிவள் ஏங்கினா ளென்பர் - இந்தச்
சரசமோகினி மதியைத்தந்திது வாங்கினா
ளென்பார்!

## இதுவுமது

## விருத்தம்

43. சிகரபுய கருணைகிரி முத்தைய பாண்டியன்
கடவூர் செல்வச் சந்திர
முகசரச மோகினி கா்மாக் கினிக்குச்
சகிகள்பல முறையிற் செய்யும்

சகலவித சயித்யோப சாரமு நெய்யா
யிருந்த தன்மை பார்த்து

மிகமனது வருந்தி யன்பு கொள்ளுவார்
பின்னுமவர் விள்ளு வாரே !

## கண்ணிகள்

**இராகம் - மணிரங்கு** **தாளம் - ரூபகம்**

44. காச்ச லிப்படிக் காயுதே - தளிர்
கருகுதே என்பார் - மயல்
பெருகுதே என்பார்
மூச்சு மக்கினிக் கொழுந்துபோல்
முந்துதே என்பார் ! - வளை
சிந்துதே என்பார் ! - வரவர விம்மிச்
செழிக்குதே என்பார் - கச்சைக்
கிழிக்குதே என்பார் !

மாரனுக்கு இந்தவனிதை மேலென்ன
வருமமோ என்பார் - இது
தருமமோ என்பார் !
ஆரைவிட்ட தவன்கணை இவள்
ஆற்றுமோ என்பார் - புத்தி
தோற்றுமோ என்பார் !

தருவும்புகழுங் கருணைகிரி முத்தைய

சிங்காரனை - கனஜெய

கம்பீரனை

கருதுஞ் சரச மோகினிசெழுங்

கலவை நீக்கினாள் - புது

நிலவை நோக்கினாள் !

## சரசவல்லி சந்திரனைப் பழித்தல்

### விருத்தம்

45. உலகலையா நிலைநாட்டி உடனிடையர்

இடரோட்டி உறுதி காட்டி

வலகலையா னிடைத்தாங்குங் கருணைகிரி

முத்தையமால் மகிழத் தோன்றுன்

நிலகலையா ராற்றுகிற்பார் எனக்குமுனக்கும்

பகையோ வேள்காய் கின்றாய்

பலகலையா னிறைந்துமன்பு தானிலா

திருந்தசெழும் பானி லாவே !

## தரு

**இராகம் - மாஞ்சி** **தாளம் - சாப்பு**

46. ஏதுக்கிப்படி வாதுக்குத் துணிந்தென்றன்
முன்னாலே
யொருக்காலே
கனற்போலே
கொதித்தாய் ஏழைமேற் கொடுமைநன்றோ
நிலாவே !

சாதிப்பது நன்னீதிப் பிசகு
சத்ருநானோ
சரிதானோ
மெலியேனோ?
விரகதாபமே விளைக்கவேண்டா நிலாவே !
அத்திரிமுனி புத்திரனென வாதிநாட்
பிறந்தாய் - புகழ்
சிறந்தாய் - அதை
மறந்தாய் - விவேகம்
அல்லவே யுனக்கிதெல்லா நிலாவே !

மதியிற் குளிர்வித்திடு குணம்

மாறிடலாமா

பழிபோமா

ராமராமா - மிகவும்

வஞ்சனை எங்கேபடித்தாய் நிலாவே?

வீரபத்திரனார் மிதித்துமேன் வெட்கத்தை

விடுத்தாய் ? - பகை

தொடுத்தாய் ? - கடு

கடுத்தாய் ? - உனது

வீரியஞ் சபாசுபளா நிலாவே !

ஆருனைச் சகிப்பார் மதப்பயற்கான

சிநேகி - மறுத்

தேகி - குருத்

துரோகி - நீயென்றே

அஞ்சுதே மனதுபொல்லா நிலாவே !

மருவுசிலையு முருகுமனது வரவினைக்

கண்டு - வளர்

செண்டு - முலை

கொண்டு

மயங்கு மாதரோ சும்மாவிருப்பார் நிலாவே

தருணபருவ கருணைகிரி முத்தையதுரை

தேடி - எனைக்

கூடி - வினை

யாடிச் - சவுக்கியந்

தந்தபின் என்னசெய்குவாய் நிலாவே !

## கலித்துறை

47. ஜெயமால் கருணைகிரி முத்தை யேந்திர

சிகாமணிமேல்

மயலேமிகு மௌன வாட்டிய தாலென்

வருமுனக்கு

பயமாய் விழுங்கிய பாம்பு மிழும்படி படிகொடிதா

மியலே யுளரின் கதிரினிநான் சகியேன் மதியே!

## தரு

**இராகம் - அரிகாம்போதி தாளம் - ஆதி**

48. மதியே யெனையினி வாட்டாதே - சும்மா

மனத்துயர் சகிக்க மாட்டாதே - மதியே

அதிபதி கருணைகிரி முத்தை யேந்திரன்
அருமைப் பவனியைக் கண்டதினாலே
தியறியாமல் மோகம் அதிருது அநேகமாகத்
தயவு தாட்சண்ய மில்லாதவர் போலே !
- மதியே

முந்தமு துடனே வந்தனை திடவே
மொழிபரம சிவனார் முடிமீது
சந்ததமு மிகுந்தாய் சொந்தநடை திருந்தாய்
தமியேனொடு வர்மமித்தனை ஏது? - மதியே

விடமதைச் சார்ந்தும் வடவையைச் சேர்ந்தும்
வெம்மையைப் பெற்றுத் தன்மையை
விட்டாயோ ?
உடலினிற் பசுந்தேமல் அடரமுற்றும் அஞ்சாமல்
உருக்கின்றாய் உறங்க வொட்டாயோ ? -
மதியே

தங்கை யுலாவும் பங்கயம் யாவும்
தளர வாட்டுவாய்நீ வஞ்சகி பாவி
கங்கை இடத்தடுத்தாய் மங்கையரைச் சிடுத்தாய்
களங்கமப் பழியென்றோ ?

மதியே எனையினி வாட்டாதே - சும்மா
மனத்துயர் சகிக்க மாட்டாதே - மதியே

## சரசவல்லி மன்மதனைப் பழித்தல்

### விருத்தம்

49. உனதுகுடை தனைமுகத்தால் வில்லைத் தோளால்
உடலையிடை யாற்பரியை யுரைக
ளால்வெஞ்
சினமுரசை விழியாற்பொன் முடியைக்
கொங்கைத்
திறத்தால் யானையைக் குழலாற்செயித்
தாரிந்தக்
கனகருணை கிரிமுத்தை யேந்திர ராசன்
கடவூர்க் கன்னியர்கள் எனக்கண்டோர்
கண்டாய்
மனவரும மிதுதரும மல்லசும்மா வாட்டுகின்ற
தென்ன என்னை மதன வேளே ?

## தரு

**இராகம் - மோகன கல்யாணி　　　தாளம் - காப்பு**

*50. மதனா உனக்கென்மீது வாதுதகாது*

*வீணில் முற்பகையாலணுகி யிந்தத்*

*தருணமெனைநீ சிவனென்றோ சமர்செய்*

*கின்றாய்?*

*சற்றேநில் கருணைகிரி முத்தைய துரைமேற்*

*காதலோங்கக் கருத்தேங்க*

*வருணமுலை வட்டுடைநீங்க வாங்குஞ்சிலை*

*மன்மதவேளே !*

## தரு

**இராகம் - சங்கராபரணம்　　　தாளம் - ஆதி**

*51. மன்மதா தன்மமோ ?*

*வாது கொல்லடா*

*போது நில்லடா*

*மன்மதா !*

*துன்மத கோபசுபாவ மாகாது !*

*தோகை மார்பழி சும்மா போகாது - மன்மதா*

தென்றெனுஞ் சிறுதேர் மிசைத்தாவி
    தீவிரி சோதி நிலாவி லுலாவி
வென்றனை யெங்கணு மென்கணை ஏவி
    வேறெவருன்னை விலக்குவார் பாவி !

மனமெந்த விதஞ்சகிப்பேன் மயல்வாதை
    ஏறித் தலைசுழற்று மிதுவெகுபோதை
சுந்தரமாங் குயிற்சுருதி யென்காதைத்
    துளைத்திடப்போர் தொடங்காதே
                    நான்பேதை - மன்மதா
கருதி யவையுதவு கற்பகத் தியாகி
கருணைகிரி முத்தைய கனமதி யூகி
மருவி மகிழ விகவாசம தாதி
வந்தபின் என்னசெய்வாய் மகாது ரோகி ! -
                    மன்மதா

(இதற்கு அடுத்த ஓலை சுவடியில் இலது)

## சரசவல்லி தென்றலைப் பழித்தல்

52. .... ... ...

வளரவீசிக் கனற்றாதே நில்லு

கருணைகிரி முத்தைய கர்ணன்முன் சொல்லு
தென்றலே நீயுங் குரூரஞ் செய்யலாகுமோ-
இந்நேரம் தென்றலே !

## சரசவல்லி குயிலைப் பழித்தல்

### கலித்துறை

53. அயிலே யமர்கைக் கருணைகிரி முத்தை யாதிபதி
ஒயிலே தெரிசித் துளந்தந்து மால்கொண்
குருகுமென்முற்
பயிலே சொலிமதப் பாவியைக் கூவிப்
படைபெருக்குங்
குயிலே யுனக்குந் துயிலே நிலையிக்
கொடுமைநன்றே

### தரு

**இராகம் - மாஞ்சி** **தாளம் - ரூபகம்**

54. குயிலே மயலே நான்கொண்டேன்
கொடுமையாய்க் கூவாதே நில்லய்யோ
- குயிலே
பயிலே காட்டிப் பலரையும் வாட்டிப்

பாவி மதனப் பயல்படை கூட்டிய

- குயிலே

ஓயாய் முழுதுங் கண்ணுறக்க மில்லையோ

உனக்கும் எனைப்போல் ?

வாயானதை மூட மாட்டாயோ கொஞ்சமும்

வஞ்சவிரும்போ வலியவுன்னெஞ்சமும் ?

- குயிலே

தொண்டை வலியாதோ சும்மாவென் காதைத்

துளைக்கத் தொடுத்தாயே !

சண்டையால் வெல்லச் சமயமிதுதானோ ?

தன்னந் தனியே தயங்கித் தவிப்பேனோ ?

- குயிலே

பெற்றதாய்க் காகாப்பிள்ளை உலகிற்

பிறர்களுக் காகுமோ ?

உற்று வளர்த்த தாயுஞ்சகியாது அங்கே

ஓடிற்றலவோ உனதோசை கேட்டிங்கே

- குயிலே

உடனே மேவில் உனையோர் பொருட்டாக
உன்னுவனோ பின்னே ஓகோ அனுராகக்
- குயிலே

## சரசவல்லி சமுத்திரத்தைப் பழித்தல்

## விருத்தம்

55. நீதகுணக் கருணைகிரி முத்தை யேந்திர
நிதியரசு புரிநாட்டில் நிதமும் ஈன்ற
மாதரெனப் பயஞ்சுரந்து தனங்க ளோங்க
வருமதலை பலதழுவி மடிமேல் வைத்து
ஏதமில் கைத்தலமேந் திமுத்தமிட் டேயிருந்து
இன்றுமல டியைப்போல் இரங்கா யாகிப்
பாதகமைக் கடலேயென் கொடுமை யிற்பிர
பலிக்கின்றாய் வீணிலிங்கே ஒலிக்கின்
றாயே!

## தரு

**இராகம் - முகாரி** **தாளம் - சாப்பு**

56. கடலே யுனது சத்தங் காதுபொறாது
கதறுவதேது மடலார்பூ மாது

வளர்குணசாது வயகருணைகிரி முத்தைய துரை
மீது மயலாமிப் போது - கடலே
மலைவிழ நொந்தாய்
அலைவுமி குந்தாய்
மாலாலு லைந்தாய்
முனிவயிற்றிற்போய் வந்தாய்
மறந்திடர் தந்தாய் - கடலே

உலவவெம் பாவி
நிலவையிங் கேவி
உருவிலக்கு முரசாய்
உருக்குவாய் ஆவி
ஓகோநீ கோவி ! - கடலே

வடவையை நீங்காய்
அடமொடு தீங்காய்
வாய்விட்டு என்போல்
வாரைவிட்டபின் வாங்காய்
வாழ்த்தினுந் தூங்காய் ! - கடலே

விடமதை நீட்டி
கடவுளர் கோட்டி

வெருவோங்கு முனையார்

வெல்வர்பா ராட்டி

வீணிலேன் போட்டி ? - கடலே

## இதுவுமது

## விருத்தம்

57. எனையுசித கருணைகிரி முத்தை யேந்திர

இணங்காமை யாற்சிடுத்தாள் ஈன்ற தாயும்

வினைபுரிவர் சகிகளும் காமனும்போ ரேயான்

வெண்ணிலவும் தென்றலும்தீ வீசா நிற்கும்

கனைகுயிலும் உறங்காவொட்டா தந்தோ நீயும்

கலகமிட்டாய் கடலேயிக் கணக்கி லாவே

தனைபலவு நானொருத்தி யாற்று வேனோ

சாற்றுவாய் கொஞ்சமிளைப் பாற்று வாயே!

## தரு

**இராகம் - சங்கராபரணம் தாளம் - காப்பு**

58. ஆற்றுவேனோ கடலே ? - சரியல்லநீ

அதிர்த்திடலே ! - ஆற்று

ஏற்ற கலக விருத்தி

எத்தனைநாள் இங்கொருத்தி ! - ஆற்று

ஏழைமேல் என்ன விரோதம் ?

இப்படியாமோ அநீதம் ?

தோழிமார் குரூர பேதம்

சொல்லமுடியுமா தகாதம் - ஆற்று

அன்றரற்கு நஞ்சையிட்டாய்

ஆனதாற் கசந்துவிட்டாய்

இன்றுமுற் றின்பம் புகட்டாய்

என்னையு முறங்கவொட்டாய் - ஆற்று

மாகன கிரீடியறி

மாதவனுக் கன்புபுரி

மேகன கருணைகிரி

முத்தையேந்திரன் மாலுபுரி - ஆற்று

## சரசவல்லியைப் பாங்கி விரைவுதல்

## விருத்தம்

59. முதுமுத் தமிழ்தேர் கருணைகிரி

முத்தை யேந்திரன் முறைதிகழூர்

மதுரக் கனியே மதிமதவேள்

வசந்தங் குயில்வா ரீதியினொடு

மெதுசெப் பினைமற் றதுநான்

கேட்டிட லாகாதோ என்னதடை?

புதுமைக் கருத்தை யிதுவெனத்தேன்

பொழிவாய் திறந்து மொழிவாயே !

## தரு

**இராகம் - செஞ்சுருட்டி** **தாளம் - ஏகதாளம்**

60\. சுகிர்தகுண சனகாதி விரதர் வந்து

தொழுதேத்துங் கருணைகிரி

(ஓலைச்சுவடியில் ஓர் ஏடு விடுபட்டுள்ளது)

## தரு

61\. ... ... ...

உதவி எனக்கார் சகியன்னமே - நீயின்று

என்னைப் பரிசோதிப்பது

என்ன வஞ்சனையாமோ வின்னமே

சன்னை குறிப்பேதுக்குத்

தாய்க்கொளித்த சூலுண்டோ வில்லையே !

முன்னைத் தெரியாமல்

வீண்மோசம் போயினேன் கேளென் -

சொல்லையே

கேள்விமலன் கருணைகிரி முத்தைய

துரைமுன் ஏகினேன்

இருதோள் விமலன் கருணைகிரி

தொழில்புரி மதனாற்புண் ணாகினேன் !

வாள்விசை யனையன் மஎஞ்சச்

சக்கரவர்த்தியை நோக்கினேன்

மாலைநீள் விசையின் நிமிடமும்

துயில்வது நீக்கினேன் !

கோகனக வதனகுரிவார் குலநிதிபான் முந்தினேன்

- உடன்

மாகனக வதனமணி மேகலையை யங்கே

சிந்தினேன் !

மோகனனைக் கவளமுரி யானையிற்கண்டு

சொக்கினேன் - வேர்வை

யாகனணைக் கவளராசை வலையினுட் சிக்கினேன்!

மோடிமுத்து முத்துமங்கைய முத்தையேந்திரன்
மைந்தனை வாழ்த்தினேன் - மதி
வாடிமுத்து மங்கைய வளையுந்
துகிலும் வீழ்த்தினேன் !

வேடுவப் படைகளை வென்றகடவூர்
வேந்தைச் சேவித்தேன் - மனை
யூடுவர் படைகளை உண்டார்போன்
றெவரையுங் கோவித்தேன் !

## சரசவல்லியைப் பார்த்துப் பாங்கி பழித்தல்

## விருத்தம்

62. கானரச விங்கிதன் மளைசைக்
கருணைகிரி முத்தைய சாமி
ஆனதுரை தன்பவனி கண்டேன்
அவன்மேல் மயல்கொண்டேன் என்றாய்
மானமடை மங்கையருக்கு ஒழுங்கே
மருங்கா நமது மரபினுக்கு

*மீன மிதுவன்றோ உனக்கேன்*

*இந்தப் புத்தி இளங்குயிலே !*

## சரசவல்லி பாங்கிக்குப் பிரபுவின் பெருமையினை எடுத்துச் சொல்லுதல்

### தரு

### கண்ணிகள்

**இராகம் - நீலாம்புரி** **தாளம் - ஆதி**

63. *வரிசைத்துரைக் கருணைகிரி முத்தையவுசித*

*வள்ளற் குவமையுண்டோ சகியே ?*

*அருமைக்கிசைந்த வந்தத்தரும பிரபுகீர்த்தியை*

*அறியாதவர் ஆரடி சகியே ?*

*நீதர் கருணைகிரி நாதர் செங்கமல*

*மின்னிசை கடாக்ஷவிலாசன் சகியே*

*கீதமுதிர் தமிழ்விநோதன் மளசைநகர்க்*

*கெம்பீரச் சக்ரவர்த்தி சகியே !*

*தீரகம்பள குரிவார்குலந் தனிலுயர்*

*திவ்யகுண சல்லாபன் சகியே !*

... ... ...

*(மூன்று ஏடுகள் விடுபட்டன)*

## இதுவுமது

### கொச்சகம்

64. சந்தக் குவிமுலையாய் தாமதியா மற்கனிவு
முந்தக் கருணைகிரி முத்தையவேள் பேட்டிகண்டு
சொந்தத் தொடுதூது சொல்லியெனைக்
காப்பாயே
எந்தப் பிறப்பினும் நின்னிட்டந் தவிரேனே !

### தரு

**இராகம் - சுருட்டி** **தாளம் - சாப்பு**

65. துரைதனைக் கண்டு சொல்லிவா மானே
தூதினுக்குத் தகுந்த தோகைநீ தானே !
கருதலர் கோரப் பொருள்புய பாரக்
கருணைகிரி முத்தைய கர்ணாவ தார
- துரை

தினமிது நன்றே கனிவோடு சென்றே
சித்தினி உனைமெத்தத் தேடினள் என்றே !
- துரை

மனதிசை வாகத் தனதில னேக
வந்தனவுப சார வகையால்வி பேக

- துரை

தடையினி யென்ன குடைதிக ழுன்ன
சத்ரபதி யாகிய சரசசம் பன்ன

- துரை

கடிதிகழ் பூவுங் கொடியநி லாவுங்
காந்தா திருக்கும் படிகடபுரி மேவும் -
துரைதனைக் கண்டு சொல்லிவா மானே !

## இதுவுமது

## விருத்தம்

66. வேலை யாயினும் நெடியவில்லை யாயினும்
ஏந்தி வருவார்க் கெந்த
மூலை யாயினும் அமைமுந் துதிறற்
கருணைகிரி முத்தை யேந்திரன்
காலை யாயினும் படித்தென் காரியமெலாம்
சொலியிக் கணமே முல்லை

மாலை யாயினும் கேட்டுவாங்கி வந்தாலது
மயற்கோர் மருந்தா மானே !

## தரு

**இராகம் - சாகனா** **தாளம் - சாப்பு**

67. மன்னன் முன்னேசென் றன்னமேநீ சொல்லடி !
கன்னல்விற் பய்ய
பின்னிடத் துய்ய
கருணைகிரிமுத் தைய - மன்

மயல்சகி யாது
சுயவறி வேது - மனது
உருகுதே தூது - மன்

தயவனு கூலஞ்
செயவிது காலஞ் - சகியே
என்னடி ஜாலம் ? - மன்

சரிதுகில் காணேன்
வரிவளை பூணேன் - ஜன
நிந்தனைக்கு நாணேன் ! - மன்

விரிமலர் ஆரம்

தரினுமந் நேரம் - விடும்

எனதுவி சாரம் ! - மன்

## சரசவல்லி பாங்கிக்குச் சமயமுரைத்தல்

### விருத்தம்

68. மச்சய மேடைதொறு மஞ்சமய

நெஞ்சமய மதித்தெல் லோகும்

எச்சமய மிகுகடவூர்க் கருணைகிரி

முத்தைய சாமியைநீ கண்டால்

எச்சமய முஞ்சமய மெத்துணியத்

தகாது நினதின்சொற் சொல்லும்

அச்சமய மோர்ந்து குறிப்பதை

விவரித்திடல் வேண்டுமவற்கு மானே !

### தரு

**இராகம் - மாஞ்சி** **தாளம் - ரூபகம்**

69. சமையங்கண் டென்குறிப்பைச் சாமிக்கு

இரகசியமாய்த்

தனித்துச்சொல்லி மாலைவாங்கிச் சடுதியில்

வாபோடி

சிமையங்கண் டனையமுலைத் தேனேநீ கதியின்று
செயகருணை கிரிமுத்தைய தேவேந்திரன்
கொலுவிற்சென்று - சமை

மன்னவர் கூட்டமும் பெரியோர் வர்க்கமும்
தன்னினமும்
வகைவகை யங்கே நெருங்கி மலியு
மனுதினமும்
தன்ம விகாரணை தேவஸ் தானவிசாரணை வல்ல
சாஸ்திர விசாரணை நடக்கும் சம்மதிக்கத்
தகுந்தநல்ல - சமை

வங்கர் கருநாடர் மச்சர் மாளவர் வங்காளர்
வடுகர் திராவிடர் துருக்கர் மகதர்
மலையாளர்
சிங்களர் கன்னடர் துளுவர் சீரைவந்தி யர்யாரும்
திறைகிராமப் படிசெலுத்திச் செங்கை
குவித்திடுவர் நேருஞ் - சமை
மந்திரிகள் அந்தரங்க மனுமுறை நூல்விரிப்பார்
மணியர் சேர்வைகாரர் பரிவாரர் உபசரிப்பார்

தந்திரிகள் காரியப் பிரதானிகள் சம்பிரிதி மார்கள்
சமுகமகலார் பிரபுகள் சாடைகள்பல
ரெதிர்பார்ப் பார்கள் - சமை

சன்னதுகள் கையொப்ப மாந்தரு செலவும் வரவும்
தவறாது எழுதும் கணக்கர்சத்த மெங்கும்
பரவும்
மின்னலிடை யார்பரத வேடிக்கை பாடகர் காண
வித்தைதனித் தனிருசிக்கும் விவரிப்பதற்
கிணக்க மான - சமை
சொக்குள காமிகள் வலியத் தூதுவிட்ட மயிலுந்
சுருதிவண்டுங் கிளிப்பிள் ளையுஞ் சோலை
இளங்குயிலும்
பக்குவமா நாகணவாய்ப் பக்ஷியும் வெள்ளனப்
பேடும்
பாண்டியனை வேண்டியெந்தப் பக்கத்தினும்
பரிந்து கூடும் - சமை

செய்கைகளாற் பிசகினரைத் தெண்டிப்பது முண்டு
சீறுந்திசை கேட்டுநிற்கும் சேனைமதங்
கொண்டு

மெய்கனிய வனிதையரை மென்மலர்ப்பஞ்
சணைமீது
மேவுகல வியினூடு வேறொன்றையும்
மனநாடாது - சமை

தயவுபெறக் குடிகளெலாஞ் சன்னதிகாத் திருக்கும்
தமிழ்வாணர் தங்கவிதா பிரசங்கம்
இன்பம்பெருக்கும்
வயன்மளைசைக் கதிபதியாய் வளர்குரிவார்
குலதீபன்
மாங்கருணை கிரிமுத்தைய மகராஜசற்குண
சல்லாபன் ! - சமை

## கூடல் விளைப்பது

## விருத்தம்

70. முகிலைவென்ற கருணைகிரி முத்தைய பூபதிக்(கு)
உனது மோகங் கூறி
மகிழ்சுகந்த மலர்மாலை வாங்கியொரு
நொடிக்குள்
இங்கு வருஅவே னென்று

விகிதவின்ப ரசவல்லி விரைந்து நடந்தனள்

இடைபொன் மேனி வாடத்

துகினிதம்ப மதர்க்க முலைசெழிக் கின்றாள்

கூடலங்கே சுழிக்கின் றாளே !

## தரு

**இராகம் - பியாகு** **தாளம் - ரூபகம்**

71. கொஞ்சியெனைக் கூடுவானெனிற் கூடவே

கூடாய் - என்

கோரிக்கைக்(கு) ஈடாய் !

விஞ்சுமள சைக்கதிபன் கடவூர்மேவு சக்ரேசன்

- கொடை

மஞ்சுகருணை கிரிமுத்தைய சன்மார்க்க விசுவாசன்!

மாமதன உல்லாசன் !! - கொஞ்சி

வந்து புனுகணிந்து புதியமல்லிகை சூட்டி - முத்தந்

தந்து தழுவிமுந்து மதுரசாரத்தை யூட்டிப் - பின்

சன்னதங் காட்டி ! - கொஞ்சி

செண்டுமுலை கைக்கொண்டு நெருடிச்

சேலையை நீக்கித் தள்ளி

கண்டுமன திரண்டுமிணங்கக் காதலுண் டாக்கி

மோககுகந். தேக்கி ! - கொஞ்சி

சங்கமெச்சு சொற்கிங்க முத்தமஜன

உபகாரனெனும்

எங்கள்முத்து மங்கைய முத்தையதெய்

வேந்திரகுமாரன்

வண்டிசைமலர்த் தாரன் ! - கொஞ்சி

## இதுவுமது

## விருத்தம்

72. கம்பமத கயநடத்துங் கருணைகிரி

முத்தையமால் கலவி வேண்டிச்

செம்பவள விரல்களழுத் திடக்கூடல்

சுழிக்குமந்தச் செழும்பொற் பாவை

அம்பகமம் பகமாக வரியசரி

அணிகள்சரி யணிக ளாக

வம்படருந் தனதுகந்த மாதனமு

மதுவாக அருந்தி னாளே !

## தரு

**இராகம் - நாதநாமக்கிரியை தாளம் - ஆதி**

73. மோடிசெய் கருணைகிரி முத்தைய
பாண்டியனைக்
கூடிவரு வாரெனென்றாற் கூடலேநீ கூடுவாய்! -
மோடி

தேடிய புலவர்க்கருள் செய்குரிவார் குலநிதி
நீடிய புகழ்க்கடவூர் நீத சக்ராதிபதி - மோடி

அங்கணுகு மின்பரச வன்னமவன் கொலுக்கண்டு
சங்கதிகளெல் லாஞ்சொல்லச் சம்மதித்
தாசைகொண்டு - மோடி

துட்டமன் மதப்பயலுந் தூரத்தி லோடி ஒதுங்க
வட்டவெண் ணிலாவும் பாவி மாங்குயிலும்
பதுங்க - மோடி

கொஞ்சமுந் தடையில்லாமல் கோரிய
படியேயிந்த
மஞ்சமிசைக் கொஞ்சி மணிமார்பின் முலையழுந்த
- மோடி

## குறத்தி வருவது

### விருத்தம்

74. சிலைமதனச் சரம்பாயச் சினந்தெழு
    சந்திரன் காயச் சிந்தை யோய
நிலைதளரு மருட்சி கொண்டு
    ... ... ...

(ஓர் ஏடு விடுபட்டது)

### தரு

75. ... ... ...
மார்பினிற் குன்றிமணி வடமின்னிட
மேனைகைக்குங் கனவெட்கமே முன்னிட -
கருணை

மைந்தர்க் கிசைந்த வலதுகை பார்த்தந்த
    மாதர்க் கிடதுமை வன்மை மதித்தெந்தச்
சந்தர்ப்ப காரிய சமாசாரமு முந்தத்
    தான்கண்ட தென்னச் சரியாய்ச்கொலுஞ்
சந்தக் - கருணை
உற்ற கோடாங்கி உடுக்கை முதன்மற்று
    முற்பனமா யங்கங்குள்ள முற்றும்
வெற்றி தரும்ஒரு விஞ்சையினாற் சற்றும்
    மீளு தடைக்கு விசேடத் தலஞ்சுற்றும்

கருணை மலைகாணக் குறவஞ்சி -

வந்தாளே கெஞ்சி - காமவேளும்

கலங்கும்படி கொஞ்சி !

## இதுவுமது

## விருத்தம்

76. குருவினடி தொழுங்கருணை கிரிமுத்தை

யேந்திரன் மலைக்குற வஞ்சிப்பெண்

இருமுலையை எதிர்ந்தவுடன் எத்தனையோ

மதன்கை முலையெதிர வேங்கிச்

சுருதிமுனி வோருமந்தத் துறைமுனி

வோராகி மெத்தச்சுழுன் றாரென்றார்

பருவநய அவள்வடி வெப்படிப் பகர்வ(து)

எவர்க்குமதி பதைத்தி டாதே !

## தரு

**இராகம் - செஞ்சுட்டி** **தாளம் - ஆதி**

77. மலைவளர் திவ்விய குறவஞ்சி வந்தாளே !

கலைவளர் தீரன் சிலைரகு வீரன்

காமலி வயல்வள மைகட லூரன்

முல்லைத் தாமக் கருணைகிரி முத்தைய

மாரன் ! - மலை

பரிமளம் நீடி விரிமலர் சூடிப்
பற்பல திக்கு மதிக்கும்படி மோடி - யொடு
பொற்பணி மின்னப் பிரபுவின் புகழ்பாடி ! -
மலை

இணைவிழி நல்ல கணைகளை வெல்ல
விஞ்சுதலிலா ரதியுமெதி ரல்ல - எனக்
கொஞ்சு சரசவல்லி முன்குறி சொல்ல - மலை

முனைவடி வேலன் தனைநினை சீலன்
முத்து மங்கைய முத்தையமுகில் பாலன் - என்ன
சத்ர கருணைகிரி முத்தைய லோலன்
மலைவளர் திவ்விய குறவஞ்சி வந்தாளே !

## கவிக் கருத்து

## கொச்சகம்

78. கங்குலவு செவ்வேள் கருணைகிரி முத்தையமால்
பொங்குபுகழ் பாடிப் புகுந்தகுற வஞ்சிதனை
மங்குலெதிர் தோகை மயில்போல் மகிழ்ந்துகண்டு
தங்குமதி மோகச் சரசவல்லி ...

(ஓர் ஓலை விடுபட்டது)

## மலைவளம்

79. கருணைகிரி மலையெங்கள் மலையே !

கலவியி லூடிய கலிவான் கற்பகத்தை விரும்புங்

கற்கடக ராசியிடை கண்டுஎறி திரும்பும்

நிலவகலா மானுமங்கே நின்றுவிளை யாடும் !

நேரு மென்போல் வாள்விழியை

நெடுவலையென் றோடும்

குலவுதிவா கரனிரதக் குதிரைதினந் தோறும்

குடித்துவிடாய் தணிந்துசெல்லக்

குளிர்சுனைநீர் ஊறும்

மலரணிசூழ் புயகருணை கிரிமுத்தைய

பாண்டியன்

மனதுமகிழ் செழுங்கருணை மலையெங்கள்

மலையே !

சந்தனமுந் தேவவரி சந்தனமு மடுக்கும்

கானமிசை வண்டுகள்சந் தானமிசை படுக்கும்

நந்தனமே லவனுமெச்சு நந்தனமே எங்கும்

நயமணியும் தரளமுமே நவமணியுந் தங்கும்

பந்தனமா மனத்தருந்த பந்தனமா நினைவார்

பலவேளை தொருமுயன்று பலவேலை

முனைவார்

வந்தனபூ பதிகருணை கிரிமுத்தைய பாண்டியன்

வன்புயம்போல் வளர்கருணை மலையெங்கள்

மலையே !

தேக்குவன வேங்கைவிண்ணை நோக்குவன

வாகும்

திசையகில முலவமண மிசையகில சோகும்

ஆக்குமிரு டீபமென நீக்குமிரு பொழுதும்

அரிதான சோதிமரம் விரிதான முழுதும்

கோக்குமதி வேயழுத்தத் தாக்குமதி பொழியும்

குன்றாவின் னமுதுதினை முன்றாவி வழியும்

வாக்குறுதி மான்கருணை கிரிமுத்தைய

பாண்டியன்

மகிமைவிளங் கியகருணை மலையெங்கள்

மலையே !

ஏலமிடை வனந்தோறும் தக்கோல மிடைவீறும்

எங்குமே கமகமெனக் குங்குமமே நாறும்

சாலமது வருவிபொங்கி ஓலமது காட்டும்
தகுந்தேவ தாரநிழல் புகுந்தேவ நாட்டும்
சீலமலர் வளர்பிரமன் போலமலர் வருவார்
சித்துவகை கோடிதெரி வித்துவகை தருவார்
மாலமர்த குணகருணை கிரிமுத்தைய பாண்டியன்
மகிமைவிளங் கியகருணை மலையெங்கள்
மலையே !

கயவர்க ளும்பழக வநேகந்தரு வரிசைகள்
கனியுதவும் படிதேவ கந்தருவ ரிசைகள்
இயல்பினி ளங்கிளிசொல் நேரின்பர தவரம்மை
இங்கிதமே னகைமுதலோ ரின்பரத வரம்மை
நயமயில்சந் ததநடத்து நாகரிக மிசையும்
நான்மலர்வா சனைவீசும் நாகரிக மிசையும்
வயமுலவு புயகருணை கிரிமுத்தைய பாண்டியன்
மகிமைவிளங் கியகருணை மலையெங்கள்
மலையே !

சகலபயங் களுமொழித்தங் கிதபரமுங் கொடுக்கும்
சரநதிகள் சுரநதியும் தணியவுவட் டெடுக்கும்
திகழ்சருகுஞ் சிலையாகச் செய்புனலொன் றுண்டு
தேவரும்யா வருங்கலந்து திரிவார்வளங்
கண்டு

பகலிரவுங் குகைகள்தொறும் பரமரக சியங்கள்
பலவழங்கு மலைதெரிந்து பகரவொண்ணா
நயங்கள்
மகபதிநங் கருணைகிரி முத்தையபூ பாலன்
மனதுமகிழ் செமுங்கருணை மலையெங்கள்
மலையே !

கிழவர்மைந்த ராகமைந்தர் கிழவர்தன்மை பூணக்
கீழுலகு மேலுலகீ ரேழுலகுங் காணத்
தழவிருந்து வரவிரிந்த சமுத்திரத்து நடக்கச்
சர்ப்பமெடுத் தினிதுஆட்டச் சத்துருவைக்
கடக்கப்

பழகியெந்த மிருகமுஞ்சொற் படியடங்க வெவரும்
பணிபுரியத் தகுமருந்து பலதிசையு நிவரும்
மழவனெங்கள் கருணைகிரி முத்தையபூ பாலன்
மனதுமகிழ் செழுங்கருணை மலையெங்கள்
மலையே !

புருடரைமங் கையர்வசியம் புரியவெகு பிரியப்
புருடருமங் கையரையது போல்வசியம் புரியத்

தருநிதியஞ் சனமறைப்பத் தம்பனம்பா ராட்டச்
சரீரசவா தமுமுடிக்கச் சகலசித்துங் காட்டச்

தெருளுமருந் தொடுகனசஞ் சீவிமற்றுஞ்
செழிக்கும்
திகழ்புதுமை யனந்தமெந்தத்
திசையினும்பொன் கொழிக்கும்
மருவலரும் புகழ்கருணை கிரீமுத்தைய பாண்டியன்
வளர்ந்தேற வளர்கருணை மலையெங்கள்
மலையே !

கலசமுனி மவுனதவங் கருதுகின்ற மலையே
கருணைகிரி வரதனுளங் கனியநின்ற மலையே
உலவிபுவி மான்பகைதீர்ந் துறவுமிகு மலையே
உவமையிலா துலகுதொழ உயர்வுதகு
மலையே
வலனுசித கருணைகிரி முத்தையவேள் கிளைசேர்
வளர்ந்தேற வளர்கருணை மலையெங்கள்
மலையே

திடமாக மனிவீசித் திகழ்புனப்புட் கடிவோம்
தேனெடுத்த கிழங்குகெல்லித் தெளிசுனைநீர்
படிவோம்

அடலானை களின்மருப்பால் அரியதினை
யிடிப்போம்
அறுத்தவரைத் தவறவிடோம் தொடுத்தபடி
முடிப்போம்

நடவாத வழிநடவோம் நாங்கள்குறச் சாதி
நல்லகுறி சொல்லுவது நாட்டினிற்பிரக் யாதி
மடவார்மன் மதன்கருணை கிரிமுத்தைய
பாண்டியன்
மகிழ்கருணை மலையெங்கள் மாமலைகா ணம்மே!

சோலைமலை யெனக்கிளைய வாலைமலை
யம்மே
தோகைமலை தமக்கைதனச் கோகைமலை
யம்மே
பாலைமலை யென்னுடைய பாட்டிமலை யம்மே
பாட்டனுக்குக் காணிமலை பன்றிமலை யம்மே
சாலைமலி தும்பிமலை தம்பிமலை யம்மே
தமிழ்முனிதென் சிமையமலை தமையன்மலை
யம்மே

*மாலைதிகழ் புயகருணை கிரிமுத்தைய பாண்டியன்*

*மகிழ்கருணை மலைநாங்கள் வாழுமலை*

*யம்மே !*

(கற்கடகம் - நண்டு, எறி - அலை; திவாகரன் - ஞாயிறு; இருடீபம் = இருள் + தீபம், அகிலசோகு = அகில் + அசோகு, முன்றாவி = முன் + தாவி; குன்றாவின்னமுது = குன்றா + இன்னமுது, தக்கோலம் - வால்மிளகு, புட்கடிவோம் - புள்ளைக்கடிவோம்)

## சரசவல்லி குறத்தியை நாட்டுவளமும் நகர்வளமும் வினாவுதல்

*80. பாட்டுவள ரிசைமளைச கருணைகிரி*

*முத்தைய பூபதியாஞ் செல்வத்*

*தேட்டுவள வன்மலைரஞ் சிதவளநீ*

*சொலச்சொலச்செந் தேனே போலும்*

*வாட்டுவள வென்றமதர் வரிநெடுங்கட்*

*குறவஞ்சி மயிலே மற்றுன்*

நாட்டுவள மெனக்குநன்றாய் நவின்றுசொந்த

நகர்வளமும் நவிலு வாயே !

## குறத்தி நாட்டுவளஞ் சொல்லுதல்

### தரு

**இராகம் - சங்கராபரணம்** **தாளம் - சாப்பு**

81. மணியிரு நிதிமன்னி வயங்க

வசந்த மோங்க வளர்சனந் தங்க

பணிபுலவர் பலருங் குலாவப்

பசையரம்பை யப்பால் வேழ மேவத்

தணிவறும் மவராவதி நேரும்

தழையு மின்பத் தமிழ்மலர்த் தாரும்

அணிகருணை கிரிமுத்தை யேந்திரன்

ஆனைகுந்தி நன்னா டெங்கள் நாமே !

கன்னல் வாழை கமுகுதென் பூகங்

கனிவி சேட வர்க்கங்க ளநேகம்

வன்ன வாணற் கோனர சாளு

மணிகொள் பந்தல் அணியென நீளும்

இன்ன வாறு தெரிந்துகொண் டாடு
இயல்பு போற்குயில் எங்கும்பண் பாடும்
அன்ன தாரு கருணைகிரி முத்தை
யாதிப னானை குந்திநன் னாடே !

வரிசை யாக விளைந்த வயலும்
மலர்ந்த சோலை விளைந்த வயலுந்
தெரிய நேகந் தரளங் குலாவுஞ்
செருக்கி யன்னத் திரளங் குலாவும்
பரிய மேதி யினங்கய மேவும்
படிந்தெ முந்தெதிர் பங்கய மேயும்
அரியை நேர்கரு ணைகிரி முத்தையன்
ஆனை குந்திநன் னாடெங்கள் நாடே !

கருவி வானொடுங் காமர மோதும்
களிக்கும் பூவைகள் காமர மோதும்
பருவ வாளை பலவிற் குதிக்கும்
படிச்செந் தேன்செய் பலவிற் குதிக்கும்
சருவி யேர்கள் சலனந் துடைக்கும்
தமிழ்க்கு வாணர் சலனஞ் துடைக்கும்

அருமை மால்கரு ணைகிரி முத்தையன்
ஆனை குந்திநன் னாடெங்கள் நாடே !

மங்கை மார்சொற் கிளைக்குங் கிளைக்கு
மனங்கை மீறுங் கிளைக்குங் கிளைக்கும்
கொங்கை காணின் மலையு மலையும்
குழங்கு லாவு மலையு மலையும்
பொங்கர் வாவி பணைக்கும் பணைக்கும்
பொருந்தி யோடப் பணைக்கும் பணைக்கும்
அங்கர் கோன்கரு ணைகிரி முத்தையன்
ஆனை குந்திநன் னாடெங்கள் நாடே !

வாவி மூழ்கி மணிக்கரை துன்று
மகிட கோடியை வான்முகில் என்று
தூவி மாமயில் ஆடிய சோலை
தொலுஞ்ச னங்களோ டடங்குவ வீலை
தேவர் தாமியை யாதது நித்தம்
திருந்தச் சீர்தெரி சிக்குநி மித்தம்
ஆவல் வேள்கரு ணைகிரி முத்தையன்
ஆனை குந்திநன் னாடெங்கள் நாடே !

குளமெ லாஞ்சங் கினமுத் துயிர்க்கும்
குருகை வாந்தங் கருவென் றயிர்க்கும்
களாம லாங்குவி நெற்கள்விண் முட்டும்
கரையெ லாமுக் கனிநறை கொட்டும்
வளமெ லாம்கயல் கண்டுகு திக்கும்
மருங்கெ லாம்பயிர் வர்க்கங் கதிக்கும்
தளமெ லாம்கொள் கருணை கிரிமுத்
தைய கிரீடி தழைக்கின்ற நாடே !

கருவ கும்ப விளமுலை யார்கட்
கலக மன்றிக் கலகமங் கில்லை
தெருளி னந்த மகளிர் மருங்குற்
சிறுமை யன்றிச் சிறுமைமற் றில்லை
வருவி ருந்தெதிர் பார்த்து வருந்திடு
வாட்ட மன்றியோர் வாட்டமு மில்லை
தருவை வென்ற கருணை கிரிமுத்
தைய தியாக தயாநிதி நாடே !

வளையக் காண்பது வேள்கைக் கரும்பு
மயங்கக் காண்பது வார்கட் சுரும்பு

*களையக் காண்பது சிந்தையிற் கள்ளம்*

*கலங்கக் காண்பது கான்புது வெள்ளம்*

*உளையக் காண்பது சூன்முதிர் சங்கம்*

*உடையக் காண்பது உலாவு தரங்கம்*

*கிளைமிக் கோங்கிய எங்கள் கருணை*

*கிரிமுத் தைய கிரீடிநன் னாடே !*

*வேத வேள்வி கிளைக்கின்ற நாடு*

*விழாவ நேகம் விளைக்கின்ற நாடு*

*மாத மாதமும் மாரிபெய் நாடு*

*வளங்க ளோங்கி மகிழ்வுசெய் நாடு*

*போத மேன்மை திருந்திய நாடு*

*புகழ்பொன் வாணி பொருந்திய நாடு*

*கீத நாத விநோத கருணை*

*கிரிமுத் தைய கிரீடிநன் னாடே !*

(மன்னி-நிலைத்து; கன்னல்-கரும்பு; தரளம்-முத்து; அரி-விஷ்ணு; வாளை-வாளை மீன்; மனங்கை மீறும்=மனம்+கைமீறும்; வாள-குளம்; முகில்-மேகம்; கயல்-மீன்; கான்-காடு; தரங்கம்-அலை; மாரி-மழை)

## குறத்தி நகர்வளம் சொல்லுதல்

### விருத்தம்

82. மோனைதங்கு தமிழ்ப்பிரசங்க முழங்குகொலுக்
கருணைகிரி
முத்தை யேந்திரன்
ஆனைகுந்தி நாட்டுவளம் அனந்தனுஞ்சொல்
லரிதெனின்மற்
றார்தான் சொல்வார்?
மானைவென்ற விழிச்சரசமா மயிலே
ஈகையினால்
வறியோர்க் கெல்லாம்
சோனைமஞ்சு நிகர்த்தவன் சொந்தநகர்
வளத்தையினிச்
சொல்லு வேனே !

(மஞ்சு-மேகம், சோனை-மழை)

### தரு

**இராகம்-சங்கராபரணம்** **தாளம்-சாப்பு**

83. வெள்ளியால் வெண்டளங்கள் வகுத்து-மிகும்
பொற்றூண்கள் விளங்கத் தொகுத்து

தெள்ளிதாம் வயிரச் சுவர்வாய்ந்து
திருந்தமேற் பலசெம் மணிவேய்ந்து
தள்ளிடா வகிற்சந் தனக்கந்தஞ்
தழைக்கு மாடசமுக மணந்தம்
வள்ளியோன் கருணைகிரி முத்தையமால்
மளசை நல்லூர் எங்களூரே !

அரியநீ லக்கல்லால் வரிகட்டி
அதற்குமேற் பளிங்கால் சுவரொட்டி
உரியதாய் வச்ரது ணிரைநாட்டி
உயர்வைடூரிய உத்திர மாட்டிப்
பரியமா முத்தமைத்துப் பொன்வேயும்
பலவொண்மாடம் மணிமதி தோயும்
வரிசைசூர் கருணைகிரி முத்தையமால்
மளசைநல் லூரெங்கள் ஊரே !

மரகதம் பவளம் பத்ம ராகம்
வயிரம் வைடூரிய வர்க்கச முகம்
தரளம் இந்திர நீலமின் கோமே
தகங்க லந்து தனித்தனி தாமே

திருவி னங்க வலங்கரித் தோங்கு
சிகர மாடஞ் செழிக்குமெப் பாங்கும்
விருதிடுங் கருணை கிரிமுத் தையவேள்
மளைசை நல்லூ ரெங்க ளூரே !

சிகர கோபுர மெங்குந் துலங்கும்
திவா கரன்பரித் தேரை விலக்கும்
மகர தோரண வாயில்எஞ் ஞான்றும்
வழியென் றேயது வந்திடத் தோன்றும்
சகல மாளிகை மீதுந் தரிக்கும்
தரளந் தேவர் தலத்தைச் சிரிக்கும்
சுககரு ணைகிரி முத்தை யேந்திர
துறைமளைசை நல்லூ ரெங்க ளூரே !

தடமெ லாங்கமழ் குங்கும சாந்தம்
தலமெ லாம்பதி சந்திர காந்தம்
மடமெ லாந்தின முந்தன்ம தான
மறுகெலாம் மண்டபம் பொன்வி மானம்
இடமெ லாம்பல பூரண கும்பம்
எதிரெ லாம்அவ் விளையவர் விம்பம்

திடமெ வாம்கரு ணைகிரி முத்தையன்

தென்மளசை நல்லூ ரெங்க ளூரே !

உயர்பொன் மாட நெடுங்கொடி யான

ஒழுங்கு தேவரு வாச கிரீடை

வியர்வு தீர விசிறிகள் பொலும்

விதம்பெற் றேதென்றல் வீசுமெக் காலும்

புயலெ லாம்பொழி தாரைகள் தோறும்

புகுந்த காரகிற் பூம்புகை நாளும்

செயகரு ணைகிரி முத்தைய பிரபு

தென்மளசை நல்லூ ரெங்க ளூரே !

மணித னங்கு விவாக மடுக்கு

மறுகு தோறும் விவாக மடுக்குங்

கணித மின்றிமிக் காவன மேலுங்

கலசந் தோன்றுமெக் காவன மேலும்

தணிவில் செல்வர் தந்தாவன முந்தும்

தகார்வ ணங்கத் தந்தாவள முந்தும்

திணிகரு ணைகிரி முத்தைய பிரபு

தென்மளசை நல்லூ ரெங் ளூரே !

நேர னந்த விதம்பந் தடிக்க
    நெருங்கு மாதர் நிதம்பந் தடிக்க
வார டுக்கும் பதனம் புடைக்கும்
    மணாளர் வீறை மதனம் புடைக்கும்
சேர வின்பங் கொத்தங் களிக்கும்
    திறத்தி னாலவர் சித்தங் களிக்கும்
தார ணிந்த கருணைகிரி முத்தைய
    கிரீடி தழைத்தி ருக்குநல் லூரே !

பனிநி லாமணி மேடைக ளாடப்
    படருந் தோறும் பகலினுங் கூடப்
வனிதை மார்தம் முகத்தினைக் கண்டு
    வளருஞ் சோதி மதியெனக் கொண்டு
கனியு நீர்வய லோடி முளைக்கும்
    கரும்பு செந்நெற் கதிர்கள் விளைக்கும்
இனிய வேசொல் கருணை கிரிமுத்தை
    யேந்திரன் வாழ்வுற் றிருக்குநல் லூரே !

வீடெ வாஞ்செந் திருமகள் வாசம்
    வெளியெ லாம்பொன் விசித்திரவி லாசம்

மாடெ லாங்கதிர் மாமணி மேடை
    வயினெ லாங்க லவைப்புது வாடை
ஊடெ லாங்கன மும்முரசு ஓதை
    ஒழுங்கெ லாம்வண்டு லாமலர் கோதை
ஈடெ லாங்கொள் கருணைகிரி முத்தை
    யேந்திரன் வாழ்வுற் றிருக்குநல் லூரே !

அய்யர் வீதிமெய் வேத சமுத்திரம்
    அரசர் வீதி அனைத்தும்வி சித்திரம்
துய்ய ரான வணிகர்தம் வீதி
    சொலுங்கு பேரன் தொழும்படி நீதி
செய்ய மேழி யதிபர் தெருக்கள்
    செகத்தை முந்துள தேவத ருக்கள்
செய்ய மார்ப கருணைகிரி முத்தையன்
    மளசை நல்லூ ரெங்க ளூரே !

கடைநல் லாரு மிரதியை வெல்வர்
    கழித்த மைந்தருங் காமனிற் செல்வர்
கொடைநல் லாரு முகிற்கிளை யார்கள்
    குறையுள் ளோருங் குபேரனொப் போர்கள்

*இடையில் வாய்மை வழாதவர் யாரு*

*மெவர்க்கு மெவ்வகை யின்பமு நேரு*

*தடையில் சேனை கருணைகிரி முத்தையன்*

*மளசை நல்லூ ரெங்க ளூரே !*

(வெண்டளம் - வெண் + தளம்; பரிய - பெரிய; விருது - பரிசு; மகரம் - மீன்; தன்ம - தரும்; விம்பம் - உருவம்; ஒளி, தந்தாவளம் - யானை; விதம்பந்தடிக்க = விதம் + பந்தடிக்க; நிதம்பந்தடிக்க = நிதம்பம் + தடிக்க; நிதம்பம் - அல்குல்; வனிதை - பெண்; வயின் - வீடு; கோதை - பூமாலை; ஓதை - ஒலி; மேழியதிபர் - வேளாண்மக்கள்; தருக்கள் - மரங்கள்)

## சரசவல்லி குறத்தியைக் கிளைவளம் வினாவுதல்

## விருத்தம்

*83. கார்வளமும் தருவளமும் கடந்தோங்கு கங்கைக்*

*கருணைகிரி முத்தையமால் சுருதி நூலுந்*

*திருகிச்சந் திரசூரியர் தெற்குவடக் கானாலும்*

*வாக்குகொஞ்சமும் தப்பமாட்டாள் உடனே*

*சித்தி*

இருமைக் குமரிப்பெண்கள் யார்க்குமெத்

திறத்தோர்க்கும்

ஏறரசர் தமக்குமன்றி மற்றுள பேர்க்கும்

வரன்முறை திரிகால வர்த்தமானமுஞ் சொல்வேன்

வரிபெற்ற தநேகம் வாதிட்டவரை வெல்வேன்!

(கார்-மழை, இருமை-கரிய மை)

## குறிமார்க்கம்

## விருத்தம்

84. சகலதிசை யினும்நடந்து சாதி வித்தை

யானகுறித் தன்மை காட்டி

மிகவுசித வரிசைபல விருது பெற்று

வந்தனென்றாய் வெறும்பேச் சாலென் ?

ககனமதி நிகர்கவிகைக் கருணைகிரி

முத்தைமால் கதிக்கு நாட்டிற்

சுகசரச குறவஞ்சித் தோகாய் நானி

னைத்தகுறி சொல்லு வாயே !

## குறத்தி நிமித்தம் சொல்லுதல்

### தரு

### கண்ணிகள்

**இராகம்-பீல** **தாளம்-ஆதி**

85. கேட்டகுறி முற்றுஞ் சொல்லே னம்மே-எங்கும்
கீர்த்திபெற்ற குறத்திநா னம்மே !
நாட்டினில் எனக்கெதிர் ஏதம்மே ? - ஒரு
நாளுமென் வாக்குப் பொய்யா தம்மே !

- கேட்ட

கஞ்சியேனும் கூழேனும் வாரம்மே -சும்மா
கண்டமட்டும் மண்டுவேன்பா ரம்மே !
வெஞ்சினமும் துக்கினி வையம்மே - இது
மெத்தவும் தாராளக் கையம்மே !

- கேட்ட

பாக்கு வெற்றிலை கொண்டுவா வம்மே - கப்பற்
பாடச் சரக்குங் கொஞ்சந்தா வம்மே !
மேக்கு முலைக் கெவுளிநல னம்மே - சர
மேன்மை யதால்வி சேடபல னம்மே !

- கேட்ட

காக மினிது தும்மல்பல னம்மே - ஆந்தை

ஓசை யுத்தம் மின்பந்தரு மம்மே - கேட்ட

வடமேரு வளைய திண்புய போஜன் - கன

வான்கரு ணைகிரி முத்தைய ராஜன்

கடவூர் மயிலே யென்னபய மம்மே - இனிக்

காரியஞ் சித்தியாம் ஜெயஜெய மம்மே !

- கேட்ட

(வெஞ்சினம் - கறிகாய்த்துணை உணவு; மேக்கு-மேற்கு)

## குறத்தி சொல்லுதல்

## விருத்தம்

86. தரியலர்கள் பணிகருணை கிரிமுத்த

யேந்திரநகர்ச் சரசப் பாவாய்

அரியபல நிமித்தமுநன் கமைந்தனான்

மாநிற முள்ளவனென் றாலுந்

தெரியவொளிர் செங்கோலன் செல்வமன்பு

கல்விபுகழ் சிறந்தோ னாக

வரிசையுட னுனக்கிசைந்த மாப்பிள்ளை

சீக்கிரத்தில் வருவா னம்மே !

(தரியலர் - பகைவர்)

## தரு

இராகம் - தோடி                    தாளம் - ரூபகம்

### கண்ணிகள்

87. பூமிமெழுகு கோலமுமிடு புகழ்கணபதி வையம்மே!
சீதமிகு மலர்புனல் பச்சறுகு சேகரியணி செய்யம்மே!

நிறைவிளக்கொடு நிறைநன்னாழியு
நிறுவவல்பொரி நிரப்பம்மே

வரையல்சர்க்கரை கரும்புமோதக வர்க்கமுமெதிர்
பரப்பம்மே

விதிமுறை தவறாமல் அடைக்காய் வெற்றிலை
பழம்படை யம்மே

கதிர்மதி முகரதியே யினித்தேங்காய் தனையெடுத்
துடையம்மே

தூபம்கொடு கற்பூரம் பொருத்தித்துதி
மந்திரத்தைச்

தாபம்தணிந்து லாபம்பலிக்கத் தாழ்ந்தெழுந்துகை
குவியம்மே

கம்பளக் குரிவார்சிரோன்மணி கல்விதெறி
நிதானவான்

சம்பிரமபிரபு சரசசற்குண தானகர்ண சமானவான்

மளைசமுத்து மங்கையமுத்தைய வேள்மைந்தன்

அரசர்க்கிந்திரன்

தளசமுத்ரநம் கருணைகிரி முத்தைய

ஜெயவரிச்சந்திரன்

நெறிநடத்து மிவ்வூரிலுன் மனநிலைசொல்வேன்

கண்டுபாரம்மே !

குறியைநிச் சயமாக நினைத்துக்கொண்டு

கலக்கந்தீரம்மே !

(சம்பிரமம்-ஏற்றம்; தளசமுத்ர=தள+சமுத்ர)

## குறத்தி சொல்லுதல்

## விருத்தம்

88. நடன நுங்க திடது ரங்க கருணைகிரி

முத்தைநன் னரேந்திர நாட்டில்

வடமி ணங்கு கொங்கை நங்காய் வமுத்துசுப

முகூர்த்த மிதுவகை தப்பாமல்

உடனி ருந்த பேர்களைப் போலுனது மனக்குறி

நான்கண்டு உனக்குச் சொல்லக்

*கடக கங்கணங் குலுங்கப் பொங்கு பங்கையங்*
*கையங் கைசெங் கைகாட்டு !*

(பங்கயம்+கை= பங்கயங்கை; அம்+கை= அங்கை; செம்+கை=செங்கை)

(ஓர் ஏடு விடுபட்டது)

## தரு

**இராகம் - சுருட்டி** **தாளம் - ஆதி**

*89. கைக்குறி நேர்த்தி யம்மே - தளிர்*
*கயங்கக் கமலமலர்*
*மயங்கத் தகுமுனது*
*கைக்குறி நேர்த்தி யம்மே !*

*மைக்கடலினுந் தொனிமிக்க முரசவரிசைக்*
*கருணைகிரி*
*முத்தையதுரையூர் மானே*
*மட மானே*
*மதுரசத் தேனே*
*நிசஞ்சொன் னேனே ! - கைக்குறி*
*இந்த வரிவளைக்கை கந்தரமு மதிக்கவந்த*
*நிருபனுக்கே*

சொந்தமா யெங்கும்

புவி யெங்கும்

தரும்புகழ் தங்கும்

படிவி ளங்கும் ! - கைக்குறி

(கயங்க - கசங்க; கந்தரம்-கழுத்து; நிருபன் - மன்னன்)

கவனர் ஜட்சி கலைக்டர் மெச்சுங்

கருணைகிரி முத்தையமால் கடவூர்ப் பாவாய்

குவளையொத்த நயனநின் கைக்குறி நேர்த்தி

நினைத்த வெல்லாங் கூடும் கூடும்

புவன சக்ரவர்த்தி யினைப்புணர் வன்எனக் -

கைக்குறி

பாலு மமுதும் பலகாலு மழையுந் திசை

நாலு மகிழ்ந்திட மேன்மேலும் மகாபாக்யம்

சவுபாக்யம்

தழைக்கும் வெகு போக்யம் - இது

சிலாக்யம் ! - கைக்குறி

தெள்ளிய தமிழ்வலர் தள்ளி மிடிதணிய

வெள்ளி நவமணி பொன்னள்ளியள்ளித்தியாகம்-
செய்யுமிவ்வரை யோகம்
சித்தியநேகம் ! - கைக்குறி

பங்கமேது மில்லாமல் மங்களா கரகோல
சங்கரேகைக் குலாவு பொங்கமதைப் பாராய் -
பெண்ணே ! பாராய் !

சப்ரமஞ்சமோ மெத்தையோ தலையணையோ
திண்டோ ?
சந்தனமோ பனிநீரோ சர்க்கரையோ
கற்கண்டோ ?
துப்பமைந்த கனிரசமோ துகிலோ நன்னகையோ?
சுவையமுதோ தாம்பூலச் சுருளோ
மாவிகையோ ?

மேகலை கங்கண கடகமென்குழல் சோர்ந்தனவோ
வேள்கலகமோ சுரத வேடிக்கையோ கனவோ?
மாகழங்கோ பந்தோ அம்மனையோ வஞ்சுகமோ?
மயிலோ நம்பிய பாங்கிமார்களின்
வஞ்சகமோ ?

பேய்மயக்கோ குலதெய்வப் பிசகோ

கண்ணேறோ ?

பெரும்புதையலோ பேழைப் பெட்டிகளோ

வேறோ ?

தாய்மிரட்டோ சுதிவீணை தம்புருவின் இனமோ?

தனதுசொந்தக் கிளைவரவோ சடுதியிற்

சோபனமோ ?

மன்னவ ரிவள்பாற்றூது வரவிடுத்த செயலோ

மாதரசி யவர்மீதில் வைத்திருக்கு மயலோ

இன்னபல குறிகளி லெண்ணிய குறியைநேரே

இதுவென இங்கெனக்கு விரித்துரை செய்வீரே!

## குறத்தி குறிசொல்லுதல்

## விருத்தம்

90. கதிக்குரு மெய்த்தவ கருணா கடாட்சங்

காணுருரோ மச்சிலிர்ப்பிக் கனமா மேன்மேல்

உதிக்குரு சன்னதத மெனக்குச் சக்கதேவி

ஓமற் பேசு மெனதுதடு நாவுங்

குதிக்குரு குறளிவந்து முனுமு ணென்று

குணுகுருகா தினிற்சகல குறிப்புந் தோன்ற

துதிக்கு மணனெனுங் கருணைகிரி முத்தைய

துரைநாட்டில் இனிக்குறிநான் சொலக்கே

ளம்மே !

## குறத்தி சொல்லுதல்

### தரு

**இராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதி**

91. சந்தர மிகுந்துவளை துன்னுந் தோளாய்

மலர்த்தூய தாளாய் குறிநான்சொல்லக் கேளாய்!

கொந்தலர் குழலாருட னிந்தநகர் வீதியிற்

கூடிப்பாடி யம்மனைபந் தாடிக்கொண்

டுற்றாய்

மந்தர புயந்ததும்ப வள்ளல் ஒருவன்மத

மால்யானை தனிற்பவனி வந்தருளினான்

அந்தவலங் காரமத யானையைஅங்கே நீகண்(டு)

அஞ்சின விதம்போற் காணுதாசைக் குயிலே!

## சரசவல்லி சொல்லுதல்

92. என்னடி குறவஞ்சி சொன்னபடியே சொல்லாதே
ஏதோ உளறுகிறாய் நீதோ தகமாய்
முன்னொரு விதந்தொடங்கிப் பின்னொரு
விதந்தனில்
முடித்தனையோ சூது படித்தனையோ ?

கன்னமத யானைதனைக் கண்டு பயந்தால்
மையல்
கம்முமோ கனத்து விம்முமோ ?
வன்னவளை சிந்துமோ மதி கொதிக்குமோ
வின்னமார்க்க மென்றறிந் துள்ளவகையைக்
கூறடி !

## குறத்தி சொல்லுதல்

93. கூறுவது அரிதோகொஞ்சங் கூசினேன்
மன்னேயினி
குட்டுவெளி விட்டுநன்றாய்க் கூறக்கேள்
பொண்ணே
வீறும் மதயானையின் மீதுபவனி வந்த
வேந்தனைக் கண்டுகாம விகாரநீ
கொண்டாய்

மாறுதலிலா மமையல் கம்முவதும் பந்து
வாரிள முலைவர வரவிம் முவதும்
தேறுகைவளை யோய்வதுந் திங்கள் காய்வதும்
அதின்செய்கைகள் ஐயமென்ன
தெரிந்துகொள் ளம்மே !

## சரசவல்லி சொல்லுதல்

94. ஆரடிகுற வஞ்சியோ ரற்பமுமுன் பின்யோசி
யாமலெனைக் காமியென்றாய்
அச்சமகன்றாய்
நேரமிதிலே வெகுநிதானி போலவே வந்து
நீதெரிவித்து விட்டகுறி நிச்சய மானால்

சீருலவு சற்புருட மேருவென நேருமச்
செல்வப்பிர புவினுடைய திவ்ய காமமும்
ஊருமலர்த் தாருமெனக் குள்ளபடி யேசொல்லி
ஒப்பிக்க வேணுஞ் சும்மாவுனை விடேனடி !

## குறத்தி சொல்லுதல்

95. அன்னவ னிங்குனக்குப் போலார்க்குப்
பழக்கங்குறி
அனைத்தினுமிது கிடையாத வழக்கம்

இன்னபெய ரின்னநக ரின்னதா ரென்றேமதித்

தெப்படி யறிவிக்கிற திவ்வகை நன்றே

சின்னவிடை மோகினிச்செந் தேனேயா

யினுஞ்சக்க

தேவியின் கிருபையினாற் செப்புகின்

றேன்கேள்

கன்னல்வயல் சூழ்கடவூர் காக்குங் குரிவார்குல

கருணைகிரி முத்தைய கர்ணன்தான் அம்மே!

## கவிக்கருத்து

96. பற்பல நிருபரும் பணிந்து துதிக்கப்புகழ்

பாருல கெலாம்பரவப் பாக்யங் கதிக்கக்

கற்பக மெனும்படி கடவூர் தழைக்கும்ஜெய

கருணைகிரி முத்தைய கர்ணன்தா னென்று

பொற்புடை கடலமுதம் போலவினிமை யாயந்தப்

பூங்குற வஞ்கிகுறி புகன்ற வுடனே

வெற்புமெலி யதிரண்டு விம்மியிறு மாந்தடர்

மென்முலை சரசவல்லி மெத்த நாணினாள்!

## குறத்தி சொல்லுதல்

### விருத்தம்

97. முத்தமிழ் முத்துமங்கைய முத்தைய தென்னன்
பெற்ற
மோகனக் கருணைகிரி முத்தைய மன்னன்
சித்தசன்ஒப் பாகநின் சிமிழ்முலை தொட்டுக்
கொஞ்சிச்
சித்தமகி ழுத்தழுவி முத்த மிட்டு
மெத்தவணை கூடிட விரைவில்வரு வானிந்த
வெட்கமுந் தலைவளைப்பும் வீண்பிலுக்
குத்தான்
மத்தகெசத் தில்எதிர்ந்த வள்ளலா மன்னோன்
முல்லை
மாலையுமுனக் கிமைப்பில்வாய்க் கும்பா
ரம்மே !

98. என்னவிவை சொன்னவவ்வி ளங்கருணை
மாமலை
இங்கிதக்குற வஞ்சிக்கெங் குஞ்சரி கைசூழ்
வன்னவுடை வர்க்கமுஞ்சர் வாபரணமுந் திவ்விய
மாணிக்கக்கூ டையும்வச்ர மாத்திரைக் கோலும்

பொன்னுமணி யும்பல புதிய விருதுங் கமழ்பூங்
களபச்சந் தனதாம் பூல மெவையுந்
தன்னுடைய கைகளினாற் சந்தான மேபோல்
மெத்தத்தந்து சரசமோகினி தான்மெச்
சினளே !

## தூது சென்ற பாங்கி மாலை வாங்கி வருதல்

## விருத்தம்

99. தருணபயோ தரக்குறத்தி தனைப்பு கழ்ந்து
திசைநோக்கும் சரச வல்லி
உருக்குனே வியதுதி யெனுந்தா தியவள்
சேதிஓ முங்காய் ஓதிக்
கருதியவா றிணக்கியொல் லைகரு ணைகிரி
முத்தையமால் கவினோர் முல்லை
மருமலர்மா லிகைகொ டுக்கவாங் கிமகிழ்
ஓங்கியங்கே வந்துற் றாளே !

## தரு

இராகம் - செஞ்சுட்டி தாளம் - ஆதி

100. வாச மாலிகை வாங்கிக்கொண் டொயிலாய்
வந்தாளே பாங்கி

கேசவன் கருணைகிரி முத்தையேந்திரன் - வாச
சமயம் தேர்ந்து சாமியை நேர்ந்து - வாச
சுமுகமாய்ப் பேசித் தொழுது விஸ்வாசி - வாச

குறத்தியின் சொல்லைக் கொண்டாட முல்லை
- வாச

சிறப்பது தோன்றத் திருநகை போன்ற - வாச
மயற்கிது தகுந்த மருந்தென மிகுந்த - வாச
குயிற்பகை தணியச் கூந்தல்பூ வணிய - வாச
வளைதுகில் சொலிக்க மனதெண்ணம் பலிக்க
- வாச

கிளைவளர் கருணைகிரி முத்தை யேந்திரன் -
வாச

## சரசவல்லி மாலை பெற்று மகிழ்தல்

### விருத்தம்

101. பருவக்குற வஞ்சியினது சொற்படியே யடைந்து
பாங்கிசெழுங்
கருபைக்கட லாகிய கருணைகிரிமுத் தையவிங்கித
கொடுத்த
மருவற்புத மாலிகை நீட்டவாங்கித் தனங்கள்
மலர்முகஞ்சேர்த்
தருமைச் சரசவல்லி அன்பாயணிந் தாள்வருத்தந்
தணிந்தாளே!

### தரு

**இராகம் - பூரிகல்யாணி தாளம் - ரூபகம்**

102.மாலை யமிர்தவசன சரசவல்லி பெற்றாளே !
சீலக் கருணைகிரி முத்தைய செல்வத்துரைதள
முல்லைப் பரிமள - மாலை

பருவ உசிதக் கருவ மதனப்
பயலை முடுக்கவே பிரவு

பலகறை தாமமார்பின் மாட்டி - ெக்காவின்
கண்ணி
பார்வைக் கிணங்க நன்றாய்ப் பூட்டித்
தலைதனிற் கொக்கிறகு சூட்டி - வில்லம்புவளை
தடிசூரி சில்லிக்கோல் குத்தீட்டி
வலைகள்புட் கண்ணி கொண்டு
விலைவெறிக் கள்ளை யுண்டு
மரைமுயல் பன்றிகள் கரடி பெரும்புலி
மதகரியுஞ் சிதறிட விசயம்பெறு - கருணை

இடைதிருந்தத் தோற்கச்சை கட்டி மீசைமுறுக்கி
இங்கித வார்த்தை பேசியெட்டி
நடைநடந்து சிங்கத்தின் குட்டிபோல்
வனமெல்லாம் நடுநடுங்கம் படியதட்டிக்
கடைவிழி சிவக்பாகத் தடைபய மரத்தேகக்
கறுப்பு நிறவெழில் சிறப்ப வயல்புடை
கடபுரி யடுத்து வளமுயர் - கருணை

பருவ மங்கை மார்மத லோலன்
குரிவார்குலப் பாண்டியன் சர்வஜனானு
கூலன்

பாங்கி லன்போடு வாங்கி வந்துதன்
பாங்கிக்குக் கொடுக்கவே

பொருளி வாதவர் புதையல் கண்ட
பொங்க மெனச்செய துங்கன் அனுப்பிய
- மாலை

கதிர்வரவலர் கமலமாமுகங் கனிவின் ஒளிரவே
- முத்துக்
களபமுஞ் சந்திரகாந்தியுந் தென்றல்காற்றுங்
குளிரவே
எதிர்முலைக ளிணைத்து முத்தமிட்டு மலைப்பனை
விட்டு
உருகிப் புனை - மாலை

அகிலமுழு தும்பரவி நிமிருமதிக சுசரிதன் - கல்வி
அருமை முத்துமங்கைய முத்தைய
சக்ராதிபதிசுதன்
சுகிர்த கருணைகிரி முத்தைய சுந்தரன்
மிஞ்சிய மந்தர தண்புய - மாலை.

## சிங்கன் வருவது

### விருத்தம்

103. அனநடை மோகினி யினிடத் ததிக
கொடையொடு விடைபெற் றவளை
வாழ்த்திக்
கனசுப சோபனம் பாடிக் கருணை
கிரிமுத் தையமால் கடவூர் தன்னிற்
சினவடிவேல் விழிக்குறத்தி தெருக்க டோறும்
குறிகள் சொல்லித் திரியும் நாளில்
மனமகிழ் கூர்கரு ணைகிரிச் சிங்கனும்
சிங்கியைத் தேடி வருகின் றானே !

### தரு

**இராகம் - மத்தியமாவதி** **தாளம் - ஆதி**

104. கருணைகிரிச் சிங்கன் வந்தானே - சிங்கியைத்
தேடி
கருணைகிரிச் சிங்கன் வந்தானே !
தருணதிட பொற்புய கருணைகிரி முத்தைய
சுரச சுலட்சண வமிர்த குணப்பிரபு
தரியலரைப் பொடிபட முடுகிப்பொரு - கருணை

முருக னின்பவருள் விசாலன்
முத்து மங்கைய முத்தையசாமி வரபாலன்

தரும நந்தனென்ன - விருது தங்கியவன்ன
சத்ர பதிகிரண - சித்ர நளினமுக
சத்ய கருணைகிரி - முத்தைய துரைமகிழ்
- கருணை !

## இதுவுமது விருத்தம்

105.கொடியனைத் தும்பு கழ்கரு ணைகிரி
முத்தையேந் திரன்இங் கிதநன் னாட்டில்
கொடியிடைச் சிங்கியைத் தேடித் கோவை
தெம்மாங்குகள் பாடிக்கு ணங்கொண் டாடித்
தடியுடைத் திண்புயந் திரண்டு ததும்ப
நெடும்படை கள்கொள் தெரியார் கண்டு
துடிதுடிக்கும் படிக்கரு ணைகிரிக் குளுவச்
சிங்கன் வந்து தோன்றி னானே !

## தரு

**இராகம் - யமுனை கல்யாணி தாளம் - ரூபகம்**

106. சிங்கன் வந்தான் மோடி யாகச் சிங்கிதனைத்
தேடி
நங்கருணை கிரிமுத்தைய ராசேந்திரன்நன்
னாட்டிற்ஜெய - சிங்

வடிவேலரை நினைந்து - தளிர்

மலர்க்காதினிற் புனைந்து

கடைவாய் வழிமது லாகிரி

கனியும்படி கருணைகிரி - சிங்

மிதிதேர விடுதாளுஞ்

சுழல்வியும் கண்தோளும்

அதிவேகமுங் கறுத்த நிறத்த

கனமார்பும் பெற்ற மைந்த - சிங்

சாதிப்பயல் பேசி

லோபசண்டாளரை ஏசி

சோதித்தருள்புரி கம்பளத்

துரைமார்களைத்துதி பண்புள ! - சிங்

## சிங்கன் சொல்லுவது

## விருத்தம்

107. சட்டநிலை நாட்டுளங் கள்கரு ணைகிரி

முத்தையரா சனைப்போற் றாத

துட்டர்குடு மியைஅறுத்துக் கண்ணி கட்டிப்

பின்முதுகுத் தோலை வாங்கி

இட்டமொடு தவிலி றுக்கியெ லும்பினைக்

கோலாக்கி நரம்பினிற்கை வீணை

திட்டமுற வமைத்ததிர்த்துப் புட்ப டுக்குங்

கருணைகிரிச் சிங்க நானே !

## தரு

**இராகம் - நாதநாமக் கிரிகை தாளம் - சாப்பு**

108.பட்சி படுக்கும் சிங்கன் நானே - மலர்

வெட்சி புகுகுகனை மிகநேர்ந்து தானே ! -

பட்சி

தருமத்தை மறந்துமேன் மேலே - பாவம்

சம்பாதிக்கு முலுத்தர் தமையொருக் காலே

பருவத்தில் வெறும்பகட் டாலே - பணம்

பறிக்கக்கை வசமாக்கும் பரத்தையர் போலே!

- பட்சி

வறியோர் விருந்தினர் அண்டி - மெல்ல

வந்தாற் கண்டவுடனே மனதுஞ் சுண்டி

அறியா வகையொளிக்கும் சண்டி - முட

ராமென வாய்பேசா தங்கங்கே யொண்டிப்

- பட்சி

சூரிவார்குலக் கீர்த்தியைத் துதித்து - நேயங்
கொள்ளார் சிகையை ஒட்டக்குறைத்ததை
மிதித்து
சரியா யமைத்த கண்ணி பதித்துப்
பலசாதிப் பறவைகூவித் தருக்கொடு குதித்துப்
பட்சி !

## நூரவன் வருவது

### விருத்தம்.

109. கலைவாணர்க் கருள்கட வூர்க்கரு ணைகிரி
முத்தையமால் கணநன் னாட்டில்
சிலையாண்மைக் குறவர் குலதில கனெனும்
கருணைகிரிச் சிங்கன் முன்னே
இலைவேள்கைக் கொளின்முட் டையெம்
மாத்திரம்
இப்புலிசிற் றெறும்பைக் காட்ட
மலையாமாற் றுரத்தவல்ல வக்கணை நூரவன்
செருக்கி வருகின் றானே !

## தரு

இராகம் - அடாணா                    தாளம் - திரிபுடை

110. நூவனும் வந்தனனே - சிங்கன்முன்
நூவனும் வந்தனனே
காவ நிருபர்பணி கருணைகிரி முத்தைய
கர்ணநன் நாட்டில் வக்கணைகள் பேசிப்பைய -
நூவனும்

சட்டி நிகர்த்த தலையன் - பறக்கின்ற
விட்டில் பிடிக்க மலையான்
முட்டி வயிறும் மொன்னை மூக்கும்
பீளைக் கண்ணும்
முதுகு நெளிப்புமாக முறுக்குத்திருக்குப் பண்ணும்
- நூவனும்

தட்டிக் குதிக்கும் நடையும் - கிழிந்தகச்(சு)
ஒட்டிக் கிடக்கு மிடையும்
கட்டைக் கையும் நெட்டைக் காலும்
பாசிப் பல்லுங் காட்டி
ஈட்டினிற்காட் டெலியையும் வெல்லும் -
நூவனும்

அண்டு முறவினரையுங் கூட்பிட்டுக் கொண்டு -
பறவையிரையும்
மண்டு பற்பல கண்ணிவர்க்கமும் பசையொட்டு
வகையுமேந்தி மனமகிழ்ந்து வாய்மிரட்டு -
நூவனும்

## சிங்கன் மரமேறிப் பட்சி பார்க்குதல்

### விருத்தம்

111. கலியிருளை நீக்குமெங்கள் கருணைகிரி
முத்தையிவிற்
காமன் நாட்டில்
ஒலியுடைய குறநூவ னொடுபயில் பாராட்டி
விரைந்துடனே யந்த
வலிமைதிகழ் புயகருணை மலைச்சிங்க
னொருநெடிய
மரத்தி லேறிப்
பொலிபறவை களின்வரவு பார்க்கின்றான்
உடல்புளகம் போர்க்கின் றானே !

## நூரவனுக்குச் சிங்கன் சொல்லுவது

### தரு

**இராகம் - கல்யாணி** **தாளம் - ரூபகம்**

112. வருகினு மய்யே - பறவைகள்
வருகினு மய்யே !
வருகினு மய்யே தரும தான
வரிசைக் கருணை கிரிமுத் தைய

பாடி மயில்குயில் சிச்சிலி தூக்கணம்
பட்சி குனுப்பகண்டை பருந்தாந்தை
தேடியுள மஞ்சனத்தி வவ்வால் பஞ்சிலை
வட்டா நீர்வாத்துச் செம்போத்துக் கேகையும்
வாடியிடாச் சம்பங்கோழி காணாங் கோழி
மற்றுமுண் டான புள்வர்க்க மவ்வளவும் -
வரு

## சிங்கள் சொல்வது

### கொச்சகம்

113. துன்னலர்கள் கோட்டையைநீர்த் தூளம்
படிதுகைக்கும்
கன்ன மதயானைக் கருணைகிரி முத்தையமா

மன்னன் வளநாட்டின் மலிந்தெத் திசைகளினும்
பொன்னணையின் வெள்ளமெனப் புள்ளினங்கள்
சாயினுமே!

(துன்னலர் - பகைவர்; நிர்த்தூளம் - சிதறுதல்; கன்னமதம் -யானை மும்மதத்தில் ஒன்று)

## தரு

**இராகம் - தோடி** **தாளம் - சாப்பு**

114. சாயினு மய்யே - பறவைகள்
சாயினு மய்யே !

சாயினு மய்யே ஓயும் பறவைகள்
சக்ராதி பத்ய தயாநிதி யாய்வளர்
தூய கருணைகிரி முத்தையப் பிரபு
சொந்தத் திருநாட்டிற் சந்தைப்
பெருக்கம்போல் - சாயினு
அருமையுடைய முள்ளிப்பாடி பாலைவிடுதி
அடுத்த செம்பியம்பதி
தூர நளினக் குளப்பண்ணை
கர்ணாபுரக் குளப்பண்ணை

மலரும்பழைய நந்தவனம் எழிற்புது நந்தவனம்
தீர்த்தக்குளம் தெப்பக்குளம் - இன்பங்
குலவுகோட்டை கிணற்று நந்தவனம் ஈச்சங்குளம்
பண்ணைக்குளம் எங்கும் பறவைகள்-சாயினு

## சிங்கன் சொல்லுதல்

### கொச்சகம்

115. சந்ததமு மன்பினோடு சம்பிரமஞ்சேர்
தென்பழனிக்
கந்தரடி போற்றுங் கருணைகிரி முத்தையமால்
சொந்தவள நாட்டில்வயல் சோலைமலர் வாவிநதி
எந்தமுக மும்புள்ளி னங்கள்பல மேயினுமே !

### தரு

**இராகம் - சங்கராபரணம்** **தாளம் - சாப்பு**

116. மேயினு மய்யே - பறவைகள்
மேயினு மய்யே !

மேயினு மய்ய யேய பறவைகள்
வித்யா விநோத விலாச சபாரம்ய

நேய கருணைகிரி முத்தையப் பிரபு

நீதிநன் னாட்டில் நிரைநிரை யாய்நின்று

- மேயினு

திருவளர் கதிர்நர சிம்மமுத் தையராஜ

சிந்தா மணிதனது செல்வப்பண் ணைதனிலும்

## சிங்கன் சொல்வது

117. ... ... ...

குழுத்தனை திருக்கழுக்குன்றம் கண்ணனூர்

தலைச்சேரி

கள்ளிக்கோட்டை கொழும்பு கண்டி கோகர்ணம்

செகநாதங் கோல்கொண்டை குத்தி வல்லாரி

உடுப்புச் சுப்ரமண்ய மைசூர் பண்டரிபுரம்

குண்டூர் விசாகப் பட்டணம் காசி

வெங்களூ ரிராச மயேந்திர நீலகிரி

கோயமுத்தூர் திருப்பதி யவினாசி கடப்பை

கோகுலம் பிருந்தாவனம் காளத்தி காஞ்சி

வேங்கடகிரி சித்தூர் காங்கயம் பழனி

திண்டுக்கல் கருவூர் மதுரை சிவகங்கை

சேது ஸ்ரீவில்லி புத்தூர் குன்றக்குடி

பரமக்குடி ராமநாதபுரம் கோயிலூர் சிவகிரி

சேத்தூர் புதுக்கோட்டை யெட்டயாபுரம்

அனந்தசயனம்

தூற்றுக்குடி கன்னிய குமரி சாத்தூர்

சென்று எத்திசையும் சுற்றித் திரும்பிக்குச்

சிலியன்கற் சேர்ந்து கருணைமலை நாடிக்

கண்டுதென் னிலைவரவணை மாவுத்தூ ராதனூர்

செம்பியம்பதி முள்ளிப்பாடி பாலை விடுதி

மேலைப்பகுதி கீழப்பகுதி பாப்பயன்பட்டி

பண்ணைப்பட்டி

வெண்ணைப்பட்டி வாழ்வான்மங்களம் மாங்குளப்

பண்ணை

கண்டெடுத்த மாணிக்கக் கனப்பண்ணை

யனப்பண்ணை

வருநம் புதுக்கிணற்றுப் பண்ணை உரற்கிணற்றின்

வரிசைப் பிரபலப்பண்ணை வாழைத்தோட்ட

மாம்பண்ணை

தருமந்தைக் குளப்பண்ணை முள்ளிப்பாடிக்குளத்துத்

தகுப்பண்ணை

இவைதோறும் வெகுவிதப் பறவைகள் சாயினும்
பலனுயருங் குறும்பப்பட்டி குளத்துப் பண்ணை
பழுதில்லாத சுந்தர பாண்டியக் குளப்பண்ணை
நலவெருதிக் கோன்பட்டிக் குளப்பண்ணை
மாவுத் யாதனூர் மாவுத்தூர்

பருவ வாழ்வான் மங்கலம் கீழ்ப்பகுதி மேலைப்
பகுதி வரவளை பற்பலரு மெச்சுந்
தென்னிலை
விருதுலவிய பண்ணைப்பட்டி கீரனூர்
வெள்ளைப்பட்டி செல்வவிநோத வடமன்
பாடி

மருவு பாப்பயன்பட்டி இடையபட்டி கடலூர்
மாற்றூர்ப் புரமுஞ்சுற்றி வகைவகைப்
பறவைகள்
பரவும் பெரியபண்ணை ஐயன்பாளையத்தினிற்
பண்ணை
புதுக்குளத்துப் பண்ணை பொன்னணைப்
பண்ணை

கருந்தாமரைக் குளப்பண்ணை நன்செயினும்

உலாவி நாகரீகமாய்க் கூவி - மேயினும் அய்யே!

மகிமையுயர் தொப்பையசாமி பொம்ம தேவதை

வரசக்காலதேவி கோமள பகவதி யம்மை

அகில்கமழ் குழல்முத்தா லம்மை பட்டத்தலைச்சி

அம்மை பத்திரக்காளி யம்மைபிடாரி யம்மை

சுகிர்தகுண கன்னிமார் கறுப்பண்ணன்

முனியப்பன்

சுயதங்கம்மை முதலாத்தொழு தெய்வங்களுக்

கெல்லாம்

விதமுறு பூசைக்கட்டளை மானியப் பற்றினும்

விகசித கமலவா வியினும் பிறச்சுற்றினும்

- மேயினு

மேயினணக டோறும் அரம்பை யாலும்

மருவிவர்க்க வர்க்கமாய் மகிழ்ந்து

மகிழ்ந்துதத்தி

வழுவில இரைதேடி உளுவைகயலுங் கொத்தி -

மேயினு

கடபுரிதனில் மேவுங் கருணை கிரிநாதர்
சட்டகால பூசைவிசேடக் கட்டளைப்
புறவினும்
வடமணி தனச்செந்தாமரை நாயகி கட்டளை
வயலினுங் கயிலாசவரதர் கோயிற் கட்டளை

தட்டுநடு நிலத்தினுங் கருணா கடாக்ஷசுந்
தரிசன்னிதிக் கட்டளை தழைக்கும்
பழனத்தினும்
நடன கலாபமயில் வடிவேலர் கட்டளை

(ஓர் ஏடு விடுபட்டுள்ளது)

திருமகிமைக் கூட்டாற்றுச் சிங்காரக் கன்னி
தெளியெலாங் குடைக்கன்னி சிரங்காட்டுக்
கன்னி
வரமுனியப் பாகொள்ளி மாமரத்துக் கறுப்பா
மனக்குறி சொல்வதற்காக வணங்கினேன்
உங்களைநான்

தரளவடத்துக் கிசைந்து தளதளெனப் பருத்துத்
தழைக்குமுலைச் சரசவல்லி தான்நினைத்த கருத்து

சீவவர்க்க மோவலது செறிதாது வகையோ ?
திரவியமோ நவமணியோ சித்திர
மாளிகையோ ?
பூவெருக்கு மிளம்பொழிலோ புனலாடுந் தடமோ?

ஓங்காரி கௌமாரி கவுரி திரிசூலி
பத்ரகாளி பிடாரி
மருவுபட்டத் தலைச்சியம்மே மழுவேந்தித் துரையே
மகிழ்தேக்க மலையாண்டி வலயபட்டி கறுப்பா

சம்பிரம தொப்பையசாமி தருண பொம்மதேவி
சக்காலம்மே புரிப்ர தான முத்தாலம்மே
அம்புவிமெச் சிடையபட்டி ஆளுமுத் தாலம்மே
அய்யன் பாளையத்தின் முத்தாலம்மே
தங்கம்மே

வருபுலிகுத் தியவர சேமந்தைக் குளக்கன்னி
வாழை யுரம்பமர்ந்த கன்னி வாழ்தேன்
நாரைப் பெருக்கமுங் கூழைக் கடாக்களும்
நாகண வாய்ச்சிற நற்கிளி யுங்கவு

தாரிப் புள்ளும் தயிலானும் புறாக்களும்
தாராவு மன்றிலுஞ் சக்ர வாகமு

மாரிக் குருவியும் கொண்டை கிலாத்தியும்

வல்லூறு சிட்டும் வலியானும் உள்ளானும்

சேரக் கடலூர்க் கருணை கிரிநாதர்

சிங்கார மாசிக் திருவிழாக் கூட்டம்போல்-

வருகினு

காடை சிலாங்கும் மரங்கொத்தி மீன்கொத்தி

காக்கைச்சிறகி யாட்காட்டி சிவல்வா

னத்துரை

அருமை நாட்டினில் அன்னவன் சன்னிதிக்(கு)

அற்புத வாண ரநேகர் வருதல்போல் -

வருகினு

அங்க முழுதும் விபூதியைஉத் தூளமாக

அணிந்து கொண்டா காய மார்க்கத்திற்

கொங்கணர் கோரக்க ராதி மகாசித்தர்

கூட்டுங் கமன குளிகை மகிமையால்

பொங்கும் கருணைமலைக் குகைதோறு

மெப்போதும்

தவசு புரிந்து றையும் பொருட்(டு)

எங்கு நெருங்கி வருவதெனக் கொக்கினங்களும்
தூவி யனங்களும் வக்காவும் - வருகினு

## (சிங்கன் பறவைகளிடம் கேட்டல்)

118. ... ... ...

இத்தனை கபடமேற்ற மல்லவோ உங்கள்
பலங்களே
பொங்கும் குங்குமமுலைப் பொலிவுகாட்டிய
விளநீர்களே
புண்ணிய முமக்குச்சிங்கி போனவழியைக்
காட்டுவீர்களே

கொஞ்சுங் கருணைகிரிமலைக் குறவஞ்சிக்
குரல்காட்டுங் கிள்ளையே - என்னால்
கொஞ்சமேனும் சகிக்கக்கூடாதினிப் பிரிவின்
சள்ளையே !

பசும்புகழ்ச் சிற்றடிப் பாவைசாயலைக்
காட்டுமயிலே - வந்து
பக்கத்திற் காட்டாமற் பறவை காட்டுவதென்ன
மயில்களே

மார்பில் எழுரோம வரிசை காட்டியடர்

வண்டீட்டமே - மது

மடுவைக் காட்டினாலன்றி மாறாதெனது சிந்தை

வாட்டமே !

தார்புனை குழல்காட்டிச் சகலவளமும் காட்டும்

பொழில்களே - மறந்தாலும்

மறக்குமோ வஞ்சகி காட்டிய கலவித் தொழில்களே!

வங்கணக்குமரி செவ்வாய்போல் மலர்ந்தேசெழுங்

குமுதமே - பொல்லா

மதன சுரத்தினுக்கு மருந்தாஞ் சிக்கினாலிதழ்

அமுதமே !

## (சிங்கன் நூரவனிடம் சொல்வது)

119. சித்தமகிழ் பண்ணைகள் சமஸ்தமும்

செங்கால் நாரையய்யே

வித்தையறி யுசிதன் வேதகுல வேங்கடராய மதன்

கொத்தலர் பூம்பண்ணைகள் சகலமும்

கொக்குஞ் சிக்கனு மய்யே !

*ஆர்க்குமுப காரி நகர்க்கணக் காறுமுகா சாரி*
*சேர்க்கை நிலவகைக்குள் வெண்காடையும்*
*சிச்சிலிப் புள்ளுமய்யே !*

(எல்லோருக்கும் உதவிசெய்து வந்த நகர்க்கணக்கும் பணிபுரிந்த ஆறுமுக ஆச்சாரி என்பவரின் நிலத்தில் இருந்த பறவைகளைக் குறிப்பிடுகிறான்)

*மார்க்கவிசு வாசன் கறுப்பண மால்வீரன் நேசன்*
*பார்க்கு மிவர்கள் பண்ணை நிலமுற்றும் பச்சைக்*
*கிளிகளய்யே !*

*சேமமிகுங் கிராமமுனிசீபு செய்யும்*
*பெருமாள்கோன்*
*சோமனெனும் மிராசுப் பண்ணைதோறும் குயில்க*
*ளய்யே !*

*ம்ாமதுரை நாயக வசீகரவான் சள்ளை*
*முத்தய்யன்*
*காமருவும் பண்ணைகள் முழுதுங் கவுதாரி வர்க்க*
*மய்யே !*

ஏசனுகான் சாயபு முத்துக்குமாரனெனும்

சேர்வைக்காரர்

வாச முலாவு பண்ணை நிலங்களின் மாரிக் குருவி

யய்யே !

தேசுபுனை பண்ணைகள் அனைத்தினும்

சிட்டு செம்போத்து மய்யே

சிந்தம பூபாலன் வெள்ளையப்ப திவ்விய

சுகுணாலன்

இந்த மகிபர்களின் பண்ணை நிசெமெல்லாம்

புறாக்க ளய்யே

வந்திடு கார்பார் முத்துவேல் வரிசை யதிகாரி

பந்தி திருந்து பண்ணைகளில் வானம்பாடிக்

குருவியய்யே

சம்பிருதி மார்கள்எனும் கனந்தங்கிய வல்லோர்கள்

நம்பிரபு டீகண்டு செவுத்தியா நாகரீகவான்

பைம்புய நேர்தியாகி அருமைக்

கருணைகிரி முத்தைய சுவாமி

மேதகு பண்ணைதோறும் பவளவாய்
மென்ன நடை அன்னமய்யே !

செந்தமிழ் வாணர்துதி கதிர்நரசிம்ம
முத்தைய நிதி
எந்த வயல்களிலும் வக்காவின்
இனங்கள் அநேகமய்யே !

கந்தமலர் தாரன் முத்துமங்கய
முத்தைய தீரன்
சொந்தவயற் புறவின் பக்கத்திற்
பைந்தோகை மயில்க ளய்யே !

மோடிகொள் சிங்காரன் திருமலை
முத்தைய கெம்பீரன்
நீடிய பண்ணை நிலமுழுவது
நேர்சக்கர வாகமய்யே !

ஆடிவருங் குதிரை முத்துமங்கைய
முத்தையமுகில் பண்ணைதனினும்
திருமலை முத்தையவேள் பண்னணதனினும்
விருதுபுனை அக்குமுத்தையமால்
பண்னணதனினும்

வீறு கொண்ட சிந்தம
விஜயன் பண்ணை தனினும்
கருதலர் பணியும் நந்துரை சொந்தக்
கார்பார் முத்துவேல் உபகாரி
பண்ணை தனினும் - மேயினுமய்யே

வரிசை மிக்க சம்பிருதி
ராயப்ப நிதிபெற்ற மதியூகி
செவுத்தியா மகிபன் பண்ணை தனினும்
திருமலைக் கொழுந்துவிற் பன்னனீன் றருளிய
ஜெயபழனி யாண்டி ரஞ்கிதன்
பூம்பண்ணை தனினும்
துருவனுக் கிணைசொல்லும் முத்துக்குமர தீரன்
சூரனாம் வீரபத்திர உற்றுங்கன்
பண்ணை தனினும்
தருவெனத் தருகறுப்பண பாண்டியன்
அருமைத் தவர்தால் வந்த
முத்தையன் தனதன் பண்ணைதனினும் -
மேயினு

அய்யன் பெருமாள் வள்ளல்

அருளு முத்துக் குமார

வதுலன் பண்ணை தனினும்

சுபவிஸ்வ குலமோங்கத் தோன்றிய

கணக்கன் பண்ணை

கனமா மந்தைப் பெரிய தனவான்

சள்ளை முத்தையன்

எட்டாம் பண்ணை சுந்தர

பாண்டி

நஞ்சை மணிய மெய்துரை

நாயக விதுரன் பண்ணையடுத்து - மேயினு

சருவ சரக்குஞ்சூழ் வர்த்தக அருணாசல

தாட்டிகவான் பண்ணை

சாமிசெட்டி யின்பண்ணை

பரவுமுத்துக் குமாரன் சேர்வைக்

காரனுடைய பண்ணை

பெருமாள் சேர்வைப் பண்ணை

சக்கரஞ் சேர்வை

விரவு புகன்ற பண்ணை

கோவிந்த சேர்வைதன் பண்ணை

வேறுமுள்ள பண்ணை - மேயினு

போகம் செய்யும் பழனிமுத்துத் திடவான்

சுபுத்திரனாத் திகழாறுமுக நயசீலன்

பண்ணை தனினும்

வையம்புகழ் முனிசீப் அதிகாரியாய்

வாழும் பெருமாள் விசுவாசன்

பண்ணை தனினும்- மேயினு

பட்டமானியம் பார்க்கும் மதுரைநாயகப்

பூமான் பண்ணை

கிருஷ்ணமராஜ பாக்கியவான் பண்ணை

மட்டார் புயநேசன் கான்சாயபுவின்

பண்ணை தனினும்

மணியம்செய் கருப்பான் வல்லவனு பண்ணை

கட்டாம் பண்ணை - மேயினு மய்யே !

## சிங்கன் சொல்வது

### விருத்தம்

120.கெலியிற் பகைசிந் திடச்சுர ருங்கிளர்
தூளியினால் விழியி மைப்பக்
கலினப் புரவி நடத்து மெங்கள்
கருணைகிரி முத்தைய துரைதன்
பொலிபொற் பமைந்த நாட்டி வேயிப்
போதுந மக்குநல் வேட்டை
மலிபுட் படுக்கக் கண்ணி கொண்டு
வாடாகுளு வாமன மகிழ்ந்தே !

### தரு

**இராகம் - நாதநாமக்கிரியை தாளம் - ரூபகம்**

118. கண்ணி கொண்டுவாடா குளுவா
கண்ணி கொண்டுவாடா !

தண்ணிய செஞ்சொற் கருணைகிரி
முத்தைய துரைப்பாண்டியன்
புண்ணிய நாட்டினிற் பண்ணைக டோறும்
புகுந்து பறவை மிகுந்திதோ மேயுது் - கண்ணி

விந்தமலைக் கருவந் தணியத் - திறல்

வில்வலன் வாதாவி வெவ்வினை வேரற

வந்த வகத்திய மாமுனி யுஞ்சிறை

வாவலையுங் கூடவாய் மடுத்துத்

தான்பின்னை

அந்த வசிட்டன்முதற் பெரியோர்களும்

அன்றிலை யும்தின் றருந்தவ முற்றின

எந்த விதத்தினு மீனமுண் டோநமக்

கென்னதடை ? கொக்குழிக்குக் குடஞ்சிக்கிக்

கொண்டாற்பெரும்

பார வயிறு பருத்திட மொக்குவன் !

மார்க்க வைதீகர் முதலியவர்கள் சைவர்கள்

மற்றோர் கண்டாற் கொஞ்சமட்டில்

விடுவரோ ?

சேர்க்க முழுதுந் தித்திக்குந் தித்திக்குமெத்

திக்கினு மொய்த்துள பக்கி படுக்கவே ! -

கண்ணி

திங்கள் வட்டக் குடைக்கதிபன் கருணைகிரி

முத்தைய பூஜிதன்நன் நாட்டில்

பங்கயப் பொற்குயில் உலவு

பண்ணை இனங்கள் படுக்கவே ! - கண்ணி

## நூரவன் கண்ணி கொணடு வருவது

## விருத்தம்

119. கற்புநிலைத் தவுமைக்குச் சகோதரன்

காரணமுக் கட்கடவுட்டு மைத்துனன்

விற்புருவக் குறவள்ளி தெய்வானை

விரும்பும்கட பிரிவேலற் கம்மானெனும்

அற்புதஞான முராரியுங் காக்கை

அடுத்திடு பூவையுண் டானண்ட முட்படப்

பொற்புடை யன்ன முண்ணாதவர்

ஆனிரிப் போக்குச் சொல்லா

120. மற்புறாக்கள் படுக்கவே கண்ணி ஆர்க்கும்வல்லூ

றவிக்கும் குணமே தொழிலாகப் படைத்தநம்

ஆதி கணேசனும் பார்க்குந் தோறு

நடந்தேகி நேர்பம்பிச் செல்லும்

வெங்க னற்கட் பூனை யைப்போல்

விகடவெறிக் குறநூவன் வெகுவே டிக்கை

தங்க வெற்றிக் கரணைகிரிச் சிங்கனும்

கண்ணி கொண்டுதான் வந்தானே !

## நூரவன் சொல்லுவது

### தரு

**இராகம் - தோடி** **தாளம் - ரூபகம்**

121. நெட்டுக் கண்ணியை இங்கே
தொட்டுக்குத்தினால்
நேருங் குருகொடுங் கொக்கு
நிமிடத்தினிற் படுக்கும் !
ஓட்டுக் கண்ணியை விரித்திட்டுக் குத்தினால்
உள்ளானு மயிலும்
சிட்டுக் கண்ணியைக் கொஞ்சம்
விட்டுக்குத்தினால்
சிக்குமே பருந்தும் காடைசிறகிக்கு பொருந்தும்
கட்டுக் கண்ணிகளெல்லா மெட்டுப் படிவகைகள்
கண்டுநீ குத்தடா செழுங்கடலூர்
மலைச்சிங்கா !

## சிங்கன் சொல்லுவது

### கொச்சகம்

122.பப்பரர் மராடர் வடபாஞ்சால ரும்பணிந்து
கப்பமிடு வாசற் கருணைகிரி முத்தையமா
லொப்புரவு சேர்நாட்டி லுன்குரல்கேட்
டாற்பரவை
தப்புமிது நற்றிதி கொஞ்கம்பொறு
கெம்பாரடையே !

(இது நற்றிதி-இது நல்ல தருணம்)

123.அருணாசல ஜனசேகரன் காமி செட்டி
பூசிதவான்கள் பண்ணை நிலங்களில்
பூவைப் பெருக்க மய்யே !
சீர்ளரும் சங்கரன் சேர்வை
ரஞ்சிதன் பெருமாள் சேர்வை
ஏர்வளரும் கோவிந்தன்
சேர்வைவயல்
எங்குமீன் கொத்தி யய்யே !
பார்புகழ் தெய்வசன்ய தானத்தின்

படித்தர மானியமாய்ப் பேர்பெறு -
பண்ணைகளிற் பறவை பிரபல மெத்தவய்யே!

## சிங்கன் சிங்கியை நினைத் தாசை கொள்வது

## விருத்தம்

124.தயவகலாக் கருணைகிரி முத்தை யேந்திரன்
தமிழ்நாட்டில் சிங்கனங்கே தன்முன் னாக
வயவிளநீர்ப் பொலிவுமின்னார் கொங்கை காட்ட
வாழைதொடை காட்டமலர் வதனங் காட்ட
புயல்குழல்காட் டக்குயில்சொற் காட்ட வாமை
புறவடிவு காட்டக்கரும் புபுனைதோள் காட்டக்
கயல்விழிகாட் டத்தரள முறுவல் காட்டுங்
கனங்கண்டான் சிங்கியின்மேல் மனங்கொண்
டானே !

## தரு

## கண்ணிகள்

**இராகம் - ஆகரி** **தாளம் - சாப்பு**

125.எங்கும் பெண்கள் வடிவாயிருந்(து)
என்றனை மயக்கினால் உண்டோ பங்கமே

கருணைகிரி முத்தைய கனவான்

கொடைக்குத் தோற்ற மேகமே - அவள்

கமல முகவி லாசம்

கண்டா லுடனேதீருந் தாகமே !

## சிங்கன் சொல்லுவது

## கொச்சசம்

126.கையடுத்த சூர்வேற் கருணைகிரி முத்தைமால்

செய்யனைத்து முல்லாசச் சிங்கியெழில்

காட்டியதால்

மையலுற்று நானிருந்தேன் வைத்தகண்ணி

யைத்தகர்த்து

பையவெற்றி கொண்டுபல பக்ஷிகளும் மேயினுமே!

## தரு

**இராகம் - முகாரி** **தாளம் - சாப்பு**

127.போயினு மய்யே புனல் வள்ளையே - மதித்

திவளவென்று விவரித்திடத் தகுமோமன்மதன்

கொள்ளையே!

கருவங்காட்டிய மாதின்கண்கள் காட்டியமுழு

நீலமே - அன்பு

காட்டிடாமல் வம்பையே காட்டுகின்றதிந்திர

ஜாலமே

உருவங்காட்டி யிடையினுசிதங் காட்டியமலர்

வல்லியே - எனக்(கு)

உறுதிகாட்ட லாகாதோவொரு தேறுதலாயினுஞ்

சொல்லியே !

தருநல மிடறுகாட்டிச் சன்னதங்காட்டுஞ் சங்கமே

சரச கால வின்னோசை தனைநீ காட்டித்

தூண்டு

தீது பழகியிகபர வின்பஞ்கிதைத்த

உலுத்தர்கள் செல்வத்தைப் போலவுங்

கீத நடன விநோத சமுகசற்

கீர்த்திக் கருணைகிரி முத்தையபிரபு

மீது கவிதை நினைத்தவுடன் கற்றோர்

வெங்கலி ஓடிவருவது போலவும்

போயினு

## நூரவன் சிங்கனைப் பழித்துச் சொல்லுதல்

### விருத்தம்

128.கேட்டதுத வுந்துரை கருணைகிரி முத்தைய
பாண்டிய நாட்டில்
வாட்டமி லாறின் சிங்கி சிங்கா
மதனரதியோ ? மாறிதியோ ?
சேட்டைமிகுந் தகாமவெம் பேய்சிரித் துத்தலை
சுற்றிடக் கிடைத்த
வேட்டைதனை யிப்படிக் கெடுத்து விட்டாய்
வெறிகொண் டிட்டாயே !

## சிங்கன் சொல்லுவது

### தரு

**இராகம் - அரிகாம்போதி தாளம் - ஆதி**

129.ஆசை பெருகுது என்னசெய்வே னய்யே ? -
என்
கண்ணாட்டியை நீகூட்டி வந்தாலுய்வேன்
அய்யே !

மோசமது நினைக்கக் கூடா தய்யே ! - புத்தி
முற்றுமினி மற்றொன்றை நாடா தய்யே !

ஏதோ ஒருவகையாய் வருகுது அய்யே - சிங்கி
எங்கிருக் கின்றாளோ வென்னுள்பூணு மய்யே !

பொற்பிற் செழித்த கடபுரி மாகனன் ! - வளர்
புயகருணை கிரிமுத்தைய மோகனன் !
வெற்பிற் குறத்தி யெனைப்பிரியா ளய்யே -
எவர்
மித்திரித்தாரோ வினையந் தெரியா ளய்யே!
- ஆசை

(வெற்பு-மலை; மித்திரித்தார்-நட்புச் செய்தார்)

## இதுவுமது

### வெண்பா

130. காமவெறி யாற்றேன் கருணைகிரி
முத்தையமால்
சேமவள நாட்டின் செழுநூவா - பூமலரின்
கொந்தான் மலிபைங் குழற்சிங்கி யைக்கூட்ட
வந்தான் மகிழு மனம் !

(வெறியாற்றேன் - என்னால் வெறியைப்
பொறுக்க இயலாது)

## தரு

இராகம் - பியாகு தாளம் - சாப்பு

131. சிங்கிதனைத் தேடி உள்ளுருகு தய்யே !

வாதோ உதவினா லாகாதோ அய்யே - விசு

வாசிப்பவரைக் காப்பது தீதோ அய்யே ?

எல்லா மவற்வடிவாய்க் காணு தய்யே -

எனக்(கு)

என்னென்ன விசித்திரமோ தோணு தய்யே !

நல்லார் தமக்கே னுபசார மய்யே - அந்த

நாயகிதோள் சேர்ப்பது நின்பார மய்யே !

பாவி மதப்பயலுக் காற்றே னய்யே - அவன்

பாணத்தாற் பட்டு வேட்டையுந்தோற்றே னய்யே!

மேவி வருத்தந்தீர வேணு மய்யே - முலை

வேதிட்டால் அல்லவோ சுகம் ?

- சிங்காரச் சிங்கிதனைத் தேடி நூவா!

(மதப்பயல் - மன்மதன்)

## நூரவன் சொல்வது

### விருத்தம்

132.நீடிவாழ்கரு ணைகிரிமுத் தையேந்திர நீதி
நாட்டிற்சிங் கிதனை நீயிப் போது
கூடினாலென் னசுகம்மா விருந்தா லென்ன
கூட்டிவர நானாளோ கொழுப்பா சிங்கா ?
சாடினான்மன் மதனெனின்இங் கார்க்கு நஷ்டம்?
சரிசரிஅக் கரையுனக்குத் தான்உண் டானால்
ஊடிவேல் வென்றகன்னி சென்றவூர் பார்த்(து)
ஓடுவாய்சுற் றியெங்கும் தேடு வாயே !

### கவியின் கருத்து

133. நூரவா சீக்கிரத்திற் கூட்டிநீவா சிங்கி
நங்கருணைகிரி முத்தைய ராசன்வள
நாட்டுத் துய்ய சிங்கி
சந்தர்ப்பம் பார்த்து உபகாரம்தான் செய்வதல்லோ
உபசாரம் !
கந்தர்ப்ப பாணம் குரூரம் காப்பாற்றுவது நின்பாரம்!

கொஞ்சமும் மனதிற்சூது
கூடுமென்ப ரெண்ணொணாது
தஞ்சம் உனையன்றி யேது ?
தாமதியாமல் இப்போது !

முத்தமிட் டினிமை கூர
மோக சம்போக நேர
ஒத்தணைத் தணைத்துச் சேர
உத்தம குணந்திரிந்து கொண்டிருக்கிற ! -

சிங்கிதனை உல்லாசச் சிங்கன் மெத்தவுந்
தேடினானே !

## சிங்கன் சொல்லுவது

## விருத்தம்

134. கதிர்தொறு முத்துதிர் மளசைக் கருணைகிரி
முத்தையரா கவன்நன் னாட்டில்
அதிவிரகக் கடலறிவித் ததனி லின்ப
வழுதுகொள வல்குற் பாம்பு

முதிர்கிரணக் குன்றி வடமு லைப்பெரு
மந்தரகிரி யுமுகவி லாசம்
அதியுமெனக் கடிச்கடிசம் மதித்துதவு சிங்கியை
இன்னம் வரக்கா ணேனே !

## தரு

**இராகம் - தோடி** **தாளம் - ஆதி**

135.கீரநகர் வடமன் பாடியுற்று விருதுகட்டிச்
சோலை உடைமலிந்து தோன்று மிடையபட்டி

சுற்றுக் கிராமமுற்றுந் தாவி - எங்கும்
துருவனென மெச்சிய கருணைகிரி முத்தைய
துரைவளர் கடபுரி மேவி !

வாரிட் டடர்ந்துபனி நீரட் டனங்கனையும்
வாட்டுமுலைச் சரச வல்லிக் - கெதிர்
வந்து கொஞ்சமும் வழுவாமல் அவளுடைய
மனமகிழ்ந் திடக்குறி சொல்லி !

சீரிட்ட வரிசை பெற்றோ ரிட்ட
விரதியும் திகைத்துக் கலங்கும்படி தானே -
அங்கே

பாராட்டச் சொல்வாள் !

பத்துத் தரமானாலும் பதறாமல் வெல்வாள் !

பாவி யிப்படி எங்கே செல்வாள் ? - வங்கண்

விந்தை கற்றுலவிய வெகுவிளை யாட்டாள்

வேறே யொருவரைப்போல் விகுவதிற் காட்டாள்!

விடியவிடியத் தூங்க மாட்டாள் ! - வங்கணச்

சிங்கி

(விரதி - துறவி; விகு - பிகு)

## விருத்தம்

136. திட்டால்விஞ் சியகட வூர்க்கரு ணைகிரி

முத்தையவேள் செழுநன் நாட்டில்

அட்டாவென் காமவெளி தலடா வஞ்சனை

விட்டாவ ணைத்தோர் முத்தம்

கொட்டாகொங் கையைத் தழுவிக் கொண்டே

நற்றொடைநடு விற்குதித்தே மண்டி

இட்டாவென் றனைவி டுத்தி யங்கும்

சிங்கியின்னம் எதிர்ந்தி லாளே !

## தரு

**இராகம் - தேவகாந்தாரி** **தாளம் - ஆதி**

137. இங்கிதமலைச் சிங்கி வந்திலாள்
இன்னமும் இதற்கென்ன செய்குவேன் ?

மங்களம்புனை துங்கனாம் எங்கள்
வரிசை கருணைகிரி முத்தையேந்திரன் - இங்கித

வாடிடா வகைதேடி ஈடிலா
மோடி யாரபி தோடி மோகனம்
பாடி நேயமு நீடி நேர்விளை
ஆடி யேயெனைக் கூடி யாளுமென் - இங்கித

மெட்டு லாவுதேர்த் தட்டு ளேவிரல்
விட்டு மார்பினில் முட்டுஞ் சோபித
வட்டு மாமுலை தொட்டு வேண்டிய
மட்டு நான்முத்த மிட்டு மேவவே - இங்கித

சொல்ல வோவச மல்ல வாசைபின்
செல்ல வேசிலை வல்ல னாகிய
அல்லல் வேளினை வெல்ல லீலையிற்
புல்ல வாளினும் நல்ல கூர்விழி - இங்கித

## இதுவுமது

### விருத்தம்

138. மேடையாராண் மளசைக் கருணைகிர்
முத்தையவில் விசய நாட்டில்
மேடையாந டைக்குயிலைப் பிரியாமைக்
கவளல்குல் பெருமை தேர்சூழ்
ஆடையாயே னுமஞ்ச ளாதியா
யேனும்முலைக் கருகே தாங்கும்
கூடையாயே னுமிசைக் குன்றியா யேனும்
நட்புக் கொண்டி லேனே !

### தரு

இராகம் - செஞ்சுருட்டி                    தாளம் - ஆதி

139. சிங்கி வந்திலாளே - தேற்றுதற் கிந்நாளே !
எங்கணும் புகழ்கருணை கிரிமுத்தை
யேந்திரன்மலைச் - சிங்கி
வாழையுஞ் சுளையுங் காட்டி
வான்கரும் பிளநீர் நீட்டி

ஏழைவெம் பசியை யோட்டி

இன்ப முயர்த்துங்கண் ணாட்டி ! - சிங்கி

சூதுதான் மனதிற் கொள்ளாள்

சொற்பனத் திலும்பொய் வில்லாள் !

ஏதுநான் செய்தானுந் தள்ளாள்

என்று மென்றும்போல் அன்புள்ளாள் ! -

சிங்கி

கொஞ்சி முத்தமிட் டணந்த

கோலாகலம் பொருந்த

மிஞ்சி நற்கலவிக் கெந்த

வேளையும் அழைப்பள் அந்தச் - சிங்கி !

(கலவிக் கெந்த = கலவிக்கு + எந்த)

## நூவன் சொல்லுவது

## விருத்தம்

140\. வங்கியங்க ணகமுரச மழைமுகிலின்

முழங்கமழை வழங்க மேன்மை

தங்கியங்க வனிதொழவாழ் கருணைகிரி

முத்தையசீ தரநன் னாட்டிற்

கொங்கியங்க வயங்குகுழற் கொண்டையொடு
செண்டையடு கொங்கை தாங்குன்
சிங்கியங்க வடையாளந் தெரிந்திடச்
சிங்காயெனக் குச்செப்பு வாயே !

(அங்கவனி = அங்கு + அவனி; அவனி - உலகு; கொங்கி-மணந்து; தாங்குன் = தாங்கும் + உன்)

## நூரவனுக்குச் சிங்கன் சொல்லுவது

### தரு

**இராகம் - கேதார கௌளம் தாளம் - ரூபகம்**

141. நீலக் குயிலென் சிங்கி தன்மைநீ கேளய்யே
- இணங்கிக்
கோலக் கருணைகிரி முத்தையதுரை
கோமள நாட்டிற் குளுவா குளிர்வரை - நீல

கொங்கைக ளானைக் கொம்பு
கூர்விழி மன்மத னம்பு !
மங்கைபல் முல்லை அரும்பு - தோளில்
மச்சமொன்றுண்டு
வாய்வார்த்தை வெகு கொம்பு ! - நீல

தன்னடை யன்னப் பேடை - செழுஞ்

சாயலோ தோகையின் சாடை !

என்னசொல்வேன் மஞ்கள் பாவாடை

மையலேற்றுச் சிவப்பாயிருக்குமவ ளாடை !

- நீல

மேகங் கொண்டைக்கு நானுங் கொடி

மெல்லிடை ஓர்பிடி ! - காணும்

தேகங் கண்டு மின்னல் கோணும் - முற்றும்

செப்புவதற் காதிசேடன்வர வேணும் ! - நீல

## நூவன் சொல்வது

## விருத்தம்

142.தருமம்எத் திக்கினுமோங் கத்தமிழ்

தேங்கக்கவி நீங்கத்தரி யாரேங்க

விருதுகட்டிப் புலிபுரக்கும் கருணைகிரி

முத்தையதெய் வேந்திரன் வெற்பில்

பொருசிலைக்கைச் சிங்காநின் பூவையெனும்

சிங்கியைபிப் போது கூட்டி

வருபவர்க்குச் கூலியென்ன வுரைசெய்வாய்

அதனையொரு வரைசெய் வாயே !

## சிங்கன் சொல்வது

### தரு

### கண்ணிகள்

இராகம் - முகாரி தாளம் - ஆதி

143. வரையைக் கையினி லடக்க - உருக்களை
மாற்ற வெண்டிரை கடக்க
விரைவினில் கனலை யருந்த - கலங்காமல்
வேங்கை மத்தியிற் பொருந்த

சத்த லோகமும் பார்க்க - மூதண்டத்
தலமும் சஞ்சரித் தார்க்க
ஒத்த தேவரைக் கூவ - அவர்களை
ஒவ்வொரு தொழிற் சேவ

பூதத்தின் மிசை நடிக்க - கறளியைப்
போய் மீளும்படி நொடிக்க
வாதத்தினாற் பிழைக்க - திருநெடு
மாலையும் வரவ ழைக்க !

களிறொரு குடத்த டைக்க - நாகத்தைக்
கட்டக் கட்டினை உடைக்க

தெளிவுள வகை காட்டுவேன் - எனக்கு நீ
சிங்கியைக் காட்டா யய்யே !

தாமரை கால்முளைத்து நடந்திடத் தாமே
சண்டைகள் விளைத்து மாலர்சிலரை வெல்ல
முயல்கலை மான்களும் கதைகள் சொல்ல
கல்லை அடிசில் ஆக்க - வசியமை
காண மின்னரை நீக்க
பல்லில் உத்திர மெடுக்க - சரபத்தைப்
பதறாமல் வாய்மடுக்க

அஞ்சன வழியறிய - திரளையாய்
அப்பையும் உருட்டி எறிய
மிஞ்சு புதுமை காட்டுவேன் - பின்னும்
எவ்விதத்தையும் நிலை நாட்டுவேன் !

கடவூர்க் கருணைகிரி முத்தைய
காண்டீபன் அரசுபுரி
திடநாட்டினில் எனது வங்கணச்
சிங்கியைக் காட்டா யய்யே !

## நாரவன் சொல்லுவது

### விருத்தம்

144. இனிதேநின் மகிமைகுப் பையே றியொரு
கோழிபிடித் திடமாட் டாதான்
தனிவான மேறிவை குந்தம் காட்டுவார்
அலவோ சரிதான் சிங்கா
கனிதூவு பொழிற்கட வூர்க்கரு ணைகிரி
முத்தையவேள் காதல் கூர்சித்
தினிப்பாலில் வரிசைபெற்றுன் சிங்கி முந்தச்
செய்றதிந்தத் தெருக்கண் டாயே !

(சித்தினி - சாமுத்திரிகா இலட்சணம் எனும் நூல் கூறும் பெண் வகைகளில் ஒருத்தி)

## சிங்கன் சொல்லுவது

### தரு

**இராகம் - கமாசு** **தாளம் - ரூபகம்**

145. சிங்கிவரக் காண்கிலே னய்யே - இன்னமும்என் மோகச்
சிங்கிவரக் காண்கிலே னய்யே !

எங்கு மதிக்குங் கடவூர்

இந்திரனெனக் கீர்த்திநிலை

தங்கு கருணைகிரி முத்தையதுரைச்

சாமிமலைச் - சிங்கி

சிக்கின கள்ளெல்லாம் வாங்கிச்சே வுண்டு -

போதை யோங்கிச்

சொக்கினளோ புத்தி நீங்கிச்

சும்மா விருந்தாள் சித்தி ராங்கி ! - சிங்கி

மெத்தவும் சுழற்றும் கண்ணாள்

வேறொன்றால் மறக்க வொண்ணாள் !

எத்தனை வைதாலு மெண்ணாள்

என்னை யலட்சியம் பண்ணாள் ! -சிங்கி

பஞ்ச பாணமத வேளோ ?

பாவிநா னவனுக் காளோ ?

வஞ்சமோ மித்திரர் கோளோ ?

மற்றெவன் பின்னேசென் றாளோ ? - சிங்கி

(பஞ்சபாணமதவேள் - மன்மதன்)

## சிங்கன் சொல்லுவது

## சந்தக் கொச்சகம்

146. வடவெற்பினு மழகுதிகழ் களப பதிமள
மிக்கலர் தளவவள மைதொடை யல்புனை
தடபொற்புய கருணைகிரி முத்தைய
சுகுண சந்திரனைப் பாடார்போல்
இடருற்றிடை மெலியவளர் குத்திளமுலை
களிரேகக்
கள்விந்த மலைவருந்த முந்தச் சந்தச்
சரணபரி புரஞ்சரங்கைச் சங்கி யங்கச்
சிங்கி யங்கே தான்வந் தாளே !

### தரு

இராகம் - ஸ்ரீரஞ்சனி தாளம் - ஆதி

147. வந்தனளே சிங்கி - சிங்கன் முன்னே
வந்தனளே சிங்கி !

இந்திர லோகமுந் தணிவாக வெழிலுயர்
கடவூர் மலைச்சிங்கன் முன்னே - வந்தனளே

சரிவளை பாத பரிபுர நாத
சம்பிரமத் தோடுநடந்து சிங்கன் முன்னே -
வந்தனளே

இலகிய திலகம் பலவிதக் கலகமிட்டு
எவரையும் மயக்கச் சிங்கன் முன்னே -
வந்தனளே

சரிகை செஞ்சேலை வரிசைப் பொன்மாலை
தனித்தனி பளபளென்னச் சிங்கன் முன்னே -
வந்தனளே

பரிசுத்த கருணைகிரி முத்தை யேந்திர
பாண்டிய வளநாட்டிற் சிங்கன் முன்னே -
வந்தனளே !

## கவிக்கருத்து

## சந்தக் கொச்சகம்

148. எத்தமிழ்த் தரமுமன திற்குறித் தறிதலின்
இலக்கணப் புலவரிட ரைத்தவிர்த் துதவிபுரி

உத்தமக் கருணைகிரி முத்தையப் பிரபுவின்மலை
யோகச்சிங் கியொருரதி போல்மெத்த
வற்புதமுற
வடுத்தவப் பொழுதவளை மெச்சிமுற் பலகுதி
குதித்த டிக்கடி சரச
முத்தமிட்டு இருமுலை திளைத்திடப் பதறிவளர்
மோகச் சிங்கன் மொழிகுவேனே !

## தரு

**இராகம் - பியாகு** **தாளம் - ரூபகம்**

149. இங்கே வாடி தங்கமே - என்
ஏக போகப் பொங்கமே !

கொங்கு மணமிலங்கு கமலக்
கோதை வாழ்வு கூரவே
தங்கு கருணைகிரி முத்தைய
சாமி நாட்டிற் சேரவே - இங்கே

பாதைகளி லிப்போது நடந்து
பாத மேனி நொந்ததோ ?
பேத மதுனை கொள்ளாத தமியேன்
பேரில் அன்பு வந்ததோ ? இங்கே

பேணுநின் பெருமையுனக்குப்

பின்னும் பின்னும் சொல்லவோ ?

வேணுமடி மைநான்கை

தவறவிடுவ தீன மல்லவோ ? - இங்கே

இன்னங் கபடவன்ம மேதுக்

கீதநேக பாபமே !

தன்னந் தனிவைத் தென்னைப் பிரிந்த

தன்மை யென்ன கோபமே ? - இங்கே

## தரு

தாளம் - ஆதி

150.தொட்டுநான் முத்தமிட்டுக் கொள்கிறேன் -

வேறே

சூதில்லை வாதங்கமே !

கட்டுக் கடங்காத துட்டர்களை - வேல்முனைக்

கருணைகிரி முத்தைய துருவநன்

னாட்டிலுனை - தொட்டு

ஆலினடி வாழை மேலாடு நாகப்படத்தை

தனதுச்சி மணியை அமுதிருக்கு மிடத்தை

வாலிபர் மனம்நீங்கா மார்பைக் குன்றி வடத்தை
மகிழ்விற்கை வைக்கவைக்க வளருந்தனக்
குடத்தை - தொட்டு

## கொச்சகம்

151. கற்றமைந்த கல்விக் கருணைகிரி முத்தைவேள்
உற்றனந்த வேந்தர்தொடி ஓங்குகட வூர்நாட்டில்
குற்றமின்றி முத்தமிட்டுக் கொள்ளுகிறேன்
மெள்ளவுனை
மற்றதொன்றுஞ் செய்யவில்லை வாராயென்
கண்மணியே !

## குறத்தி இஷ்ட தெய்வத்தைத் துதித்தல்

### தரு

### கண்ணிகள்

**இராகம் - செஞ்சுருட்டி** **தாளம் - ஏகம்**

152. சகல தராதரமும் நொடிதனி லறியும் கனவான்
சத்ரு சனவிஜயன் மித்ரு ஜனபரி பாலனவன்

முகதள கோகனக ஜெகன்மோக சொரூபன்
முகிலனைய கருணைகிரி முத்தையப்
பிரதாபன்

செங்கோன்மை வளருங் கடவூர்ச் செல்வ
விநாயகனே
திகழ்கோட்டை வாசலுறை திவ்ய கெஜமுகனே
மங்கள நெடியதெற்கு வாசல் விக்னேஸ்வரனே
மந்தைக்குளப் பெருச்சாளி வாகன ...

செய்தீர் நந்தன வனத்திற்சித்திக் கணபதியே
ஸ்ரீகருணைகிரி முகுந்தற் செந்தாமரை நிதியே
கயிலாச நாத மனோகர தேவதேவ
கருணா கடாட்சவல்லி காரண மாதாவே !

உருகு கயிலாசநாத மனோகர தேவதேவே
அன்பர் தமக்கு முன்னின்றுதவு முருகோனே
உரிய தெய்வகுஞ்சரியே உசித வள்ளிமணாளா
அருமைநந்தி வரதாரன் அருள்வீர பத்ரா

ஆதி வயிரவதேவா அரிகர சுபுத்ரா

கருவ உக்ரபகவதி ...

அச்சிட்டோர் : ✆ : 854 56 70

இராயப்பேட்டை எழுதுப்பொருட்கள் அச்சு மற்றும்
தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட், சென்னை 14.

## அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னைப் பல்கலைக்கழகம் வளாகம்,
சென்னை – 5.

### வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| நீதிக் கதைகள் | - | 30.00 |
| மடல் திரட்டு | - | 43.00 |
| கருப்பர் குளுவ நாடகம் | - | 43.00 |
| நலங்கு மெட்டு இராமாயணம் | - | 306.00 |
| தமிழக ஊர் வரலாறுகள் | - | 40.00 |
| இடங்கைவலங்கையர் வரலாறு | - | 40.00 |
| தமிழ் அகராதி | - | 50.00 |
| வைத்திய அகராதி | - | 34.00 |
| பழனியாண்டவர் சிந்து பாமாலை | - | 40.00 |
| சுந்தரமூர்த்தி நாயனார் யட்சகானம் | - | 60.00 |
| யயாதி விலாசம் | - | 104.00 |
| நாவாய் சாத்திரம் | - | 51.00 |
| இராகதாளப் பிரத்தாரம் | - | 68.00 |
| பிரத்யும்ன சரிதம் | - | 94.00 |

*25% தள்ளுபடி வழங்கப்படும்*

*Printed by :*

**Royapettah Stationery and Printing and Allied Products Producers Industrial Co-op. Society Ltd.,**
**26, Koya Arunagiri First Street, Royapettah, Chennai - 14.**